பக்கங்கள்:26 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 08 ஞாயிற்றுக்கிழமை 20.02.2022 கதிர் 107

### இது ரகசியம் அல்ல!

முன்னாள் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி மிகக் குறுகிய காலத்தில் அரசியல் கட்சியாகத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டமையில் மோசடி இடம் பெற்றிருக்கின்றது ☞2

# 'மொட்டு' அரசுக்குள் மேலும் நெருக்கடி; அதிரடிக்குத் தயாராகின்றனர் 15 பேர்

கொழும்பு, பெப். 20

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 15 பேர் சுயாதீனமாகச் செயற்படும் முடிவுவை எடுக்கத் தயாராகி வருகின்றனர் என்று சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தியடைந்துள்ள இவர்கள், எதிர்காலத்தில் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் சம்பந்தமாக அவ்வப்போது சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அரசுக்கு எதிராகச் செயற்படுவதைத் தவிர தற்போதைய நிலைமையில் மாற்று வழியில்லை எனக் கலந்துரையாடிள்ள இவர்கள், அரசு தொடர்பாக வாக்காளர்களிடம் இருந்து கிடைக்கும் அழுத்தங்கள் காரணமாக ஏதாவது ஒரு முடிவை எடுக்க வேண்டும் எனவும் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, டொலர் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, விவசாயிகளின் பிரச்சினைகள், அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு போன்ற கார ணங்களால், மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு அலை உருவாகியுள்ளது.

# தற்போதைய ஆட்சியாளர்களுக்கு கஷ்டத்தைக் கொடுக்கமாட்டோம்!

## மக்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டால் தட்டிக் கேட்போம் என்கிறார் மைத்திரி



(வவுனியா நிருபர்)

நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற கட்சியாக இருக்கின்றோம். தற்போது உள்ள ஆட்சியாளர்களுக்கு எந்தக் கஷ்டத்தையும் கொடுக்க மாட்டோம். நாங்கள் மக்களது பிரச்சினையைக் கதைப்போம். மக்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டால் அதனைப் பேச முன்னிற்போம்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ☞2

## கொழும்பு மேயர் தலைமையிலான உறுப்பினர்கள் யாழுக்கு விஜயம்!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனநாயக்க மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் பொது சன நூலகத்தை நேற்று நேரில் பார்வையிட்டு ஒரு தொகுதி புத்தகங்களையும் நூலகத்துக்குக் கையளித்துள்ளனர். ☞2



## தொற்று எண்ணிக்கையும் மரண வீதமும் அதிகரிப்பு

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனச் சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைப் ☞2



## பிரபாகரன் சரண் அடைந்து இறந்தமை அமைச்சர் டக்ளஸுக்குக் கவலையாம்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.20

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் சரண்டை ந்தார் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பில் நேற்றைய தினம் ☞2



## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் கூட்டம்

இலங்கைத்தமிழ்ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் கொழும்பு தமிழ்ச் சங்கத்திலுள்ள மாலதி ☞2

## 6 இந்திய மீனவர்கள் கைது; யாழ்.சிறையில் அடைப்பு!

### மார்ச் 4 வரை விளக்கமறியல்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களையும் மார்ச் மாதம் 4ஆம் திகதிவரை சிறையில் அடைக்க ஊர்காவற்றுறை ☞2

## திருநெல்வேலியில் கைக்குண்டு மீட்பு!

யாழ்., திருநெல்வேலி, கேணியடிப் பகுதியில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

திருநெல்வேலி, கேணியடிப் பகுதியிலுள்ள காணியொனறில் வீட்டுக்கான அத்திவாரம் வெட்டமுற்பட்டபோது குறித்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
எனத் தெரிவித்து வெடித்துள்ள சர்ச்சை, பெரும் குழப்பமாக மாறுவதற்கான ஏது நிலைகள் தென்படுகின்றன. இந்த விவகாரம் நீதிமன்றுக்கு விரைவில் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

2018 செப்டம்பர் வரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் வடக்கு முதலமைச்சராகப் பதவி வகித்தவர் சி.வீ. விக்னேஸ்வரன். ஆனால் மூன்று ஆண்டுகளுக்குள், 2021 கடைசியில் அவரது அமைப்பு ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 2022 ஜனவரி முதல் வாரத்தில் அது பற்றிய அறிவிப்பும் வெளியாகி விட்டது.

ஒரு கட்சி குறைந்தது நான்கு ஆண்டுகளாயினும் முழு அளவில் அரசியல் கட்சியாக இயங்கி இருந்தால் மட்டுமே அதற்கு தேர்தல் ஆணையம் அரசியல் கட்சி அங்கீகாரம் வழங்க முடியும் என்பது விதி. அதுவல்ல இப்போது சர்ச்சையைக் கிளப்பும் விடயம்.

ஒரு கட்சி தனது கட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கு தேர்தல் ஆணையத்திடம் விண்ணப்பித்தால், தேர்தல் ஆணையம் அதை பரிசீலித்து, அதை நிராகரிக்கும் பட்சத்தில், அடுத்த வருடம் அந்த கட்சி மீண்டும் பதிவுக்கு விண்ணப்பிக்க முடியாது. அதற்கு அடுத்த வருடம்தான் விண்ணப்பிக்க முடியும். இதுதான் தேர்தல் சட்டம் கூறும் ஒழுங்குமுறை.

ஆனால் 2020ஆம் ஆண்டு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் விண்ணப்பம், 2021 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றது. இதில் மோசடி நடந்து இருக்கின்றதா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கேள்வியை எழுப்பி இருப்பவர் சாதாரண நபர் அல்லர். இந்த விடயத்துடன் நேரடியாகத் தொடர்புடைய உயர் பிரமுகர் ஒருவர். 2020 இறுதி வரை தேர்தல்கள் ஆணையாளராக இருந்த பேராசிரியர் ரட்ணஜீவன் கூல்தான் அவர்.

விக்னேஸ்வரனின் கட்சி, அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதான அறிவிப்பு இவ்வருட முற்பகுதியில் வெளியானபோது, வெளிநாடு சென்றிருந்த கூல், இப்போது நாடு திரும்பி விட்டார். வந்ததும் வாராததுமாக அவர் இந்த விடயத்தைக் கையில் எடுத்திருக்கிறார்.

முதலில் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரியவை அவர் தொடர்பு கொண்டிருக்கிறார்.

"நாங்கள் தேர்தல்கள் ஆணையாளர்களாக இருந்து விசாரித்து, போதிய காலம் பூர்த்தியாகவில்லை என்று தெரிவித்து, 2020இல் நிராகரித்த ஒரு கட்சியின் விண்ணப்பம் 2021 இல் அங்கீகரிக்கப்பட்டு இருப்பதாக அறிவித்தல் வந்துள்ளதே. அப்படியானால் 2020 இல் அந்தக் கட்சி சமர்ப்பித்த விண்ணப்பம், நாங்கள் நடத்திய விசாரணைகள் தொடர்பான கூட்டம், அது பற்றிய பதிவுகள், எங்கள் தீர்மானம் பற்றிய முடிவுகள் போன்றவை சம்பந்தமான எல்லா ஆவணங்களும் தேர்தல் ஆணையத்தில் மோசடியாக மறைக்கப்பட்டுள்ளனவா?" – என்று மஹிந்த தேசப்பிரியவிடம் அவர் கேள்வி எழுப்பினார்.

"நிச்சயமாக அந்தக் கட்சியின் விண்ணப்பம் விசாரிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். ஆனால் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழு எவ்வாறு இந்த விண்ணப்பத்தை ஏற்று அங்கீகரித்தது என்பது எனக்கு தெரியவில்லை" – என்று கைவிரித்து இருக்கின்றார் மஹிந்த தேசப்பிரிய.

இதுகுறித்து முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் பேராசிரியர் கூல் கூறியவை வருமாறு:-

"2020ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கில் இருந்து மட்டுமல்ல, நாடு முழுவதும் பல கட்சிகள் விண்ணப்பித்தன. சி.வீ.விக்னேஸ்வரனின் கட்சியின் பதிவு எதற்காக நிராகரிக்கப்பட்டதோ அதே காரணத்திற்காகவே பொ.ஐங்கரநேசன், இராமநாதன் (அங்கஜன் இராமநாதனின் தந்தையார்) போன்றவர்களின் கட்சிகளின் பதிவுகளும் நிராகரிக்கப்பட்டன. இந்த நிலையில் ஒரு கட்சிக்கு மட்டும் சலுகை செய்தால் அது – 2020ஆம் ஆண்டு – அதாவது நாம் பதவியில் இருந்தபோது – விக்னேஸ்வரனின் கட்சி பதிவிற்கு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டது என்ற உண்மையை நாம் மறைத்தோம் என்று அர்த்தப்படும் எனபதனாலேயே இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறேன்" – என்றார்.

இந்த விடயம் தொடர்பில் தற்போதைய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரைத் தொடர்புகொண்டு கேட்டபோது –

"சி.வீ.விக்னேஸ்வரன் 2020ஆம் ஆண்டு கட்சிப் பதிவுக்கு விண்ணப்பித்தமைக்கான எந்த ஒரு பதிவோ ஆவணமோ ஆணைக்குழுவில் இல்லை. அதன் அடிப்படையில் 2021ஆம் ஆண்டு விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது." – என்றார்.

இதில் இன்னொரு வேடிக்கையும் உண்டு. தற்போதைய ஆணைக்குழுவில் எந்த உறுப்பினரோடு நாம் தொடர்பு கொண்டு இது குறித்து விசாரித்தோமோ, அதே ஆணைக்குழு உறுப்பினருடன், விக்னேஸ்வரனின் கூட்டில் இருக்கும் ஒரு கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தொடர்பு கொண்டு, இப்படி பழைய ஆவணங்களை நீங் கள் மறைத்து ஒரு கட்சிக்கு மட்டும் பின் கதவால் அங்கீகாரம் கொடுத்திருப்பது தவறல்லவா என்று விசனம் தெரிவித்திருக்கின்றார் என்பது தான் அது.

அரசியல் என்றால் இப்படி 'ஸேம் ஸைட் கோல்' அடிப்பதும் கூட ஒரு தந்திரம்தான் போலும்...!

– மின்னல் –

## தமிழ் ஊடகவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவர் ஆர். சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்குத் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் இதன்போது இடம்பெறவுள்ளது.

## திருநெல்வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து விசேட அதிரடிப் படையின் உதவியுடன் இந்த குண்டு மீட்கப்பட்டது.

மேலும், குறித்த கிடங்கை வெட்டும் போது ஏதேனும் வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மானிப்பாய் பிப்பிலியில் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க புதிய கட்டடத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பலருக்கு சயனைட் குப்பிகளை வழங்கிய பிரபாகரன் தான் சரண் அடைந்து இறந்தமை எனக்கு கவலை அளிக்கின்றது.–என்றார்.

## 6 இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் இரவு காரைநகர் – கோவளம் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இந்தியாவைச் சேர்ந்த ஒரு படகையும் அதில் இருந்த 6 மீனவர்களையும் கைது செதனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிவான் கஜநிதிபாலன் மார்ச் மாதம் 4ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதையடுத்து மீனவர்கள் 6 பேரும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## தொற்று எண்ணிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது எனவும், அந்த எண்ணிக்கை தற்போது 12 வீதமாகக் காணப்படுகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அன்றாடம் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது எனவும் குறிப்பிட்டுள்ள அவர், அந்த எண்ணிக்கை 17 வீதமாக அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

நாள்தோறும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மரணிப்போரின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது எனவும், அவர்களில் 60 வீதமானோர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளத் தடுப்பூசிகளை முறையாகப் பெற்றுக்கொள்வதில் மக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களுக்கு நியாயமான தீர்வு; அரசை அழுத்த வேண்டும் மோடி

## இந்தியத் தூதுவரிடம் சம்பந்தன் வலியுறுத்து

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கைக்கான தமது விஜயத்தின்போது தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

–இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவிடம் நேரில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

அதேவேளை, தமிழர்கள் இங்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமரிடம் பல விடயங்களை நேரில் பேசத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆவலாக உள்ளது எனவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

## தற்போதைய ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியின் வன்னி மாவட்ட மாநாடு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி மாவட்டத்துடன் நான் சம்பந்த முள்ளவானாக இருக்கின்றேன். இதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. நான் ஜனாதிபதியாக முன் பல அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்தேன். சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம் எனப் பல பொறுப்புக்களில் இருந்தேன். அதன் போது வன்னிப் பிரதேசத்துக்கு வந்து பல சேவைகளைச் செய்துள்ளேன். 2015 ஆம் ஆண்டு என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய அதிக வாக்குகளை நீங்கள் வழங்கினீர்கள். நான் ஜனாதிபதியாக இருந்தபோதும் பல சந்தர்ப்பங்களில் வன்னிக்கு வந்தேன்.

ஜனாதிபதியாக இருந்தபோது இந்த மாவட்டத்தில் பல அபிவிருத்திகளைச் செய்துள்ளேன். வடக்கு, கிழக்குக்கு என ஒரு அமைப்பை நான் நிறுவினேன். யுத்தம் நடந்த பகுதிகளில் அபிவிருத்திகளைத் துரிதப்படுத்துவதற்கு அந்த அமைப்பை நிறுவினேன். என்னால் பல அபிவிருத்திகளைச் செய்ய முடிந்தது. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் என்ற வேறுபாடு என்னிடம் இல்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற எந்த வேறுபாடும் இல்லை. அனைவரையும் இந்த நாட்டு மக்கள் என்றுதான் பார்க்கின்றேன். எனது நெஞ்சிலே இருந்து சொல்கின்றேன். நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கின்றேன்.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பித்து வைத்தேன். சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஜனாதிபதி நிதியம் மூலம் நிதி வழங்கினேன். சீனாவில் இருந்து அதற்கு உதவிகளைப் பெற்று பொலனறுவையில் சிறுநீரக வைத்தியசாலையை நிறுவினேன்.

எனது ஆட்சிக்காலம் ஏழை மக்களுக்குச் சுபீட்சமுள்ள ஒரு காலமாக இருந்தது. அன்றாட தேவைக்களுக்கான பொருள்களின் விலை அதிகரிக்க வில்லை. விவசாயத்துக்குத் தேவையான பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருக்க வில்லை. வவுனியா போன்றே மற்றைய பிரதேசங்களிலும் விவசாயம் செய்யக் கூடிய மக்கள் இருக்கின்றார்கள். விவசாயிகளுக்காகப் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். உங்களிடத்தில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. விலைவாசி அதிகரிப்பு பிரச்சினை இருக்கின்றது. மின்சாரத் தடை ஏற்படுகின்றது. பெற்றோலுக்கு நீண்ட வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. இப்படிப் பல பிரச்சினைகள் உள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வளர்த்து மக்களுக்குச் சிறந்த ஆட்சியை ஏற்படுத்த மாவட்டம் மாவட்டமாகச் செல்கின்றோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துங்கள். உங்களுடன் சகோதரமாக வேலை செய்ய இன்னும் பல சகோதரக் கட்சிகளை இணைத்துக்கொண்டு உங்களிடத்தில் வர இருக்கின்றோம். வருகின்ற தேர்தலுக்காக இவ்வாறு செயற்படுகின்றோம்.

நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற கட்சியாக இருக்கின்றோம். தற்போது உள்ள ஆட்சியாளர்களுக்கு எந்தக் கஷ்டத்தையும் கொடுக்கமாட்டோம். நாங்கள் மக்களது பிரச்சினையைக் கதைப்போம். மக்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டால் அதனைப் பேச முன்னிற்போம். நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் இதையே பேசுகின்றோம்.

எமது கட்சியின் அங்கத்தர்வாகள் ஒன்றுசேர்ந்து ஒரு தீர்மானத்தை எடுத்து ஆட்சியாளர்களுக்குக் கொடுத்துள்ளோம். இந்த அரசின் நல்ல விடயங்களுக்கு மாத்திரம் ஆதரவு கொடுக்கின்றோம். மக்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டால் அதனைத் தட்டிக் கேட்கப் பின்னிற்கமாட்டோம்.

உங்களுக்கு உள்ள சகல பிரச்சினைகளையும் தீர்க்க எமது கட்சியுடன் இணையுங்கள். இந்த மக்கள் சந்தோமாக இல்லை. அவர்கள் சந்தோஷமாக இருந்தால்தான் கட்சி, அரசு என்ற வகையில் நாங்கள் சந்தோஷமடைய முடியும். மக்களுடன் பேசும்போது அவர்கள் பல கவலைகளைக் கூறுகின்றார்கள். நாட்டில் இறையாண்மை பிரச்சினையாக இருக்கின்றது. கஷ்டம் அதிகரித்துள்ளது. வேலைவாய்ப்புப் பிரச்சினை உள்ளது. வேலை இல்லாமையால் பலர் நாட்டை விட்டு வெளிநாடு செல்கின்றார்கள். நாட்டை அபிவிருத்தி செய்து இந்த நாட்டில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே எமது ஆசை – என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, துமிந்த சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (100)

## கொழும்பு மேயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு வருகை தந்த கொழும்பு மாநகர மேயர் அடங்கிய குழுவினரை யாழ்ப்பாணம் மாநகர பிரதி மேயர் துரைசாசா ஈசன், மாநகர சபை ஆணையாளர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகள் கோரப்படுகின்றன.
1.சாரதி (Heavy Vehicle)
2.அலுவலக சுத்திகரிப்பாளர்.
**தொடர்பு எண் - 0777113333**
**தொடர்பு விலாசம் -**
**இலக்கம் 218, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**

# புதியவகை வைரஸ் காய்ச்சல் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

நாட்டில் புதிய வகை வைரஸ் காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் மற்றும் டெங்கு அல்லாத வேறும் புதிய வகை வைரஸ் காய்ச்சல் சமூகத்தில் பரவி வருவதாக சுகாதார மேம்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் படுவன்துடுவாவ தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் ஏற்பட்டால் 1390 மற்றும் 247 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. பெரியவர்கள் மத்தியிலும் சிறுவர்கள் மத்தியிலும் இந்த வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அனைவரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு கோரியுள்ளார். இருமல், உடல் வலி மற்றும் சளி போன்ற நோய் அறிகுறிகள் தென்பட்டால் 1390/247 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளாது வீட்டிலேயே இருந்தால் நோய் தீவிரமடைந்து மரணம் கூட நேரிடும் அபாயம் காணப்படுவதாக டாக்டர் படுவான்துடுவாவ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# வெளிநாடுகளின் தூதுவர்களிடம் கைவினைப் பொருள்கள் வழங்கல்



வெளிநாடுகளுக்கிடையில் இலங்கை வர்த்தக நாமத்துடன் பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் வடிவமைப்புக்களை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களிடம் கைவினைப் பொருள்களை வழங்கும் நிகழ்வு பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது இலங்கையிலுள்ள 63 வெளிநாட்டு தூதுவர்கள் மெய்நிகர் ஊடாக கலந்து கொண்டதோடு , இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால், வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு நினைவுப் பொதியொன்றையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜானக தர்ம கீர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விழுதின் ஏற்பாட்டில் பெண் குடும்பத் தலைவர்களுக்கான மாறிச்செல்லும் வரைவிலக்கணங்கம் உருவாக்கல் நிகழ்வு



எங்களுக்கான பாதையை உருவாக்குதல், பெண்கள் குடும்பத் தலைவர்களுக்கான மாறிச் செல்லும் வரைவிலக்கணங்களை உருவாக்குதல் என்னும் தொனிப்பொருளில் விழுது ஆற்றல் மேம்பாட்டுமையம் அமைப்பின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற ஆய்வின் வெளியீட்டு நிகழ்வு யாழில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

விழுது அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மைத்திரேயி இராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவர் சுரேந்திரகுமார், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி சுதாகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் இந் நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் அதிகாரிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டகளைச் சேர்ந்த அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
யாழ்.நகரில் தனி வகுப்புக்கள்
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்.
G.C.E. O/L English Literature
077 766 8725
யாழ்நகர்.

காணி விற்பனைக்கு
அச்சுவேலி - பருத்தித்துறை வீதியில் 250m தூரத்தில் (அச்சுவேலி பொது வைத்தியசாலை அருகில்) 4½ பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 322 3229

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
கனடா & நோர்வே - Rs.1650
சுவிஸ் - Rs.1550
075 330 5500,070 330 5500
076 122 1566
POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
ஆகாஸ் நகைமாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
076 825 7716 - (ஆகாஸ்)

BRRENS Fashion Planet
Reborn
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும், பிரத்யேகமான திருமணம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.
பிறென்ஸ் பஷன் பிளானட்
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
சிவன்கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com
075 527 9110
077 332 1937
021 2221 2777

Northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சரியும் மக்கள் செல்வாக்கு

**இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அரசியல் பலத்தோடு அதிகாரத்துக்கு ஏறியவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் வாக்குகளுடன் பெருவெற்றி. தனித்து பௌத்த – சிங்கள வாக்குகளுடன் வெற்றியீட்டலாம் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்திய வாகை சூடல் அது.**

**தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அபரிமிதமான வெற்றி. 1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய தற்போதைய அரசமைப்புத் திட்டத்தின் கீழ் – விகிதாசாரத் தேர்தல் முறையில் – ஒரு தலைமையிலான கூட்டணி தனித்து மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களுடன் வெல்ல முடியும் என்பதை நிரூபிக்கும் வெற்றி அது.**

**இந்த இரண்டு வெற்றிகளுடன் வலுவான அரசியல் பலத்தோடு அதிகாரத்தைப் பிடித்தவர் கோட்டாபய.**

**ஆனால் அபரிமிதமான செல்வாக்கை – மக்கள் ஆதரவை – குறுகிய காலத்தில் இழந்து, மோசமான தலைவரும் தாமே என்பதை அவர் நிரூபிக்கும் நிலைமை ஏற்பட்டமைதான் அவர் அரசியலின் துரதிஷ்டம்.**

**ஒரேயடியாக ஏகபோகமாக கிடைத்த இத்தகைய பாரிய மக்கள் செல்வாக்கை மிகக்குறுகிய காலத்தில் போட்டுடைத்த தலைவரும் தாமே என்ற பெருமையையும் அவர் ஈட்டியுள்ளார்.**

**அதிஷ்டவசமாக அடுத்த நாடாளுமன்றத் தேர்தல்களுக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் இரண்டு வருடங்களுக்கு மேல் காலம் இருக்கின்றது.**

**உடனடியாக தேசிய மட்டத்தில் நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்களையும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலத்தை ஓராண்டுக்கு நீடித்தமை மூலம் தள்ளிப் போட்டாயிற்று. மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு உரிய சட்டம் இல்லை என்று நொண்டிச் சாட்டுக் கூறி அதனையும் நிரந்தரமாக தள்ளி வைத்தாயிற்று.**

**தேர்தல் ஒன்றை உடனடியாச் சந்திக்கும் வாய்ப்புக்களைத் தவிர்த்து விட்டமையால் தன்னுடையதும், தன்னுடைய அரசினதும், ஆட்சித் தரப்பினதும் செல்வாக்கு சரிந்து போயிருப்பதை தேர்தல் மூலம் உரசிப் பார்க்கும் வாயிலை – வாய்ப்பை – அடைத்தாயிற்று என்ற திருப்தி ஆட்சித் தலைவருக்கு.**

**மக்களின் கருத்தியலை வெளிப்படுத்துவதற்கான ஊடகமான தேர்தலை இந்த ஆட்சித் தலைவர் மறித்துவிட்டாலும் கூட, சுயாதீனக் கருத்துக் கணிப்புகள் அவரது அதிகார பீடத்தின் செல்வாக்குப் பற்றிய தரவுகளை – தகவல்களை – மக்கள் நிலைப்பாடுகளை – அம்பலப்படுத்தாமல் இல்லை.**

**தற்போது நாடு எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை மிக மோசமான பொருளாதார நெருக்கடி என நாட்டில் 56.8 வீதமானோர் கருதுகின்றனர்.**

**ராஜபக்ஷக்களின் ஆட்சி நிர்வாகத்தில் மக்களின் வருமான மட்டம் மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது என 75.2 வீத மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

**நாட்டை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக ராஜபக்ஷ அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகள் நம்பத்தகுந்தன அல்ல என்று நாட்டு மக்களில் 64.1 வீதத்தினர் கருதுகின்றனர்.**

**கொள்கைகள் தொடர்பான கற்கை கேந்திர நிலையம் சேகரித்த மக்கள் கருத்துக் கணிப்பு இந்த ஆட்சிப் பீடத்தின் செல்வாக்கு மிக மோசமாக இறங்கிவிட்டது என்பதை உணர்த்தும் குறியீடு. ஆட்சித் தலைமைக்கு இது புரிந்தால் சரி.!**

# கொடுப்பதில் குறை காண்பதே சில அரசியல்வாதிகளின் தொழில்!

## எம்.ரமேஷ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு



அரசாங்கம் இன்று சுயதொழில் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பல்வேறு உதவிகள் செய்துவருகிறது. அதற்காகக் கடந்த காலங்களில் பாற்பண்ணையாளர்களுக்கு பல்வேறு உதவிகள் செய்து கொடுக்கப்பட்டன.

ஆனால் கொடுப்பதில் குறை காண்பதையே ஒரு சில அரசியல் வாதிகள் தொழிலாகக் கொண்டுள்ளனர் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளருமான எம்.ரமேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

மாடு கொடுத்தால் அதனை மாட்டுத் தொழில் தானே என்கின்றனர், ஆடு கொடுத்தால் அது ஆட்டுத்தொழில் தானே என்கின்றனர். கோழி கொடுத்தால் கோழித்தொழில் என அதனை உதாசீனம் செய்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொகவந்தலா, மஸ்கெலியா, அக்கரபத்தனை உள்ளிட்ட பிரதேசங்களில் பால் உற்பத்தியில் ஈடுபடும் பாற்பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக புல்தரிக்கும் இயந்திரம், பால் கறக்கும் இயந்திரம், குளிரூட்டிகள் சீலர், தள்ளுவண்டி, மண்வெட்டி, உள்ளிட்ட சுமார் 20 லட்சம் பெறுமதியான உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு மத்திய மாகாண மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் பொகவந்தலா தோட்ட விளையாட்டு கழக மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

'மாடு வளர்ப்பு என்பது கௌரவம் குறைந்த தொழில் அல்ல. இன்று மாடு வளர்ப்பின் மூலம் ஒரு சிலர் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். அவ்வாறானவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசாங்கம் இவ்வாறான உதவிகளைச் செய்து வருகிறது. அதனை உரிய முறையில் பயன்படுத்தி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு சிலர் அரசாங்கம் கொடுக்கும் உதவிகளைப் பெற்றாலும் கூட அதனை உரிய முறையில் பயன்படுத்துவதில்லை. ஏனோதானோ என்று பயன்படுத்துகின்றனர். இதனால் அவர்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதுமில்லை.

இன்று நல்ல வசதி படைத்தவர்கள் கூட இந்த மாடு வளர்ப்பு தொழிலைச் செய்கிறார்கள். ஆரம்பக் காலங்களில் தோட்டத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மாடு இருந்தது. ஆனால் இன்று அந்த நிலையில்லை. ஒரு சிலர் வீடுகளில் இரண்டு மூன்று மாடுகளும் காணப்பட்டன.

அரசாங்கம் இப்படி மாடு வளர்ப்பில் ஈடுபடுபவர்களை ஊக்குவித்து பால்மா கொள்வனவைக் குறைக்க வேண்டும் என்று எண்ணியே இவ்வாறான திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. ஆகவே, இதனை உரிய முறையில் பயன்படுத்தி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

அரசாங்கம் இன்று ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளுக்கும் ஆளும் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகப் பல லட்சக்கணக்கான ரூபாக்களை பெற்றுக்கொடுத்துள்ளது. அதில் முக்கியமாக சுய தொழிலை ஊக்குவிப்பதற்காக 40 சதவீதத்தை ஒதுக்க வேண்டும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனால் அதனைப் பெற்றுக்கொண்டு ஒரு சிலர் குறை கூறுகின்றனர். நான் மத்திய மாகாணத்தில் அமைச்சராக இருந்த போது ஆஸ்திரேலியாவிலிருந்து 4 ஆயிரம் பசு மாடுகள் கொண்டு வரப்பட்டன. அப்போது அதற்கு பொறுப்பான அமைச்சருடன் பேசி மத்திய மாகாணத்துக்கு மாத்திரம் 2 ஆயிரத்து 900 பசுமாடுகளைப் பெற்றுக்கொடுத்தேன் என்று கூறினார்.

இந்நிகழ்வில் நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கே.கே.ரவி,மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் குமுதினி ராஜநாயக்க, கால்நடை வைத்தியர்களான பி.எம்.விக்கிரமநாயக்க, ஜே,தவராஜா, சுரேஷ்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ரோஸி சேனாநாயக்க தலைமையிலான குழுவினர் யாழ். மாநகரசபை விஜயம்!



கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க மற்றும் அவரது குழுவினர் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் வெள்ளி, சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு இடங்களுக்குச் சென்றனர். அந்தவகையில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்த கொழும்பு மேயரது 75 பேர்கொண்ட குழுவினர், வெள்ளிக்கிழமை 12 மணியளவில் யாழ். மாநகர சபைக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் சபைக்கு வருகை தராத நிலையில் பிரதி மேயர் துரைராஜா ஈசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கொழும்பு பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால் மற்றும் யாழ். பிரதி மேயர் துரைராஜா ஈசன் நினைவுச் சின்னங்களை பரிமாறிக்கொண்டனர்.

# மஹவ - ஓமந்தை வரையிலான ரயில் செயற்திட்டம் ஊடாக பாரிய நிதிமோசடி

மஹவ – ஓமந்தை வரையிலான ரயில் அபிவிருத்தி செயற்திட்டம் ஊடாக பாரிய நிதிமோசடி இடம்பெறுகிறது.

இந்தச் செயற்திட்டம் தொடர்பாக மீள்பரிசீலனை செய்யுமாறு போக்குவரத்து துறை அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம்.

சித்திரைப் புத்தாண்டு நிறைவு பெறும் வரை அநுராதபுரம் தொடக்கம் வவுனியா வரையிலான ரயில் பாதையை மூட வேண்டாம் என ரயில் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

மருதானையில் உள்ள ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகள் மற்றும் ரயில் என்ஜின்களை ரயில் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்த தீர்மானம் வரவேற்கத்தக்கது.

மஹவ தொடக்கம் ஓமந்தை வரையிலான ரயில் பாதை அபிவிருத்தி செயற்திட்டத்தில் பாரிய நிதிமோசடி இடம்பெறவுள்ளது. இந்தச் செயற்திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என போக்குவரத்து துறை அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம்.

செட்டிகுளம் தொடக்கம் தலைமன்னார் வரையிலான ரயில் பாதையிலும்,ஓமந்தை தொடக்கம் காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதையிலும் சமிக்ஞை கோளாறு காணப்படுகிறது. தற்போது மஹவ தொடக்கம் ஓமந்தை வரையான பாதை நிர்மாணிப்பிலும் அவ்வாறான தன்மை காணப்படும்.

மஹவ தொடக்கம் ஓமந்தை வரையிலான ரயில் பாதை அபிவிருத்திப் பணிகளால் எதிர்வரும் மாதம் முதலாம் திகதி முதல் அநுராதபுரம் தொடக்கம் வவுனியா வரையிலான ரயில் பாதையை மூட ரயில்வேத் திணைக்களம் தீர்மானித்தது.

சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு தமிழர்கள் தங்களின் சொந்த பிரதேசங்களுக்கு செல்கின்றமையால் எதிர்வரும் முதலாம் திகதி அநுராதபுரம் – வவுனியா வரையான ரயில் பாதையை மூடவேண்டாம் என ரயில்வேத் திணைக்களத்திடம் வலியுறுத்தினோம்.

எமது கோரிக்கைக்கு அமைய எதிர்வரும் மாதம் 5 ஆம் திகதி அநுராதபுரம் – வவுனியா வரையான ரயில் பாதையை தற்காலிகமாக மூடுவதாக திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. சித்திரை புத்தாண்டு நிறைவு பெறும் வரை அநுராதபுரம் – வவுனியா ரயில் பாதையை மூட வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளோம். – என்றார்.

# எரிபொருள் வரியை நீக்குக நிதியமைச்சரிடம் கோரிக்கை!



எரிபொருள் மீதான வரியை நீக்குமாறு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எழுத்துமூலம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளேன் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# புத்தளத்தில் ஓட்டோ ஒன்றின் மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்து



புத்தளம் தபால் நிலைய சுற்றுவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஓட்டோ மீது மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால், குறித்த ஓட்டோ வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த புத்தளம் தலைமையக போக்குவரத்து பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன், ஓட்டோவின் முன்பகுதி முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் புத்தளம் தலைமையக போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்தார் ஷானி அபேசேகர

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தன்னைக் கைது செய்கின்றமையை தடுக்கும் வகையிலான உத்தரவொன்றை வழங்குமாறு கோரியே அவர் இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலை முன்னின்று நடத்திய சஹ்ரான் ஹாசிம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்கத் தவறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் குளியாபிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கையொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, தன்னைக் கைது செய்வதற்கான எந்தவொரு முயற்சியையும் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு ஷானி அபேசேகர தனது அடிப்படை உரிமை மனுவில் கோரியுள்ளார்.





| மணமகள் விவரம் | மணமகன் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 31.12.1991 மதம் - இந்து<br>ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - விசாகம் 2<br>கி.பா - 28 செவ் - 6 இல்<br>தகைமை - G.C.E.A/L தொழில் - அரசசேவை<br>எதிர்பார்ப்பு - தனியார் அரசசேவை மணமகன் | பிறந்த திகதி - 17.12.1992 மதம் - இந்து<br>ஜாதி -K பகுதி நட்சத்திரம் - உத்தரம் 4<br>கி.பா - 20 செவ் - 3 இல் தகைமை - GCE A/L<br>தொழில் - German PR<br>எதிர்பார்ப்பு - German அல்லது இலங்கை மணமகள் |
| பிறந்த திகதி - 25.01.1994 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - திருவாதிரை 2<br>கி.பா - 74 செவ் / சூரி 1 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor இலங்கை, Australiya, Canada | பிறந்த திகதி - 16.09.1982 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மகம் கி.பா - 57<br>செவ் -1 இல் தகைமை - Computer Diploma<br>தொழில் - சொந்த வியாபாரம் UK,PR எதிர்பார்ப்பு -<br>G.C.E. A/L, UK, or இலங்கை. காரைநகர் முன்னுரிமை |
| பிறந்த திகதி - 10.06.1990 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூராடம் 5'2"<br>கி.பா - 29 செவ் 2 இல்<br>தகைமை - Eng. தொழில் - அரசசேவை<br>எதிர்பார்ப்பு - வெளிநாடு, உள்நாடு அரசசேவை மணமகன் | பிறந்த திகதி - 08.06.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - கேட்டை<br>கி.பா - 33 செவ் 9 இல்<br>தகைமை - G.C.E. A/L (Eng.) தொழில் - சொந்த நிறுவனம் எதிர்பார்ப்பு - G.C.E. A/L படித்த மணமகள் |
| பிறந்த திகதி - 03.02.1995 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூரட்டாதி 4<br>கி.பா - 28 செவ் 4 இல்<br>தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - Eng. விரிவுரையாளர் மணமகன் | பிறந்த திகதி - 04.10.1986 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அத்தமம் 2<br>கி.பா - 24 செவ் 2 இல்<br>தகைமை - BBA தொழில் - Bank Manager<br>எதிர்பார்ப்பு - படித்த அரசசேவை மணமகள் |
| பிறந்த திகதி - 02.06.1993 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - விசாகம் 1<br>கி.பா - 69 செவ் 9 இல்<br>தகைமை - Civil Eng. தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - அரசசேவை பட்டதாரி மணமகன் | பிறந்த திகதி - 13.02.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தரம்<br>கி.பா - 73 செவ் 1 இல்<br>தகைமை - Bsc தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள் |
| பிறந்த திகதி - 23.11.1991 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - ரோகினி<br>கி.பா - 21 செவ்/சூரி 10 இல்<br>தகைமை - IT Software தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன் | பிறந்த திகதி - 28.01.1991 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை<br>கி.பா - 31 செவ் 1 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor Colombo<br>எதிர்பார்ப்பு - Doctor, Eng. மணமகள் |
| பிறந்த திகதி - 02.11.1991 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - பூரம்<br>கி.பா - 10 செவ் / சூரி 11 இல்<br>தகைமை - MBBS Dental தொழில் - Dental Doctor<br>எதிர்பார்ப்பு - UK,USA, Australiya- Eng., Doctor மணமகன் | பிறந்த திகதி - 16.07.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - பரணி 2<br>கி.பா - 25 செவ் 2 இல்<br>தகைமை - HNDE தொழில் - USA Green Card<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் |
| பிறந்த திகதி - 05.03.1991 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - சுவாதி<br>கி.பா - 18 செவ் 7 இல்<br>தகைமை - Business Management தொழில் - Bank Officer எதிர்பார்ப்பு - அரச உயர் பதவி மணமகன் | பிறந்த திகதி - 09.02.1989 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி<br>கி.பா - 35 செவ் 7 இல்<br>தகைமை - BBA தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் |

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.




U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500


CHELVA
PALACE
10 MAR
2022
மாற்று
மோதிரம்
BRIDAL
FASHION SHOW
JAFFNA 2022
Contact us 076 9759197
Arunthathee
Presents

# மருத்துவக் கதிர்






## தொண்டையில் ஏற்படும் சதை வளர்ச்சியை எவ்வாறு குணப்படுத்தலாம்?

ஒரு குழந்தை பிறந்து 10 தொடக்கம் 15 வயதில் டொன்சில் நோய்த் தொற்றுக்குள்ளாவது பொதுவான விடயமாகும். பிறக்கும் 100 குழந்தைகளில் 60 குழந்தைகள் டொன்சில் நோய்த் தொற்றுக்குள்ளாகின்றனர். டொன்சில் குழந்தைகளிற்கு ஏற்படும் ஒரு நோயல்ல. டொன்சில் என்பது தொண்டையின் பிற்புறத்திலுள்ள இரண்டு நீள் வடிவ திசுக்கள் ஆகும். இவை நிணநீர்த் தொகுதியின் ஒரு பகுதியாகும்.

அதாவது இயற்கையாகவே நாம் சுவாசிக்கும் போது காற்றிலுள்ள தூசுக்கள் மூக்கிலுள்ள முடிகளினால் வடிகட்டப்படுகின்றன. அதே போன்று தொண்டையின் பிற்புறத்திலுள்ள டொன்சிலும் வாய் மற்றும் மூக்கு வழியாகத் தொண்டையினுள் உட்புகும் நோய்க்கிருமி



டாக்டர் ஆஷா லெனின்
தமிழ்நாடு, இந்தியா

களை தடுக்கின்றது. டொன்சில் தொற்றுக்குள்ளானால் நெறிகட்டுகின்றது அதாவது வீங்குகின்றது. நிணநீர்க் கணுக்கள் பொதுவாக மூட்டுக்களின் அருகாமையில் இடுப்பு மற்றும் அக்குள் பகுதிகளில் காணப்படுகின்றன. காலில் காயங்கள் ஏற்படும் போது தொற்று ஏற்படுகையில் இடுப்புப் பகுதியிலுள்ள நிணநீர்க் கணுக்கள் நெறிகட்டுகின்றன.

குழந்தைகளிற்கு டொன்சிலில் நோய்த் தொற்று ஏற்படும் போது பின்வரும் அறிகுறிகள் காணப்படும்

* டொன்சில் வீக்கமடைந்திருக்கும்.
* டொன்சில் சிவந்து காணப்படும்.
* குழந்தைகள் தூங்கும் போது வாயைத் திறந்து தூங்குவார்கள்.
* குழந்தைகள் தூங்கும் போது குறட்டை சத்தம் வரும்.

டொன்சிலில் நோய்த் தொற்று ஏற்படும் போது மூக்குப்பகுதியிலும் தொண்டைப்பகுதியிலும் அடைப்பு ஏற்படுகின்றது. இதனால் வாயினால் தும்மல் ஏற்படுகின்றது. மூக்குப்பகுதியிலும் தொண்டைப்பகுதியிலும் அடைப்பு ஏற்படுவதனால் தூங்கும் போது வாயைதிறந்து தூங்குவதனால் தொண்டைப்பகுதியில் வறட்சி ஏற்பட்டு வறட்டு இருமல் ஏற்படுகின்றது. இதனைத் தொடர்ந்து சளி ரூபவ் காய்ச்சல் என்பன ஏற்படுகின்றன.

இதனை விட அடினோயிட்டுக்கள் அதாவது வாயின் மேற்கூரைக்கு மேல் மூக்கிற்கு பின்னால் அமைந்துள்ள சுரப்பிகளாகும். இவையும் நிணநீர்த் தொகுதியின் ஒரு பகுதியாகும். இவை பற்றீரியா ரூபவ் வைரஸ் ஆகியவற்றிலிருந்து உடலைப் பாதுகாக்க உதவுகிறது. குழந்தைகளிற்கு அடினோயிட்டுக்களில் தொற்று ஏற்படும் போதும் சளி ரூபவ் காய்ச்சல் என்பன ஏற்படுகின்றன.

டொன்சிலில் நோய்த் தொற்று ஏற்படும் போதும் அடினோயிட்டுக்களில் தொற்று ஏற்படும் போதும், வெதுவெதுப்பான நீர் குடிக்க வேண்டும், இவ்வாறு செய்யும் போது தொண்டைப் பகுதி எப்போதும் ஈரலிப்பாக இருப்பதனால் வறட்டு இருமல் வருவது தடுக்கப்படும்.

டொன்சிலில் பொதுவாக நோய்த் தொற்றை ஏற்படுத்தும் கிருமி ஆகும்.

டொன்சிலில் நோய்த் தொற்று ஏற்பட்டால் குருதிப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். ஸ்ட்ரெப்டோகெக்கஸ் பற்றீரியாவால் உருவாக்கப்பட்ட ஸ்ட்ரெப்டோசின் எதிராக உருவாக்கப்பட்ட அன்டிபொடி ஆகும். இதற்கு ஆரம்பக் காலங்க ளில் பெனிசிலின் தடுப்பூசி போடப்பட்டது. பெனிசிலின் தடுப்பூசியானது பற்றீரியாவுக்கு எதிராக செயற்படுகின்றது.

டொன்சிலில் நோய்த் தொற்று ஏற்பட்டால் டொன்சிலை அகற்றக் கூடாது. இவ்வாறு டொன்சிலை அகற்றும் போது அல்லது இரத்தத்தில் கிருமி காணப்படுமாயின் பிற்காலங்களில் மூட்டுக்களில் வலியை ஏற்படுத்தும். இதற்காக வலி நிவாரணி மருந்துகளை உள்ளெடுக்கும் போது வலி குறைய வாய்ப்பு உள்ளதே தவிர இரத்தத்திலுள்ள கிருமி அகற்றப்படாமல் பிற்காலங்களில் இதயத்திற்கு சென்று ருமாட்டிக் காய்ச்சலை ஏற்படுத்துகின்றது. இது ருமாட்டிக் இதய நோய் எனப்படுகின்றது. இதனால் இதய வால்வுகள் நிரந்தரமாக சேதமடையும். இதன் விளைவாக இதயம் சாதாரணமாக செயல்படுவதை கடினமாக்குகின்றது. காலப்போக்கில் இதய செயலிழப்பு ஏற்படுகின்றது.

### மூட்டு வலி

வயதானவர்கள் மற்றும் உடல் எடை கூடியவர்கள் அவர்களது உடல் எடையை தாங்க முடியாத போது எலும்பின் மீது அழுத்தம் ஏற்படும். மேலிருக்கும் எலும்பிற்கும் கீழிருக்கும் எலும்பிற்கும் இடையில் ஒரு இடைவெளி இருக்கும். அவ் இடைவெளியில் சினோவியல் திரவம் காணப்படும். இது கிறீஸ் போன்று தொழிற்பட்டு எலும்புகளிற்கிடையில் உராய்வு ஏற்படாமல் தடுக்கும். சினோவியல் திரவம் அற்றுப்போகும் போது எலும்புகளிற்கிடையில் உராய்வு ஏற்பட்டு மூட்டு வலி ஏற்படுகின்றது. எலும்புகளில் கல்சியம், விற்றமின் – குறைவடைவதனால் ஏற்படும் நோய் நிலைமை ஆகும். இதனால் என்புகளின் ஆரோக்கியமான நிலைக்கு விற்றமின் D, கல்சியம் என்பன மிகவும் முக்கியமானதொன்றாகும். உய ரமான இடங்களிலிருந்து விழுந்தாலோ அல்லது வழுக்கி விழுந்தாலோ குழந்தைகள் விளையாடும் போது விழுந்தாலோ நாம் அதை சாதாரணமாக விட்டு விடாமல் எலும்பியல் வைத்தியரை அணுகி கலந்தாலோசிக்க வேண்டும். சில வேளைகளில் விழும் போது முள்ளந் தண்டின் வால்ப்பகுதி நசிந்துவிடும். பொது வாக உடல் எடை கூடியவர்கள் அதிகமாக பாரங்களை தூக்கி வேலை செய்பவர்களினதும் எலும்புகளைபார்க்கும்போது எலும்புத் தேய்மானத்தைக் காணக்கூடியதாக இருக்கும்.

ஒரு எலும்பிற்கும் இன்னோர் எலும்பிற்கும் இடையிலுள்ள இடைவெளி குறைந்து வட்டு தேய்மானம், வட்டு சரிவு, நரம்புகள் அழுத்தம் கொடுப்பதால் கால்களிற்கு உள்ளே ஏற்படும் வலி சியோரியனுக்கு பின்பு வரும் இடுப்பு வலி ஆகியவற்றை ஆரம்பத்திலேயே கவனிக்க வேண்டும். கழுத்து எலும்புத் தேய்மானம் 2 அல்லது 3 தலையணைகள் வைத்து உறங்குதல் தலையணைகளின் மீது சாய்ந்து தொலைக்காட்சி பார்த்தல், தலையை அடிக்கடி அசைத்து பதில் சொல்லுதல், கையினால் தலையை தாங்கியபடி தூங்குதல் ஆகியவற்றினால் ஏற்படுகின்றது. கையினால் தலையை தாங்கியபடி தூங்கும் போது நரம்புகளில் அழுத்தம் ஏற்பட்டு கை வலி, கை விறைத்துப் போதல் ஏற்படுகின்றது. மூட்டுவலி ஏற்படும் போது வைத்தியரின் பரிந்துரையின்றி வலி நிவாரணி மருந்துகளை எடுத்துக்



கொள்வதனால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படும். இவ் வலி நிவாரணி மருந்துகள் 24 மணித்தியாலத்திற்கு மட்டுமே செயற்படும். இவை மூட்டுத்தேய்மானத்தை ஒரு போதும் சரிசெய்வதில்லை. எலும்புகளிற்கு முடக்கொத்தான் கீரை,பிரண்டை என்பன ஆரோக்கியம் தரும் மூலிகைகளாகும். முடக்கொத்தான் கீரையை சூப் செய்தும் பிரண்டையைத் துவையல் செய்தும் தொடர்ச்சியாக 3 மாத காலம் உணவில் சேர்த்து வர மூட்டு வலி குணமாகும்.

## கருவுற்ற பெண்கள் சாப்பிட வேண்டிய 3 ‘G’ உணவுகள்

Green leaves - கீரை வகைகள்
Green vegetables - பச்சைக் காய்கறிகள்
Grains - முழு தானியங்கள்

முழு தானியங்கள் என்றால் அதிகம் தீட்டுப்படாத கோதுமை மற்றும் அரிசி , கஞ்சி போன்றவை நல்லது. புழுங்கலரிசி உபயோகிப்பது உடல் நலத்துக்கு மிகவும் நல்லது. மல்லிகைப் பூ போன்ற பச்சரிசி சோறு, சத்தில்லாத சக்கைதான். அதிக refine செய்யப்பட்ட ஆட்டா, மைதா போன்றவற்றில் இயற்கையான நார்ச்சத்து இருக்காது.

அதிக காரம், மசாலா பொருள்களைத் தவிர்ப்பது நல்லது. கருவுற்ற தாய் நிறையப் பழங்கள் சாப்பிட வேண்டும். இது மலச்சிக்கலைத் தவிர்க்கும். அன்னாசி, பப்பாளி போன்றவை உடலுக்கு நல்லது.

தினமும் அரை லிற்றர் அளவு பால் குடிப்பது கருவில் உள்ள குழந்தையின் எலும்புகளுக்கு கல்சியத்தை சேர்த்து அவற்றை உறுதிப்படுத்தும். கருவுற்ற முதல் சில மாதங்களுக்கு வாந்தி, மயக்கம் இருக்கலாம். சிலருக்கு அதிகமாக இருக்கும். அச்சமயம் பழ யூஸ், வேகவைத்த காய்கறிகள், கஞ்சி வகைகளை அடிக்கடி சாப்பிடலாம்.

கருவுற்ற தாய்க்கு நாக்கில் ருசி மாறும். அதனால் தான் சாம்பல் ருசிக்கிறது. மனத்துக்குப் பிடித்த உணவுகளை வீட்டிலேயே தயாரித்துச் சாப்பிடலாம். எள் உருண்டை, கடலை உருண்டை, பொட்டுக் கடலை உருண்டை போன்றவற்றில் உள்ள இனிப்பு இரும்புச் சத்தை தரும். கடலை, எள்ளு ஆகியவற்றில் உடலுக்கு மிகவும் தேவையான கொழுப்பு அமிலங்கள் (Essential Fatty Acids) உள்ளன. எள், கருச்சிதைவை ஏற்படுத்தாது.





# எழில் கதிர்



# கறுப்பாக இருக்கும் அக்குள் பகுதியை வெள்ளை ஆக்க சில ஆலோசனைகள்

தற்போது ஸ்லீவ்லெஸ் ஆடைகளை அணிவது நாகரிகமாகிவிட்டது. ஆனால் அனைவராலுமே ஸ்லீவ்லெஸ் ஆடைகளை அணிய முடிவதில்லை. இதற்கு தடையாக இருப்பது அக்குள் கருமை. கறுப்பான அக்குளுடன் ஸ்லீவ்லெஸ் ஆடைகளை அணிந்தால், அது ஸ்லீவ்லெஸ் தோற்றத்தையே பாழாக்கிவிடும். ஆனால் அக்குள் கருமையைப் போக்க பல பொருள்கள் கடைகளில் விற்கப்படுகின்றன. அவை அனைத்தும் நல்ல பலனைத் தருமா என்றால் அது சந்தேகத்திற்குரியது தான்.

இருப்பினும் அக்குளில் உள்ள கருமையை எவ்வித பக்கவிளைவுகளும் இல்லாமல் நீக்க நீங்கள் விரும்பினால், அதற்கு ஒருசில எளிய இயற்கை வழிகள் உள்ளன. அந்த வழிகளைப் பின்பற்றினால், அக்குளில் உள்ள கருமையைப் போக்கலாம். அதன் பின் ஸ்லீவ்லெஸ் அணிய நீங்கள் யோசிக்க வேண்டிய அவசியம் இருக்காது.



### குறிப்பு - 1

**தேவையான பொருள்கள்**

தேங்காய் எண்ணெய் - 3 - 4 தேக்கரண்டி
பற்பசை - 1 தேக்கரண்டி
பேக்கிங் சோடா - 1 தேக்கரண்டி

**பயன்படுத்தும் முறை**

முதலில் ஒரு கிண்ணத்தில் 3 - 4 தேக்கரண்டி தேங்காய் எண்ணெய் எடுத்து, அத்துடன் பற்பசை மற்றும் பேக்கிங் சோடா சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின் அதை அக்குளில் தடவி 10 - 15 நிமிடம் ஊற வைத்து, பின் அக்குளை நீரால் கழுவலாம் அல்லது சுத்தமான ஈரத் துணியால் துடைத்து எடுக்கலாம்.

### குறிப்பு - 2

**தேவையான பொருள்கள்**

கடலை மாவு - 1/4 கப்
அரிசி மா - 1 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
தேன் - 1 தேக்கரண்டி
பால் - 1 1/2 தேக்கரண்டி

**பயன்படுத்தும் முறை**

ஒரு கிண்ணத்தில் கடலை மா, அரிசி மா, மஞ்சள் தூள், தேன் மற்றும் பாலை எடுத்து நன்கு கலந்து கொள்ள வேண்டும். பின்னர் அதை அக்குளில் தடவி 10 - 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். அதன் பின் வெதுவெதுப்பான நீரால் அக்குளைக் கழுவ வேண்டும்.





### குறிப்பு - 3

**தேவையான பொருள்கள்**

மைசூர் பருப்பு (அரைத்து) - சிறிது
எலுமிச்சை - பாதி
பால் - 1/2 கப்

**பயன்படுத்தும் முறை**

ஒரு கிண்ணத்தில் மைசூர் பருப்பு பசையை எடுத்துக் கொள்ள வேண்டும். பின் அதில் பாதி எலுமிச்சையைப் பிழிய வேண்டும். அதன் பின் பாலை சேர்த்து நன்கு கலந்து கொள்ள வேண்டும். பின்பு அதை அக்குள் பகுதியில் தடவி 10 - 15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த அல்லது வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும்.

### குறிப்பு - 4

**தேவையான பொருள்**

கற்றாழை சதை

**பயன்படுத்தும் முறை**

கற்றாழை சதையை அக்குள் பகுதியில் தடவ வேண்டும். 5 - 10 நிமிடம் உலர்த்த வேண்டும். தினமும் கற்றாழை சதையை அக்குளில் தடவி வந்தால், அக்குள் பகுதி மென்மையாகவும் இருக்கும்.



# தலைமுடி மிகவும் வறண்டு இருக்கிறதா?

## இதோ தீர்வு

உடலிலேயே சருமம் தான் மிகப்பெரிய உறுப்பு. இந்த சருமம் ஆரோக்கியமாகவும், அழகாகவும் இருப்பதற்கு எப்படி போதுமான ஈரப்பதம் தேவையோ அதேபோல்தான் தலைமுடிக்கும் ஈரப்பதம் அவசியமான ஒன்று. ஒருவரது தலைமுடியில் போதுமான ஈரப்பதம் இல்லாவிட்டால், முடி வறண்டு உடைய ஆரம்பித்துவிடும். அது தலைமுடிக்கு போதுமான ஈரப்பதம் இருந்தால், முடியில் ஏற்படும் சிக்கல் குறைந்து, தலைமுடி ஆரோக்கியமாகவும் அழகாகவும் இருக்கும்.

தலைமுடிக்கு தேவையான ஈரப்பதமானது எண்ணெய் பூசுவதன் மூலம் பெறப்படுகிறது. பொதுவாக தலைமுடிக்கு நாம் தேங்காய் எண்ணெயை தினமும் பயன்படுத்துவோம். ஆனால் தற்போதைய தலைமுறையினர் தங்களின் தலைக்கு எண்ணெய் பூச விரும்புவதில்லை. சொல்லப்போனால் எண்ணெய் கூட தலைமுடிக்கு நன்மையுடன் தீமையையும் உண்டாக்குகின்றன. எப்படியென்றால் எண்ணெய் தலைமுடியில் ஊடுருவுவதற்கு பதிலாக, மயிர்கால்களில் அடைப்பை உண்டாக்குகின்றன. எனவே தலைமுடியின் வறட்சியைத் தடுக்க எண்ணெய்க்கு பதிலாக, பின்வரும் சில பொருள்களைக் கொண்டு முடிக்கு பராமரிப்பு கொடுத்து வந்தால், முடி



ஆரோக்கியமாக இருப்பதோடு, அழகாகவும், சிக்கலின்றியும் இருக்கும்.

கல்சியம் மற்றும் புரோட்டீன் ஆகிய சத்துக்கள் அதிகம் நிறைந்த தயிரில் விற்றமின் ஏ, பொற்றாசியம் மற்றும் மக்னீசியம் ஆகியன அதிகம் உள்ளன. இவை அனைத்துமே முடியின் ஆரோக்கியத்தை அதிகரிக்கக்கூடியவை. மேலும் தயிர் மற்றும் யோகர்ட் ஆகிய இரண்டும் முடி சொர சொரப்பைக் குறைப்பதோடு, தலைமுடியை ஈரப்பதத்துடனும், மென்மையாகவும் வைத்துக் கொள்கிறது. குறிப்பாக தயிரில் உள்ள அழற்சி எதிர்ப்பு மற்றும் அன்டி - மைக்ரோபியல் பண்புகள், தலையில் உள்ள பொடுகைப் போக்க உதவும் பொருளாக இருக்கும்

அவகோடாவில் பாலிஅன்சாச்சுரேட்டட் மற்றும் மோனோ அன்சாச்சுரேட்டட் கொழுப்பு அமிலங்கள் உள்ளன. இவை ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமன்றி, தலைமுடியின் வறட்சியைப் போக்குவதிலும் சிறந்தது. இந்த அவகோடா அனைத்து வகையான தலைமுடியினருக்கும் நன்மையை வழங்கும். அதற்கு அவகோடோ பழத்தின் சதைப் பகுதியை அரைத்து, அதை தடவி ஊற வைத்து அலசி வந்தால், முடி ஆரோக்கியமாகவும், வறட்சியின்றியும் இருக்கும்.



**குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்**




# தங்கத் தூண்டில்



வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன், சாப்பிட்டுப் பல நாள்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள்! என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு கொடுத்தான்.

இதைப் பார்த்த சுந்தர், அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறி களிடம் இரக்கம் காட்டக் கூடாது! என்று எரிச்சலுடன் சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு வசந்த் உணவு கொடுத்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.

சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்! என்று கத்தினான் சுந்தர். மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன். கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு சென்றான்.

இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்! என்றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.

பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்த்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண்டிலை சுந்தரிடம் கொடுத்தார் அவர். என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்! என்றார்.

தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்த்துக்கு தெரிந்தது.

கோபத்தால் துடித்த அவன், நீ சாகப் பிழைக்க இங்கே வந்தாய். உனக்கு உணவு தந்துக் காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா! என்று கத்தினான். ஆனால், அவரோ, இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது! என்று உறுதியாகச் சொன்னார். இதை வசந்த் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

வசந்த்தைப் பார்த்து அவர், நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழிகாட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார். நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது. இதுவே என் தீர்ப்பு! என்றார்.

# இலவு காத்த கிளி

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் ஒரு பாட்டி வசித்து வந்தார். அவருக்கு இரண்டு மகன்மார் இருவரும் மிகவும் பணக்காரர்களாக இருந்தனர். அவர்களுக்கு ஒவ்வொரு குடும்பம் காணப்பட்டது. குழந்தைகளும் இருந்தனர்.

ஒருநாள் அந்தப் பாட்டி மகன்மாரின் வீட்டிற்கு போனார். அங்கு பாட்டியை ஒருவரும் ஒழுங்காகக் கவனிக்கவில்லை.

பாட்டி எப்போதும் கையில் ஒரு இரும்புப் பெட்டியை வைத்திருந்தார். ஒருநாள் குழந்தைகள் பாட்டியுடன் விளையாடும் போது பாட்டி சில கேள்விகளைக் கேட்டார். குழந்தைகளும் சரியாக பதிலளித்தனர்.



குழந்தைகளுக்கு பாட்டி அப்பெட்டியிலிருந்து ஒரு தங்க நாணயம் எடுத்துக் கொடுத்தார். இதை இரண்டு மகன்மார்களும் பார்த்தனர். அப்பெட்டி முழுவதும் தங்க நாணயம் இருக்குமென நினைத்தனர்.

பின்னர் பாட்டியைக் கவனமாகப் பார்த்துக் கொண்டனர். நல்ல உணவு கொடுத்தனர். சில வருடத்திற்குப் பின் பாட்டி இறந்தார். அவருக்கு இறுதிச்சடங்குகளைச் செய்த பின் மகன்மார் அப்பெட்டியை ஆவலுடன் திறந்தனர். ஆனால் அதில் கருங்கற்களும் ஒரு கடிதமும் மட்டுமே இருந்தன.

மகன்மார் தாம் ஏமாந்ததை நினைத்து வருந்தினர். பாட்டியின் கடிதத்தில் "இலவு காத்த கிளி" என மட்டுமே எழுதியிருந்தது. மகன்மாரும் தாம் செய்ததை நினைத்து வருந்தினர்.

க.சஞ்சய் - 8C
யாழ். இந்து கல்லூரி

# பிளேட்டோ




கிரேக்கத்தின் தலைசிறந்தவர்களுள் தத்துவம், கலை, அறிவியல், கணிதவியல் போன்ற துறைகளுள் தனது புலமையினை வெளிக்காட்டியவராக பிளேட்டோ காணப்படுகின்றார். இவர் தனது திறமையினை கல்வித் துறையிலும் வெளிக்காட்டத் தவறிவிடவில்லை. இதனால் அனைத்திலும் தலைசிறந்து விளங்கிய ஒருவராக பிளேட்டோ திகழ்ந்தார். எதென்ஸ் நாட்டில் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த பிளேட்டோ சோக்கிரட்டீஸின் இலட்சியவாத சிந்தனைகளால் கவரப்பட்டு அவரை தனது ஆசிரியராகக் கொண்டு தன்னை ஒரு இலட்சியவாதியாக இனங்காட்டினார். இலட்சியவாதத்தின் வழியில்சென்ற பிளேட்டோ கல்வித்துறையில் ஆற்றிய பங்களிப்பானது அளப்பெரியது .

# பொது அறிவு

மனித உடலின் மிகப்பெரிய சுரப்பி :- கல்லீரல்
உடலில் இரத்தம் பாயா பகுதி :- கருவிழி
உடலின் தடிப்பான தோல் உள்ள இடம் :- பாதம்
அனைத்து வகை இரத்தத்துடனும் ஒத்துப்போகும் இரத்தம் :- O - வகை
பழங்கால இந்திய நுழைவாயில் :- கைபர்
பிரெஞ்சு புரட்சியின் குழந்தை :- நெப்போலியன்
சிந்துவெளி நாகரிகத்தினை அழித்தவர் :- ஆரியர்
மிகப்பெரிய பிரமிட் :- குஃபு

க.சஞ்சய், தரம் - 8C
யாழ் இந்து கல்லூரி

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 20th of February 2022


We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com



## Tiger

My name is Tigra. I am a tiger. I am the biggest cat in the world. I have an orange coat and black stripes all over my body. I have a long tail and sharp claws. I live in a forest and like to climb trees. If I get too hot swim in the water to cool off. I am a good swimmer. At night I like to hunt. I can see very well in the dark. I eat a lot of meat. I eat deer and wild pigs. I have large paws and sharp teeth. My roar is very loud.

*Answer the questions below by putting a circle around the correct letter*

**1. What is Tigra?**
- **a.** A bear
- **b.** A tiger
- **c.** Alion
- **d.** A mouse

**2. What colour is Tigra's coat?**
- **a.** Blue
- **b.** Green
- **c.** Orange
- **d.** Red

**3. Where does Tigra live?**
- **a.** In the sea
- **b.** in a field
- **c.** In a pond
- **d.** in a forest

**4. What does Tigra eat a lot of?**
- **a.** Fruit
- **b.** Meat
- **c.** Insects
- **d.** Vegetables

**5. When does Tigra like to hunt?**
- **a.** At night
- **b.** During the day

**6. Is Tigra's roar loud or quiet?**
- **a.** Loud
- **b.** Quiet

## *Fossils: Clues to the Past*

**by - Cindy Sherwood**

Everybody knows that dinosaurs once roamed the earth. But how do we know that fact? Dinosaurs lived many millions of years ago and there were no photos taken of them (or any people around to take those photos!) Yet scientists do have proof of dinosaurs, thanks to fossils.

A fossil is what is left of an animal or a plant a long time after it dies. Fossils are the buried parts of living things that have been preserved from a different geological time period. You can think of fossils as the ancestors of today's animals and plants. To be considered a fossil, the remains must be at least 10,000 years old.

Usually when an animal or plant dies, it decomposes. That means it rots away to nothing over time. But sometimes, an animal gets buried at the bottom of an ocean in layers of sand or mud called sediment. Over many years, the animal's skeleton gets crushed by more layers of sediment. Eventually, the sediment hardens into rock over the bones, which decay. When that happens, minerals slowly replace the bones and make a cast of the skeleton in the same shape as the original. Millions of years later, the rock surrounding the skeleton surfaces after an earthquake or after erosion from wind and rain.

The fossil is then just waiting to be found, perhaps by someone like you digging it up from the ground!

There are some other, more unusual ways for fossils to form. Scientists have discovered skeletons of animals that died instantly when a volcano erupted, their bones preserved in the ash. Small bugs or insects caught in tree sap can become fossils when the sap hardens into a golden material called amber. And animals trapped in sticky natural asphalt or tar can turn into fossils. The most famous example of these fossils can be found right in the middle of California's biggest city, Los Angeles. Scientists have uncovered more than three million fossils from the Ice Age at the La Brea Tar Pits, including saber-toothed cats and mammoths. And scientists there continue to dig up more fossils all the time!


Huge dinosaur skeletons are probably the most famous kinds of fossils. The largest ever found is a dinosaur called sauroposeidon (sore'-oh-puh-sie'-dun). Scientists think this type of dinosaur was 60 feet long and weighed 60 tons—that equals 120,000 pounds! But fossils are not always huge. The tiniest dinosaur fossil was found in China. Microraptor was only about a foot long, which is about the size of a box of cereal. Even tinier are the smallest fossils ever discovered, blue-green algae that lived on some rocks in Africa more than three billion years ago. Blue-green algae are also the very oldest fossils ever found.

Fossils give us a wonderful window into our past. Today the science of studying

fossils is alive and well. Paleontology (pay-lee-un-tall'-uh-gee) is the study of the history of

life on earth, using fossils as the evidence. So if you love dinosaurs and you want to know

more about what happened on earth thousands or millions of years ago, maybe someday you can make your living by digging up fossils!




## PRESENT PERFECT CONTINUOUS


*Fill in the blanks with the correct form of the given verbs.*

1. You ................ this book for weeks (read).
2. We .................... in Lisbon since January (live).
3. They ............... English for five years (learn).
4. I ............. English since 1976 (teach).
5. She ................. on the phone for hours (talk).
6. I ................ for five hours (drive)
7. You .....................for ten minutes (run).
8. They ................... emails for hours (write).
9. I .................. these mountains since I was a child (climb).
10. Susan ................ since January (swim).
11. He ..................... good news (bring).
13. The boy ............... the newspapers for months (deliver).
14. You and I ................. emails to our friends since noon (send).
15. We .................. for days (travel).
16. He ................... his house for weeks (paint).
17. They ................... the new bridge since last year (build).
18. You and Jane .............. for five hours (dance).
19. They ...................... vegetables since 2004 (sell).
20. You ................. in this factory since 2007 (work).



**Those who dare to fail miserably can achieve greatly - John F Kennedy**

# Photosynthesis




In plant cells, parts called chloroplasts contain chlorophyll, which is a green pigment. All photosynthesis in plants takes place within the chloroplasts.

Photosynthesis is the process in which green plants use sunlight to make their own food. Photosynthesis is necessary for life on Earth. Without it there would be no green plants, and without green plants there would be no animals.

Photosynthesis requires sunlight, chlorophyll, water, and carbon dioxide gas. Chlorophyll is a substance in all green plants, especially in the leaves. Plants take in water from the soil and carbon dioxide from the air.

Photosynthesis starts when chlorophyll absorbs energy from sunlight. Green plants use this light energy to change water and carbon dioxide into oxygen and nutrients called sugars. The plants use some of the sugars and store the rest. The oxygen is released into the air.

Photosynthesis is very important because almost all living things depend on plants for food. Photosynthesis is also important because of the oxygen it produces. Humans and other animals need to breathe in oxygen to survive.


Some living things other than plants also make their own food through photosynthesis. They include certain types of bacteria and algae.

# Thoracic Cavity

Thoracic cavity, also called chest cavity, the second largest hollow space of the body. It is enclosed by the ribs, the vertebral column, and the sternum, or breastbone, and is separated from the abdominal cavity (the body's largest hollow space) by a muscular and membranous partition, the diaphragm. It contains the lungs, the middle and lower airways—the tracheobronchial tree—the heart, the vessels transporting blood between the heart and the lungs, the great arteries bringing blood from the heart out into general circulation, and the major veins into which the blood is collected for transport back to the heart. The heart is covered by a fibrous membrane sac called the pericardium that blends with the trunks of the vessels running to and from the heart. The thoracic cavity also contains the esophagus, the channel through which food is passed from the throat to the stomach.

The chest cavity is lined with a serous membrane, which exudes a thin fluid. That portion of the chest membrane is called the parietal pleura. The membrane continues over the lung, where it is called the visceral pleura, and over part of the esophagus, the heart, and the great vessels, as the mediastinal pleura, the mediastinum being the space and the tissues and structures between the two lungs. Because the atmospheric pressure between the parietal pleura and the visceral pleura is less than that of the outer atmosphere, the two surfaces tend to touch, friction between the two during the respiratory movements of the lung being eliminated by the lubricating actions of the serous fluid. The pleural cavity is the space, when it occurs, between the parietal and the visceral pleura.

magnetic resonance imaging (MRI). brain. brain scanning. A MRI of a human





head back and side view. The MRI is a three-dimensional diagnostic imaging technique used to visualize inside the body without the need for X-rays or other radiation.

The pleura is a continuous sheet of endothelial, or lining, cells supported by a thin base of loose connective tissue. The membrane is well supplied with blood vessels, nerves, and lymph channels. The vessels of the visceral part of the pleura are intimately related with those of the lungs and bronchi; its arteries are branches of the bronchial arteries, and its veins mingle with the pulmonary network of capillaries. Beneath its inner side is a network of tiny lymph channels, or capillaries, that penetrate the lung substance, or parenchyma, and drain to the lymph nodes at the hilus of each lung, the point of entrance and departure for bronchi, blood vessels, and nerves.

# The Law of Reflection

Light is known to behave in a very predictable manner. If a ray of light could be observed approaching and reflecting off of a flat mirror, then the behavior of the light as it reflects would follow a predictable law known as the law of reflection. The diagram below illustrates the law of reflection.





In the diagram, the ray of light approaching the mirror is known as the incident ray (labeled I in the diagram). The ray of light that leaves the mirror is known as the reflected ray (labeled R in the diagram). At the point of incidence where the ray strikes the mirror, a line can be drawn perpendicular to the surface of the mirror. This line is known as a normal line (labeled N in the diagram). The normal line divides the angle between the incident ray and the reflected ray into two equal angles. The angle between the incident ray and the normal is known as the angle of incidence. The angle between the reflected ray and the normal is known as the angle of reflection. (These two angles are labeled with the Greek letter "theta" accompanied by a subscript; read as "theta-i" for angle of incidence and "theta-r" for angle of reflection.) The law of reflection states that when a ray of light reflects off a surface, the angle of incidence is equal to the angle of reflection.

***Reflection and the Locating of Images***

It is common to observe this law at work in a Physics lab such as the one described in the previous part of Lesson 1. To view an image of a pencil in a mirror, you must sight along a line at the image location. As you sight at the image, light travels to your eye along the path shown in the diagram below. The diagram shows that the light reflects off the mirror in such a manner that the angle of incidence is equal to the angle of reflection.

It just so happens that the light that travels along the line of sight to your eye follows the




law of reflection. (The reason for this will be discussed later in Lesson 2). If you were to sight





Diagram A Diagram B

along a line at a different location than the image location, it would be impossible for a ray of light to come from the object, reflect off the mirror according to the law of reflection, and subsequently travel to your eye. Only when you sight at the image, does light from the object reflect off the mirror in accordance with the law of reflection and travel to your eye. This truth is depicted in the diagram below.

For example, in Diagram A above, the eye is sighting along a line at a position above the actual image location. For light from the object to reflect off the mirror and travel to the eye, the light would have to reflect in such a way that the angle of incidence is less than the angle of reflection. In Diagram B above, the eye is sighting along a line at a position below the actual image location. In this case, for light from the object to reflect off the mirror and travel to the eye, the light would have to reflect in such a way that the angle of incidence is more than the angle of reflection. Neither of these cases would follow the law of reflection. In fact, in each case, the image is not seen when sighting along the indicated line of sight. It is because of the law of reflection that an eye must sight at the image location in order to see the image of an object in a mirror.





# விஞ்ஞானத்தின் வரலாறு



பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே விஞ்ஞானம் வளர ஆரம்பித்து விட்டது. கைவினை வரலாறே விஞ்ஞானத்தின் வரலாறாக வளர ஆரம்பித்தது எனலாம்.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தீக்கற்களால் ஆக்கப்பட்ட கருவியே முதன்முதலில் உருவாக்கப்பட்ட கருவியாகும். கற்களாலும் எலும்புகளாலும் கருவிகள் வடிவமைக்கப்பட்டன.

குறிப்பாக ஆயுதங்கள் எலும்புகளாலும், கொம்புகளாலுமே வடிவமைக்கப்பட்டன. விஞ்ஞான வளர்ச்சியானது கிரேக்கர் கால விஞ்ஞானம், சீனர் கால விஞ்ஞானம், அரேபியர் கால விஞ்ஞானம் மத்தியகால விஞ்ஞானம், மறுமலர்ச்சிக் கால விஞ்ஞானம், தற்கால விஞ்ஞானம் எனப் பல வரலாற்று வளர்ச்சி காலகட்டங்களை கண்டு இன்றுவரை பிரமிக்கத்தக்க வளர்ச்சியை காட்டி வருகின்றது.

### தற்கால விஞ்ஞான விந்தைகள்

இன்று விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் முன்னெப்போதும் இல்லாத வகையில் முன்னேறியுள்ளன. கல்லை உரசித் தீயைக் கண்டுபிடித்ததிலிருந்து ஆரம்பமான மனிதனின் கண்டுபிடிப்புகள் இன்று வானளாவிய ரீதியில் வளர்ந்து மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் விந்தைகள் புரிகின்றன.

மருத்துவக் கண்டுபிடிப்புகள் ஆயுள்காலத்தை அதிகரிக்க செய்து வருகின்றன. கல்வித் துறையில் விஞ்ஞானத்தின் பங்கு அளப்பரியதாகும். நவீன கற்பித்தல் யாவும் விஞ்ஞானத்தின் விந்தைகளேயாகும்.

விண்வெளிப் பயணங்களும் கோள்கள் வளிமண்டலங்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் விஞ்ஞானத்தின் விந்தைகளாகும். இயற்கை அழிவுகளை முன்கூட்டியே தடுத்து உயிர்களை பாதுகாப்பதும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களாலேயாகும்.

விவசாயத்தில் புதிய வகை பயிர் இனங்களை அறிமுகம் செய்வதில் இருந்து அறுவடை வரை நவீன முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. போக்குவரத்தை இலகுபடுத்துவதில் பல போக்குவரத்துச் சாதனங்கள் துணைபுரிகின்றன.

மின்சாரத்தில் இயங்கும் புகையிரதங்கள், விமானங்கள், வாகனங்கள் என எண்ணிலடங்கா சாதனங்களும் விஞ்ஞானத்தின் விந்தையினாலேயே உருவாகியுள்ளன.

### விஞ்ஞான விந்தையின் நன்மைகள்

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் கையடக்கத் தொலைபேசி, கணினி, வானொலி போன்ற கண்டுபிடிப்புகள் கல்வித் துறைக்கு பெரிதும் பயனளிக்கின்றன. இவற்றின் மூலம் நவீன கல்வி முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்களின் அறிவாற்றல் விருத்தியடையச் செய்யப்படுகின்றது.

மருத்துவத் துறையில் இதன் பங்களிப்பானது போற்றற்குரியதாகும். குணப்படுத்த முடியாத நோய்களைக் குணப்படுத்தக் கூடிய மருத்துவ கருவிகள், உபகரணங்கள், சிகிச்சை முறைகள் போன்றன உதவுகின்றன.

இதனால் இழப்புக்கள் தவிர்க்கப்படுகின்றன. விவசாயத்தின் வளர்ச்சிக்கும் புதிய வகை பயிர்களுக்கும் விஞ்ஞானம் துணைபுரிகின்றது.

### விஞ்ஞானம் எதிர்கொள்ளும் சவால்கள்

விஞ்ஞானம் பல நன்மைகளை மனிதனுக்கு தந்தாலும் சூழல் மாசடைதல், பேரழிவு, அழிவினைத் தரும் ஆயுதங்கள்4 புதிய புதிய நோய் நிலைமைகள், மனித மனங்களில் ஏற்படும் பிறழ்வுகள் எனப்பல சவால்களை விஞ்ஞானத்தின் விந்தை எதிர்கொள்கின்றன.

விஞ்ஞானம் ஏற்படுத்துகின்ற சவால்களே நாளைய எதிர்கால சந்ததி எதிர்கொள்ளப் போகும் மிகப்பெரிய சவாலாகும். விஞ்ஞான வளர்ச்சியிலே நாடுகள் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொள்கின்றன. அதிகரித்த வீதி விபத்துக்கள் ஏற்படவும் காரணமாகின்றன. பண்டைய விவசாயமுறை அழிவதற்கு விஞ்ஞானத்தின் அபரிவிதமான வளர்ச்சியே காரணமாகின்றது.

# கல்விக்கதிர்

- அகரன் -

# அறிவியல்



வாழ்நாள் முழுவதும் மனிதன் இயங்கி கொண்டிருக்கிறான். நமது அன்றாட வாழ்வில் பல அறிவியல் உண்மைகள் காணப்படுகின்றன. மனிதன் அன்றாடம் ஆற்றும் தொழில்கள் என்ன? அவை ஏன் இடம்பெறுகின்றன? இவை ஏன் தவிர்க்க முடியாத செயல்பாடுகள் என விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது. மனிதன் சுவாசிக்கிறான் என்றால் மனிதன் சுவாசிப்பதன் மூலமே உடல் இயக்கம் பெறுகிறது. இரத்த சுற்றோட்டம் இடம்பெறுகிறது. உடலின் எல்லா பாகங்களிற்கும் இரத்தம் கொண்டு செல்லப்படுகிறது. மனித உடலே ஒரு அறிவியல் அதிசயம். மனிதனுக்கு பசிக்கிறது உணவை எடுத்துக் கொண்டால் தான் சக்தி கிடைக்கிறது. இதனால் தான் உடல் உறுப்புகள் இயங்குகின்றன. உடலில் நீர் மூலமே கலங்கள் இயங்கி கொண்டிருக்கின்றன. இதனால் தான் தாகம் எடுக்கிறது. மனிதனுடைய உடல் தொடர்ச்சியாக இயங்க முடியாமல் களைப்பானது ஏற்படுகிறது. இதனால் அவசியமாக தூங்கவேண்டி ஏற்படுகிறது.

மனிதனுடைய உடல் இயக்கம் சூழலுக்கேற்ப தன்னை இசைவாக்கம் அடைய செய்வதுடன் தன்னை பாதுகாக்கவும் நோய்களின் போது எதிர்ப்பு சக்தியை தானே உருவாக்கி கொள்கிறது. மனிதன் உணவைசமைத்து உண்கிறான். அதற்கு நெருப்பை கண்டு பிடித்தான். ஏனென்றால் பச்சையாக உணவு உண்பதனால் கிருமிகள் உடலினுள் சென்று நோயை உண்டாக்கிவிடும் என்பதால் உணவை சமைத்து உண்டனர். இயற்கை சக்திகளிடம் இருந்து நம்மை பாதுகாத்து கொள்ள பாதுகாப்பான வாழ்விடங்களை அமைத்துக்கொள்கின்றனர்.

மேலும் அன்றாட வாழ்வில் நமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் அறிவியல் உதவுகிறது. மனிதன் தனது அறிவியல் வளர்ச்சியால் இன்றைக்கு பெரும் சாதனைகளை செய்து கொண்டிருக்கிறான். சாத்தியமாகாத வியங்களை கூட எளிதாக செய்துவிடும் அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்து விட்டது. இந்த அறிவியல் வளர்ச்சி மனித தேவைகளை எளிதாக பூர்த்தி செய்வதுடன் மனிதனுடைய உழைப்பை வெகுவாக குறைத்துள்ளது.

முன்பெல்லாம் கஷ்டப்பட்டு உடலுழைப்பை வெளிப்படுத்திய மனிதன் இன்று இலகுவாக வேலைகளை முடிக்கிறான். நீண்ட தூரம் நடந்து சென்ற மனிதன் இன்று காரிலும், பஸ்ஸிலும், ரயிலிலும், விமானத்திலும் பறக்கிறான். முன்பு கஷ்டப்பட்டு கிணற்றில் நீர் இறைத்த மனிதன் இன்று நீர் பம்புகள் மூலம் இலகுவாக நீரைப் பெறுகிறான். மாடுகளாலும் உடல் உழைப்பாலும் பாடுபட்டு விவசாயம் செய்த மனிதன் இன்று இயந்திரங்களை பயன்படுத்தி இலகுவாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுகிறான். தீர்க்க முடியாத நோய்களுக்கெல்லாம் நவீன முறையில் சிகிச்சைகளும், மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டு மருத்துவத்துறை பெரும் வளர்ச்சி கண்டிருக்கிறது. குணப்படுத்த முடியாத நோய்களுக்கு கூட மருந்துகள், ஊசிகள் கண்டுபிடிக்கப்பட்டு பல உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. பொறியியல் துறையில் கட்டடங்கள் இன்றைக்கு வானத்தைத் தொடுகின்ற அளவுக்கு அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ந்துவிட்டன. கணினி அதனோடு இணைந்த இணையம் கையடக்க தொலைபேசிகள், சமூக வலைத்தளங்கள் தகவல் தொடர்பால் ஆகச்சிறந்த அறிவியல் பரிணாமத்தை கொண்டிருக்கின்றன. விவசாயம், பொருளாதாரம், கல்வி, போக்குவரத்து, விளையாட்டு, பொழுதுபோக்கு என எல்லா துறைகளிலும் அறிவியல் மனிதனுடைய பணிகளை இலகுவாக்கி கொண்டு தான் இருக்கிறது. இன்றைக்கு அறிவியலால் சாத்தியமாகாத விடயங்கள் அரிதென்றே கூறலாம். அறிவில் எப்பொழுதும் மனித நலன்களை பாதுகாப்பது உசிதமானது. மாறாக மனித நலன்களை கெடுக்கும் வகையிலும் இன்றைக்கு அறிவியல் வளர்ச்சி போய்க்கொண்டிருக்கிறது.

வேலைகள் குறைவடைவதனால் மனிதன் எளிதாக உடல் உழைப்பு இல்லாமல் இருப்பதனால் சோர்வு, உடல்நலம் குறைவடைதல் அதிக எடை மற்றும் பல நோய்களும் தொழில்நுட்ப சாதனங்களின் பாவனைகளால் மனிதன் தூங்கும் காலம் குறைவடைவதாக கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகையான நிலைகளால் மனிதன் ஆரோக்கியம் பல வழிகளிலும் கெடுகிறது என்பது வெளிப்படையாகும். இந்த அறிவியல் வளர்ச்சியால் பல நன்மைகள் இருந்தாலும் சில தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

# கல்வி வளர்ச்சியின் இன்றைய நிலை

இன்றைக்கு கல்வியினை வீடுகளில் இருந்து கொண்டே கற்கும் அளவிற்கு தொழில்நுட்பம் வளர்ந்து விட்டது. இணையவழிக் கல்வி என பல வழிகளிலும் தேடி இலகுவாக கற்கக் கூடிய வழிமுறைகள் கல்வியில் வளர்ந்து விட்டன.

பாடசாலைகளை விடவும் தனியார் கல்வி நிலையங்கள் இன்றைக்கு மாணவர்களை ஈர்க்கின்றன. இன்றைய பெற்றோர்கள் மாணவர்களின் கல்விக்காகவே அதிக பணம் செலவழிக்கின்றனர்.

மாறாக தனியாரும் கல்வியை சேவையாக இன்றி வியாபாரம் ஆக மாற்றியுள்ளார்கள். முன்பெல்லாம் ஆசிரியர் பணி மாணவர்களை நெறிப்படுத்தல் எனும் உயரிய நோக்கத்துக்காக என்று இருந்தது. இன்று ஆசிரிய தொழிலில் அதிக இலாபம் ஈட்டமுடியும் என்று ஒரு சிலர் மாற்றியுள்ளனர்.

இன்றைக்கு உயர் கல்வி அதன் பின்னரான தொழில் கல்வி மேல்படிப்பு வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுக்கு செல்லல் என கல்வியே வாழ்க்கை எனும் அளவிற்கு இன்றை கல்வி வாழ்வோடு நீக்கமற கலந்துள்ளது.

**கண்ணுடையோர் என்போர் கற்றோர்**
**கல்லாதோர் என்போர் முகத்திரண்டு புண்ணுடையோர்**

என்கிறார் வள்ளுவர்.

அந்தவகையில் கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை எனும் அளவிற்கு கல்வி மிக முக்கியமானதாகும்.

இன்றைக்கு கல்வி புதிய பரிணாமம் கண்டிருந்தாலும் கல்வியின் பெருமையை உணர்ந்து கற்றதனால் ஆய பயனான மற்றோரையும் மதித்து கற்றவையும் சுற்றத்தையும் நல்வழிப்படுத்தி வைத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

காலைக்கதிர் Kalaikkathir

MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECT TO SCHOOL FOR THE AWARD OF BURSARIES.

# மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை

**வினாத்தாள் ஆக்கம்**
**புலமைவித்தகன் ஆசிரியர்**
**ஆர். பிரசாந்தன்** NDT, BEd(primary)

## வினாத்தாள் - I

**1 மணித்தியாலம்**

**சுட்டெண் : .........**




23. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை



1. 1 2. 2 3. 3

24, 25 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.


24.




1. 11, 22 2. 10, 12 3. 11, 20


25. 25, 23, 20, 16, 11, .................
1. 6 2. 5 3. 7


26, 27 ஆகிய வினாக்களில் அடுத்து வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க

26.




1. 2. 3.


27.




1. 2. 3.

28. மாதவனின் தந்தையின் தந்தைக்கும் மாதவனின் தம்பிக்குமிடையேயுள்ள உறவுமுறை யாது?
1. சிறிய தகப்பனும் மகனும்
2. மாமாவும் மருமகனும்
3. பாட்டனும் பேரனும்

29. உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 8
2. 5
3. 7

30. கீழே தரப்பட்டுள்ள வடிவத்தை ஒரு சதுரமாக மாற்றுவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய அடைப்புக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை?
1. 5 2. 9 3.10

31. புத்தகம் - அடுக்கு என்பது போல புகையிலை,
1. கட்டு 2. அடுக்கு 3. சிப்பம்

32. மூத்தவன் என்பதன் பெண்பாற் சொல்,
1. மூத்தவி 2. மூத்தவள் 3. மூத்தோர்

33. பின்வருவனவற்றுள் உயர்திணை படர்க்கை ஒருமைச் சொல் எது?
1. அவன் 2. அவர்கள் 3. நான்

34. நாடு ............ மாவட்டம் கிராமம்
1. மாகாணம் 2. நகரம் 3. உலகம்

35. கலப்பைக்கும் மண்வெட்டிக்கும் விவசாயி போன்று சுத்தியலுக்கும் சீவுளிக்கும் .................
1. தச்சன் 2. மேசன் 3. மீனவன்

36. கடற்கொந்தளிப்பின் பின்னர் வியாபாரிகள் பொருள்களின் விலையை அதிகரித்தனர். வியாபாரிகளின் இச்செயற்பாடானது,
1. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
2. குணம் குப்பையிலே பணம் பந்தியிலே
3. நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்.

37. பொழுதுகளை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடையைத் தெரிவு செய்க.
1. மாலை, காலை, இரவு, பகல்
2. காலை, இரவு, பகல், மாலை
3. காலை, பகல் மாலை, இரவு

38, 39 ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்குப் பதிலாக இடக்கூடிய எண்களைக் கொண்ட கூட்டினைத் தெரிவு செய்க

38. . 129 + [.........] = 145
1. [15+2] 2. [2×8] 3. [23-5]

39. . 432 [.........] 4 = 108
1. [×] 2. [+] 3. [÷]

40. a, b, c ஆகியன அடுத்துவரும் மூன்று எண்களாகும். இவை மூன்றினதும் கூட்டுத்தொகை 30 ஆகும் எனின் 'A' இனால் குறிக்கப்படும் எண் யாது?
1. 11 2. 12 3. 9

## வினாத்தாள் - II

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

**இயற்கையைப் பேணிப் பாதுகாப்பதற்கு மனிதர்கள் ஒத்துழைப்பதில்லை. இவ்வாறான செயல்களால் எமது இருப்பிடத்தை விட்டு நாம் விரட்டப்பட்டுள்ளோம். பூக்களைத் தேடி நீண்ட தூரம் பயணிக்கின்றோம். உணவிற்காக வாழ்நாள் முழுவதும் அங்கும் இங்கும் அலைகிறோம். அதனால் எமது வாழ்க்கை மிகவும் கடினமாகி விட்டது.**

1. எதைப் பேணிப் பாதுகாப்பதற்கு மனிதர்கள் ஒத்துழைப்பதில்லை?
.............................................................................................
2. ஆயுட்காலம் என்ற கருத்தைக் குறிக்கும் சொல்லை எழுதுக?
.............................................................................................
3. பெயர் அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக?
.............................................................................................
4. இலகு என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக?
.............................................................................................
5. பூக்களை என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக?
.............................................................................................

02. வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் ........................................
( மலர்ந்தது, மலர்ந்தன )
2. நான் எனது தங்கையுடன் பாடசாலைக்குச் ..................................
( சென்றேன், சென்றோம் )
3. கழிவு நீர் தேங்கி நிற்பதனால் நுளம்புகள் ..................................
( பெருகுகின்றது, பெருகுகின்றன )
4. சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் .........................................
( போன்றது, போன்றன )

**(மிகுதி அடுத்த இதழில்)**





# விவசாயி



# வீட்டுத்தோட்டமும் அதன் முக்கியத்துவமும்

சுஜாவந்தி இலட்சுமணகுமார்
உதவி விரிவுரையாளர்
விவசாய பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

3) சேதன பசளை தயாரிப்பு

பயிர்களுக்கு முக்கியமாக நைதரசன், பொஸ்பரஸ், பொற்றாசியம் போன்ற போசணைபதார்த்தங்கள் தேவையானது. இதனுடன் வேறு சில போசணபதார்த் தங்கள் சிறியளவில் தேவை. மண்வளத்தை அதிகரிப்பதோடு மண் கட்டமைப்பு, வளியூட்டம், நன்மை பயக்கும் நுண்ணங்கிகள் செயற்பாட்டையும் அதிகரிக்கும். இதற்காக,

* கூட்டெரு – உதிரிந்த இலை குழைகள், சமையல் கழிவுகள் (வெங்காயம், உள்ளி, தேசி, உருளைக் கிழங்கு தவிர்ந்த), ஆடு மற்றும் மாட்டு எரு என்பவற்றை ஒரு குழிவெட்டி அதனுள் சேகரித்து, இக்கலவையை 15 நாள்களுக்கு ஒருமுறை கிளறி விடுவதோடு ஈரலிப்பு தன்மையையும் இடை இடையே கண்காணித்து வந்தால் ஏறக்குறைய 2 மாதங்களில் கூட்டெரு.

* மண்புழு உரம் – கூட்டெரு தயாரிக்க தேவையான மூலப்பொருளுடன் விசேட மண்புழு (Eisenia fetida, Eudrilum eugeniae, Perionyx excavatus) சேர்த்து பச்சை சாணகம் சேர்த்து வைத்தால் ஏறத்தாழ 40 - 45 நாள்களில் மண்புழு உரம்.



மண்புழு உரம் தயாரிக்க பயன்படும் மண்புழு
**Eisenia fetida**

* பஞ்சகாவ்யா – பிளாஸ்டிக் கொள்கலனில் தூளாக்கி புண்ணாக்குடன் பசு நெய் சேர்த்து குழைத்து 3 நாள்களுக்கு மூடி வைத்தல். நான்காம் நாள் பசு சாணகம், பசு கோமியம், பசுப்பால், காய்ச்சி ஆறிய புளித்த தயிர், கருப்பட்டி அல்லது கரும்பு சாறு அல்லது நாட்டுச்சர்க்கரை, கடலை புண்ணாக்கு, கள், இளநீர், பழுத்த வாழைப்பழம், பழைய சாதநீர் இவற்றை ஒன்றன் பின் ஒன்றாக சேர்த்து கலக்கி விடவும். நூல் துணியால் வாய்ப்பகுதியை மூடிவிட்டு நாளுக்கு இரு முறை கிளறி விட்டால் 15 நாள்களில் பின் பஞ்சகாவ்யா.

4) நீர்ப்பாசனம்



நாற்றுகளின் வளர்ச்சிப் பருவத்தின் ஆரம்பத்தில் உள்ளபோது தினமும் காலை நீர் பாய்ச்சுவது கட்டாயம். வேயிர்மயிர்கள் உருவான பின் 2 - 3 நாள்களுக்கு ஒரு தடவை நீர் பாய்ச்சினால் போதுமானது. மழைக் காலத்தில் நீரூற்ற அவசியமன்று. ஆடைகள், வீடு பாத்திரம் கழுவிய நீரை தாவரங்களுக்கு வடிகால் மூலமாகவோ திசைதிருப்ப முடியும். இலை குழைகள், புற்கள் பத்திரக்கலவை மூலம் மண்ணின் ஈரத் தன்மையை நீண்ட காலத்துக்கு பராமரிப்பதன் மூலம் நீர்ப்பாசன இடைவெளியை கூடலாம்.

5) களைகள், நோய்கள், பீடைகள் கட்டுப்பாடு

களைகள் என்பவை தாவரங்கள் இலை பயிரிடப் பட்ட பயிருடன் போட்டியிட்டு நீர், மண்ணிலுள்ள ஊட்டச்சத்து, சூரிய ஒளியை போர்த்து கொள்வாதல் பயிர் வளர்ச்சி பாதிக்கப்படும். எனவே வித்து உருவாக முன் இவற்றை அகற்ற வேண்டும். இல்லையேல் களை களின் வித்துக்கள் முளைத்து புகுத்திய தாவரத்தை உருவாக எத்தனிக்கும். எனவே முடியுமான வரை பிடுங்கிய களையை உலரவைத்து அதனை கூட்டெரு தயாரிக்கவும் கால் நடை உணவாகவும் பாவிக்கலாம். வர்த்தகமயமாக்கலால் அதிக விளைச்சலை பெறும் நோக்கில் மரக்கறி செய்கையில் அதிக கிருமிநாசினி பாவனையை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக தாவரத்தின் வளர்ச்சிப் பருவத்தின் போது அதிக நைதரசன் உரம் (யூரியா) பயன்படுத்துவதால் தாவரம் சாறு நிறைந்து காணப்படும். இச்சந்தர்ப்பத்தில் நோய் பீடைத்தாக்கம் கூடவாக இருக்கும். இதனால் விவசாயிகள் கூடிய களைக்கொல்லி பயன்படுத்துகின்றனர். இச்செயற்பாடு, குறிப்பிலக்கு அல்லாத (நன்மை பயக்கும்) உயிரங்கிகளையும் சூழலையும் பாதிக்கும். மாற்றீடாக பாரம்பரியமாக நம் பிரயோகிக்கும் சாம்பலுடன் சேதனப்பசளை கலந்து வீசினால் சிறந்த பெறுபேறு அடையலாம். பொதுவாக வேப்பம் வித்து, வேப்பிலை, ஆடுதீண்டா இலையை தனித்தனியாக கோமியத்துடன் கலந்து மூலிகை பூச்சி விரட்டியாகவும், இஞ்சி, பூண்டு, மிளகாய் கரைசல், சீதாப்பழம், வேம்பு மற்றும் மிளகாய்க்கரைசல் என்பவற்றை பூச்சி விரட்டியாக பயன்படுத்தலாம்.



இதற்கப்பால் தற்போது ஏற்பட்டுள்ள பூச்சி மற்றும் களைநாசினியின் விலை, தட்டுப்பாடு காரணமாக மனிதன் தானாக முன் வந்து சேதனத்தை நோக்க ஆரம்பித்து இருக்கிறான்.



அதாவது,

1. உமி, வைக்கோல் கொண்டு பாத்திகளில் எரித்து தொற்று நீக்கம் செய்தல்.
2. தேவைக்கு ஏற்ப நீர் பாய்ச்சுதல்.
3. உமிக்கரி, சாம்பலில் உள்ள சிலிக்கா காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி தாவரங்களுக்கு கிடைப்பதால் இவற்றை சேதனப் பசளையுடன் கலந்து சேர்த்தல்.
4. தொடர்ச்சியான தோட்ட கண்காணிப்பு.
5. சரியான பயிர் இடைவெளி பேணுதல.
6. சேதனப் பசளை பயன்பாடு.
7. பூச்சி மற்றும் பீடைத் தாக்கம் கொண்ட மற்றும் முதிர்ந்த இலைகளை அகற்றி எரித்தல்.

சேதனபசளை பாவிக்கும் போது இயற்கையாக மண்ணில் உள்ள நன்மை பயக்கும் நுண்ணங்கிகள் வளர்ச்சி அதிகரிப்பதோடு அவை தாவரவளர்ச்சியில் பங்களிக்கும் ஓமோன்கள் உற்பத்தியை தூண்டுகிறது. தன்னிறைவான பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையை பொறுத்தவரை விவசாயம் என்பது தூண் போன்றது. தற்போது விவசாயிகள் மற்றும் மனிதன் எதிர்படும் இடர்பாடுகளால் 'தன் கையே தனக்கு உதவி' என்பதற்கு ஏற்ப நமக்கு நாமே சுத்தமாகவும் நஞ்சற்ற உணவை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாக்கப் பட்டுள்ளது. குறிப்பிட்ட சில காலமாக சேதன விவசாய உற்பத்திகள் சந்தையில் பார்க்கலாம். ஆனாலும் அவற்றின் விலை உச்சம் தொட்டுள்ளது. இதற்கு ஒரே வழி வீட்டுத்தோட்டம்.

'பூமி நமது தாய், அந்த தாய்க்கு என்னவெல்லாம் நேரிடுகிறதோ அதுவா அவளுடைய பிள்ளைகளான நமக்கு நாளை நேரிடும். ஏனென்றால், பூமி மனிதனுக்குச் சொந்தமானது அல்ல, மனிதன் தான் பூமிக்குச் சொந்தமானவன்.' – கோ. நம்மாழ்வார்

# நிலக்கடலை/ வேர்க்கடலை

பருப்புகள் , பட்டாணி போன்ற தாவர வகையைச் சேர்ந்ததுதான் நிலக்கடலை. ஆனால் இதன் சத்தினைக் கணக்கில்கொண்டு கொட்டை வகைகளில் சேர்த்துள்ளனர். நிலக்கடலை உலகெல்லாம் பரவியது பதினாறாம் நூற்றாண்டில்தான். இதன் தாய் நிலம், பிரேஸில். அங்கிருந்து போத்துக்கேயர் பல்வேறு நாடுகளுக்கு இதனை எடுத்துச் சென்றனர்.

பூமிக்கடியில் தலை வைத்து வெளியே இலை விடுகிற தாவரம், வேர்க்கடலை. இதன் இலைகள் செடியில் பழுத்து மஞ்சள் நிறமடைந்த இரண்டு மாதங்களில் வேர்க்கடலை முற்றிக் கிடைக்கிறது. மாமிசம், முட்டை, காய்கறிகளைவிட வேர்க்கடலையில் புரதச் சத்து அதிகம். இன்னொரு சிறப்பு. இதனைச் சாப்பிடுவதால் உடல் குளிர்ச்சியால் ஏற்படும் ஆஸ்துமா போன்ற நோய்கள் ஓடிவிடும். நெஞ்சு சளியினை நீக்கும் வல்லமையும் வேர்க்கடலையின் சிறப்பு .

சக்தி, புரதம், பொஸ்பரஸ், தயமின், நயசின் ஆகிய ஐந்து சத்துக்கள் கொண்ட அற்புத மருத்துவக் குணத்துடன் விளங்குகிறது வேர்க்கடலை. இதில் உள்ள எண்ணெய்ச் சத்து, எளிதில் சமிபாடடையக்கூடியது. சிறந்த மலமிளக்கியாகவும் சருமத்துக்குப் பளபளப்பூட்டக்கூடியதாகவும் விளங்குகிறது.

வேர்க்கடலையை, வெல்லத்துடனும், ஆட்டுப்பாலுடனும் சேர்த்துச் சாப்பிடலாம். இது வளரும் குழந்தைகளுக்கும், கருத்தரித்துள்ள பெண்களுக்கும், தாய்ப்பால் அளிக்கும் தாய்மார்களுக்கும் அருமருந்து.

பலதொற்றுநோய்கள் காசநோய் ஆகியவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ளத் தேவையான எதிர்ப்பு



சக்தியை வேர்க்கடலை அளிக்கிறது. ஹீமோபீலியா என்ற நோயால் அவதிப்படுபவர்களுக்கு அடிபட்டால் அவ்வளவு எளிதில் இரத்தம் உறையாது. அதனைக் குணப்படுத்தவும், பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் அதிக ரத்தப்போக்கில் இருந்து குணமடையவும், நீரிழிவு நோயாளிகளுக்கும் வேர்க்கடலை சிறந்த உணவாகும்.

ஆட்டுப் பாலில் எலுமிச்சைச்சாறு பிழிந்து, அதனுடன் ஒரு பிடி வறுத்த வேர்க்கடலையைச் சேர்த்து சாப்பிட்டால் வயிற்றுக் கடுப்பு குணமாகும். வயிற்றில் நிகோடினிக் அமிலம் குறையும்போதுதான் இந்த பிரச்சினை ஏற்படும். வேர்க்கடலையில் உள்ள நயசின் இந்நிலையைச் சீர்செய்கிறது. புதிதாகப் பறித்த வேர்க்கடலையுடன் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்துச் சாப்பிட்டால் வாயில் உள்ள ஈறுகள் உறுதியடையும்.

வேர்க்கடலையைத் தண்ணீரில் ஆறு முதல் எட்டு மணி நேரம் ஊறவைத்து நீரை வடிகட்டிவிட்டுச் சாப்பிடுவதே சிறந்ததாகும். வேர்க்கடலையைக் கஞ்சியாக்கி, வாழைப்பழம், தேன் சேர்த்துச் சாப்பிடுவதால், குழந்தைகள் பலம் பெறுவார்கள்.

## வேர்க்கடலை குழம்பு




**தேவையானவை**

வேர்க்கடலை - அரை கப் (ஊற வைத்து, வேக வைக்கவும்)
தேங்காய் துண்டுகள் - 2 (அரைக்கவும்)
கடுகு - 1 தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு - 1 தேக்கரண்டி
சீரகத்தூள் - 1 தேக்கரண்டி
புளிக் கரைசல்
நறுக்கிய வெங்காயம்
மிளகாய்த்தூள் -1 தேக்கரண்டி
மஞ்சள்தூள் - 1 தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு,
எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் புளிக் கரைசலை விட்டு அரைத்த தேங்காய், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், உப்பு போட்டு, தேவையான தண்ணீர் விட்டு கொதிக்கவிடவும். வேக



வைத்த வேர்க்கடலையைச் சேர்த்து, ஒரு கொதி நிலை வந்ததும் தீயைக் குறைத்து வைக்கவும். தாச்சியில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு, சீரகத்தூள், கறிவேப்பிலை போட்டு, பொரிந்ததும் நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து வதக்கவும். பொன்னிறமாக வந்ததும் கொதிக்கும் குழம்பில் கொட்டி இறக்கவும்.

## கருணைக்கிழங்கு /கரணை கிழங்கு சாப்பிட்டால் தீரும் நோய்கள்



மனிதன் உண்ணும் உணவு வகைகளில் தாவரங்களிலிருந்து கிடைக்கும் காய், கனிகள் போன்று கிழங்குகளும் ஒரு உணவாக இருக்கிறது. பூமிக்கு அடியில் விளைவதால் இவை இன்னும் அதிக உயிர்ச்சத்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் நமது நாட்டில் பரவலாக அதிகம் உண்ணப்படும் கிழங்கு வகையான கருணைக்கிழங்கு சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

நமது உடலுக்கு அடிப்படையாக இருப்பது எலும்புகள் ஆகும். மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் எலும்புகள் வலிமையாக இருப்பதற்கு கல்சியம் சத்து அவசியம். கருணைக் கிழங்கு எலும்புகளை வலிமையாக்கும் சத்து கொண்டதாக இருக்கிறது. எலும்புகள் வலுக்குறைவாக இருக்கும் குழந்தைகள், வயதானவர்கள் கருணை கிழங்கை வாரம் ஒரு முறை சாப்பிடுவதால் எலும்புகள் வலிமை பெறும்.உடலில் இருக்கும் வாதம், பித்தம், கபம் போன்றவற்றில் பித்தம் அதிகரிப்பதால் தலைவலி, மயக்கம் போன்றவை அடிக்கடி ஏற்படும் நிலை சிலருக்கு ஏற்படுகிறது.

கருணை கிழங்கிற்கு பித்தத்தின் அளவை சமச்சீராக வைக்கும் தன்மை அதிகமுள்ளது. எனவே பித்தம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட்டவர்கள் கருணைக்கிழங்கை அடிக்கடி சாப்பிட பித்தம் கட்டுப்படும். பித்த கற்கள் உருவாவதை தடுக்கும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் சாப்பிட்ட மூன்று மணி நேரத்திற்குள் மீண்டும் பசியுணர்வு ஏற்படுவது உடல் ஆரோக்கியத்திற்கான நல்ல அறிகுறியாகும். ஒரு சிலருக்கு சில காரணங்களால் பசியின்மை ஏற்பட்டு, சரியாக சாப்பிட முடியாத நிலை உண்டாகிறது. கருணைக்கிழங்கு பசியின்மை பிரச்சினையை சுலபத்தில் தீர்க்கும். வாரமொருமுறை கருணைக்கிழங்கை சாப்பிட்டு வந்தால் வயிற்றில் இருக்கும் அமில சுரப்பை சீராக்குவதோடு, பசியின்மை பிரச்சினையை தீர்க்கிறது.

மாதவிடாய் என்பது பெண்களாய் பிறந்த அனைவருமே தங்களின் வாழ்வில் அனுபவிக்க வேண்டிய ஒரு இயற்கை நிகழ்வாக இருக்கிறது. இக்காலத்தில் பெண்கள் பலருக்கு இரத்த போக்கு அதிகம் ஏற்பட்டு பெண்களை உடலளவிலும் மனதளவிலும் களைப்படைத்து உடல் சத்து இழப்பு மற்றும் சோர்வு ஏற்படுகிறது. இச்சமயங்களில் பெண்கள் கருணைக்கிழங்கு உணவு பதார்த்தங்களை சாப்பிடுவதால் மாதவிடாய் சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகளும் நீங்கும்.

இன்று உலகெங்கிலும் ஏற்படும் புற்றுநோய்களில் வயிறு மற்றும் இரைப்பை புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. கருணைகிழங்கு பெருங்குடல் மற்றும் ஜீரண உறுப்புக்களில் தேங்கும் கழிவுகளையும், நச்சுக்களையும் வெளியேற்றி புற்றுசெல்கள் வளராமல் தடுக்கிறது. எனவே வயிறு, இரைப்பை புற்றுநோய் ஏற்படாமல் தடுக்க உணவில் கருணைக்கிழங்கு அதிகம் சேர்த்து சாப்பிட வேண்டும். நமது உடலின் செரிமான திறன் சீராக இருந்தாலே பெரும்பாலான நோய்கள் ஏற்படாமல் தடுத்து விட முடியும். சிலருக்கு சாப்பிடும் உணவு சரியாக செரிமானம் ஆகா நிலை ஏற்படுகிறது. செரிமானக் கோளாறுகளுடன் மலச்சிக்கல், வாயு சேர்த்தல் மற்றும் இதர வயிறு சம்பந்தமான அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கும் திறன் கொண்ட இயற்கை உணவாக கருணைகிழங்கு இருக்கிறது. எனவே இந்த கிழங்கை அடிக்கடி சாப்பிடுபவர்களுக்கு மேற்கண்ட அனைத்து பிரச்சினைகளும் வெகு விரைவில் தீரும்.

## கருணைக்கிழங்கு குழம்பு

கருணைக்கிழங்கு – கால் கிலோ (வேக வைத்து, தோலுரித்து, வட்டமாக நறுக்கவும்)
சின்ன வெங்காயம் – 10 (ஒன்றிரண்டாக தட்டிக் கொள்ளவும்)
கீறிய பச்சை மிளகாய் – 2
மஞ்சள்தூள் – அரை தேக்கரண்டி
மிளகாய்த்தூள் – இரண்டரை தேக்கரண்டி
தேங்காய்ப்பால் – ஒரு கப்
புளி – எலுமிச்சை அளவு (கரைத்துக் கொள்ளவும்)
வறுத்து இடித்த சீரகம் – 2 தேக்கரண்டி
எண்ணெய் – 2 தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு

**செய்முறை**

அடி கனமான பாத்திரத்தில் புளிக் கரைசல், வெங்காயம், சீரகம், கீறிய பச்சை மிளகாய், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், உப்பு போட்டு, எண்ணெய் விட்டு அடுப்பில் வைத்து மூடி, கொதிக்க வைக்கவும். நன்றாகக் கொதித்ததும் தேங்காய்ப் பால், வேக வைத்த கிழங்கை சேர்த்து மிதமான தீயில் தளதளவென கொதிக்க வைத்து, எண்ணெய் பிரிந்து வந்ததும் இறக்கவும்.



## இலக்கிய நயம்

# தூக்கம் இழந்த காதலி


● யாழ். மகள் சைந்தவி

தூக்கம் நன்றாக இல்லையென்றால் நம் உடம்புக்கு துக்கம் வந்து விடுகிறது. அதேபோல் மனதுக்கு துக்கம் இருக்கும் போது தூக்கம் வர மறுக்கிறது. காதலின் இனிய தருணங்கள் கழிந்த பின் அடுத்து என்ன செய்யலாம் என்ற ஆலோசனை காதலனுக்கு முன், காதலிக்கு வந்து விடுகிறது. கல்யாணம் செய்து கொள்ளவும் துணிவு வரவில்லை, காதலை விடவும் துணிவு வரவில்லை. உலகில் உள்ள ஆச்சரியங்களில் வியக்கத்தக்கது காதல் தான். காதலிக்கும் போது விரும்பி, உருகி, நம்மை உருக்கி காதலிக்கும் தலைவிக்கு ஊரார் அறிந்தவுடன் தயக்கம் வருகிறது. காதலிக்கும் போது உள்ள துணிவு, கல்யாணத்திற்கு வருவதில்லை. அப்போது தான் வாழ்க்கையின் அனைத்து கெடுதல்களும் அவள் கண் முன் வருகிறது. பெண் என்னதான் பேசினாலும், யாரோ ஒருவரை சார்ந்து தான் வாழ வேண்டி உள்ளது. ஒரு கிளையில் இருந்து மறு கிளைக்கும் தாவும் போது, தாவும் கிளை பலம் உள்ளதா என்று ஊகிக்கும் மந்தியின் நிலை தான் பெண்ணின் மனம். முதலில் பெற்றோர், கல்யாணம் ஆனா பிறகு கணவன், பிள்ளைகள் வளர்ந்து விட்டால் பிள்ளைகள் என்று யாராவது ஒருவரின் தோள்கள் தேவைப்படுகின்றன. இப்படி காதலின் அடுத்த நிலைக்கு போக நினைக்கும் தலைவியின் நிலையைத் தான் இந்தப் பாடல் கூறுகிறது.

அந்த காலத்தில் வீட்டில் கொல்லை புறத்தில் மாட்டுத் தொழுவம் இருக்கும். இப்படி இருக்கும் தொழுவத்தில் மாடுகள் கொசு, ஈயின் தொல்லையில் உடலை ஆட்டிக் கொண்டும், சிலிர்த்துக் கொண்டும் தூங்கும். இது இரவு முழுவதும் தொடரும். இப்படி ஆட்டும் போது கழுத்தில் கட்டப்பட்டு இருக்கும் மணி தொடர்ந்து ஒலித்துக் கொண்டு இருக்கும். கவலை இல்லாமல் இருக்கும் ஒருவர் சுலபமாக தூங்க முடியும். பக்கத்தில் பட்டாசு வெடித்தாலும் அவர்கள் தூக்கம் கலையாது. ஆனால் மனதில் கவலையும், யோசனையும் உள்ளவர்கள் தூங்கினாலும் லேசான சத்தம் கேட்டாலும், தூக்கம் கலைந்து விடும். காதல் சோகத்தில் உள்ளவர்களை கேட்கவே வேண்டாம். அவர்களுக்கு தூக்கமே வருவதில்லை. இப்படி தூக்கம் இல்லாமல் இருக்கும் போது நம்மை சுற்றி இருக்கும் சத்தங்கள் நன்கு கேட்கின்றன. இரவில் சத்தம் இடும் வாகனங்கள், காவலாளி கொடுக்கும் விசில் சத்தம், விடியற்காலையில் கேட்கும் கோவில் மணியோசை, மசூதியில் வரும் பாங்கு சத்தம் என்று பலதும்.

இந்த பாடலும் இப்படி தூங்காமல் தவிக்கும் தலைவிக்கு இரவில் தன் தலையை ஆட்டும் மாடுகளின் கழுத்துகளில் கட்டப்படும் மணியோசை தான் கேட்கிறது.

**சிறை பனி உடைந்த சேயரி மழைக் கண்**
**பொறை அரு நோயொடு புலம்பு அலைக் கலங்கி,**
**பிறரும் கேட்குநர் உளர்கொல்? - உறை சிறந்து,**
**ஊதை தூற்றும் கூதிர் யாமத்து,**
**ஆன் நுளம்பு உலம்புதொறு உளம்பும்**
**நா நவில் கொடு மணி நல்கூர் குரலே.**



அதாவது - மேகங்களில் இருந்து உடைந்து வழிந்து துளித்துளியாக விழும் மழைத் துளி போல் கண்ணீருடன் நான் புலம்புவதை கேட்க ஆள் இருக்கிறார்களா? மழைத்தூறலில் வாடைக்காற்று வீசும் பனிக்காலத்தில் ஈயின் தொந்தரவு தாங்காமல் தலையை ஆட்டும் எருது தலை அசைக்க சத்தம் கேட்கும் மணியோசையை நள்ளிரவில் தூங்காமல் கேட்டு நான் புலம்பும் புலம்பலை கேட்க ஆள் இல்லையா?

**ஊரு சனம் தூங்கிடுச்சி,**
**ஊத காத்து அடிச்சிடுச்சி**
**பாவி மனம் தூங்கலையே,**
**அதுவும் ஏனோ தெரியலையே** - என்று பாடும் சினிமா பாட்டும் இந்த குறுந்தொகைப் பாடலின் சாயல் தான்.

---

## சிறுகதை

ஏ.ரா.சுமி

# எதிர்காலம்

எவ்வளவுதான் தொழிநுட்பம், விஞ்ஞானம், கண்டுபிடிப்புகள் என்று உலகம் வளர்ந்தாலும், மனிதன் வெவ்வேறு துறைகளில் வளர்ந்தாலும்....நம்மில் சிலர் இன்னும் இந்த கிளியோசியம், குரங்கு வித்தை, பாம்பாட்டி வித்தை என்பவற்றை நம்பியும் விரும்பியும் இரசித்தும் வாழ்கிறோம்.

ஆசையாசையாய்க் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள் சாந்தினியும் கோபியும். மகிழ்வாகக் கடந்து சென்ற வாழ்வில் பணத்திற்கு எந்தக் குறையும் இல்லை.

ஆறு வருடங்களாகியும் குழந்தைச் செல்வம் இன்னும் இல்லை என்பதை அடிக்கடி மாமியார் குறையோடு இவளை மட்டும் சுட்டிக் கூறுவதை உணர்ந்தவள்.....

மனம் பொறுக்காமல் ஆத்திரப்பட்டு சரிக்குச் சமமாக வீடே அதிரும்படி கத்தி ஆர்ப்பாட்டம் போட்டு.... கவலை தாங்காமல் புறப்பட்டு அம்மா வீட்டுக்கு வந்து விட்டாள்.

இரண்டுவாரங்களாக அம்மாவின் வீட்டோடுகோயில் குளம், யோசியம், விரதம் என்று இருந்து விட்டாள்.

சாந்தினியின் பெற்றோர், தங்கை, கணவன் கோபி எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்பதாக இல்லை.

சாந்தினிக்கு கிளி யோசியம் கேட்பதில் அவ்வளவு விருப்பம்.

இம்முறை பாரேன்.... அந்தக் கிளி எனக்காக எடுத்துப் போடப்போற சீட்ட... என்று தன் தங்கையிடம் விரலைச் சொடக்குப் போட்டுச் சொல்லிவிட்டு...

......வழமையாக வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து காலைப் பூசைக்கு கணபதி கோயிலுக்கு வரும் சாந்தினியும் சர்மிளாவும்..... கோயில் வாசலில் கிளி யோசியம் பார்ப்பது வழக்கம்.

சர்மிளாவிற்கோ இந்த கடவுள், அர்ச்சனை, யோசியம், பக்தி இதிலெல்லாம் சுத்தமாக நம்பிக்கை இல்லை. அக்கா சாந்தினிக்குத் துணையாகவே அவளோடு காலற, கடைவீதி பார்க்க வருவதுதான் உண்மை.

இன்றும் அப்படித்தான்..... பூசை முடிந்து வெளியே வந்த சாந்தினி அந்தக் கிளியோசியருக்கு அருகில் வந்தமர்ந்தாள்.

அவளைக் கண்டதும் அந்தப் பச்சைக்கிளி கனகாவும் கீ...கீ..கீ...என்று ஆனந்தமாக அவளை வரவேற்றுக் கத்தியது.

கிளியின் உரிமையாளர் சாந்தினியைக் கண்டதும்.... தன்னோட கிளியைப் பார்த்து ...

கனகா......உன்னோட வாக்குப்படி...

எங்க ஒரு அருமையான சீட்டு ஒன்னு எடுத்துக் குடுமா.... என்று சொல்லவும்

கனகாவும் கூண்டுக் கதவை வாயால் தள்ளித் திறந்து கொண்டு கட்டாய் அடுக்கிக் கிடந்த சீட்டுக்களில் ஒவ்வொன்றாய் இழுத்துப் போட்டுக்கொண்டே இருந்தது.

இதை சினத்தோடு பார்த்துக் கொண்டிருந்த சர்மிளாவோ பொறுமையிழந்து.....

அக்கா....வாக்கா போலாம். எனக்கும் றொம்ப ஹோம்வோர்க் இருக்குக்கா..

பரீட்ச வேற இருக்கு....

நீ என்னடான்னா சின்னப்பிள்ள மாதிரி வாராவாரம் கிளிக்கிட்ட வந்து உன்னோட எதிர்காலம்பத்தி கேட்டுக்கிட்டு இருக்க....

ஆறறிவு உள்ள உனக்கே உன்னோட எதிர்காலத்த காப்பாத்திக்கத் தெரியாம, 35 கழுத வயசாகியும் யோசிக்கத் தெரியாம, பொறுமைக் காக்கத் தெரியாம, ஐந்தறிவு கிளிக்கிட்ட சீட்டெடுத்து எதிர்காலத்த சொல்லுன்னா.

பாவம்....அதுதான் என்ன பண்ணும்?

என்று சினந்து கொண்டவளாக

அக்காவின் தொலைத்த நிகழ்காலத்தை உணர்த்தும்படி கொஞ்சம் காரமாகச் சொல்லி நிறுத்தினாள்.

தங்கை சர்மிளாவின் சாடைமாடையான இந்த வார்த்தைகளைக் கேட்ட சாந்தினிக்கோ கண்களில் இருந்து கண்ணீர் பொலபொலவென்று வடிந்தது.

ரோசம் பொத்துக்கொண்டு வந்தவளைப்போல் வேகமாக தன் கைப்பையில் இருந்த பணத்தை எடுத்து யோசியக்காரனின் கையில் கொடுத்துவிட்டு சர்மிளாவையும் விலத்திக்கொண்டு எழுந்து நடக்கலானாள்.

அவ்வளவு நேரமும் சீட்டுக்களை ஒவ்வொன்றாக கீழே போட்டுக் கொண்டிருந்த யோசியக்கிளி கனகா அவள் எழுந்து போனதும் ஒரு சீட்டை எடுத்து யோசியக்காரனிடம் கொடுத்தது.

......செல்வம் பெற்று...என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த கிளியின் உரிமையாளர் உரத்த குரலில்.....

தா...யி...உம் பேர்ல செல்வம் பெற்று....அப்டின்னு எழுதியிருக்கு தாயி

என்று சத்தமாகச் சொல்லவும்...

சாந்தினியின் காதுகளில் அவ்வார்த்தை தேனாய் வரமாய் விழவும்....வேகமாகச் சென்றவள் அப்படியை ஒருகணம் நம்ப மறுத்தவளாய்....

வீதியைச் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ஓடோடி வந்து யோசியக்கிளி எடுத்துக் கொடுத்த சீட்டைத் தன் கைகளில் வாங்கி ஒன்றுக்குப் பலமுறை பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்தவளாய் இன்னும் நூறு ரூபாயை கிளியின் உரிமையாளரிடம் கொடுத்துவிட்டு...

தனது எதிர்காலக் கனவுகளோடு அவ்விடத்தில் நின்றபடியே தனது ஆசைக்கணவன் கோபிக்கு அழைப்பை ஏற்படுத்தி தான் வீட்டுக்கு வருகிறேன் எனவும், தன்னைக் கூப்டிப்போக வரும்படியும் கொஞ்சம் வெட்கத்தோடு கெஞ்சலாகச் சொல்லிவிட்டு வேகமாக நடந்தாள்.

# இலக்கியத்துளி

ஒட்டக்கூத்தர் ஒரு பெரும்புலவர். தன் மன்னனான சோழனுக்குப் பெண்கேட்டுப் பாண்டியனிடம் செல்கிறார். பாண்டியனும் அவரைச் சீண்ட வேண்டுமென்ற எண்ணத்தினாலோ என்னவோ, பாண்டியர் குடும்பத்திற் பெண் எடுப்பதற்குச் சோழனுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்டுவிட்டான்.

ஒட்டக்கூத்தருக்குக் கோபம் வந்துவிட்டது. சோழன் ஏறும் குதிரையான கோரத்துக்கு நீ ஏறும் குதிரையான கனவட்டம் நிகராகுமா? சோழநாட்டு நதியான காவிரிக்கு உன்னாட்டு நதி வைகையை ஒப்பிடக் கூடுமோ? ஆத்திமாலைக்கு உன் வேப்பம்பூ மாலை இணையாகுமா? சோழன் என்கிற ஆதவனுக்கு முன்னால் பாண்டியன் என்கிற சந்திரன் ஒளிவீச இயலுமோ? மீன்கொடியைக் கொண்ட மீனவனான உன்னால் வீரருக்கெல்லாம் வீரனாகிவிட முடியுமா? எங்குமே வெற்றியைக் குவிக்கின்ற புலிக்கொடிக்கு நிகராக உன் மீன்கொடியை உயர்த்திப் பிடிக்கலாகுமா? உன் கொற்கை நகரத்தைச் சோழனின் உறந்தை நகருக்கு ஒப்பிடல் சரியோ? உன் பாண்டிநாடு எங்கள் சோழநாட்டுக்கு எந்த வகையிலேனும் ஈடாகுமா? என்றெல்லாம் கேட்டுவிடுகிறார்.

இதற்குப் பாண்டியன் பதில் சொல்லவில்லை. மாறாக, ஒட்டக்கூத்தரின் தமிழ்வீச்சில் மயங்கிக் கிடந்தான். ஆனால் அவனது அரசவைப்புலவர் புகழேந்தியாருக்குக் கோபம் வந்து விட்டது. சோழநாட்டிலிருந்து வந்தவன் பாண்டிய மன்னனையும் நாட்டையும் இகழ்வதா என்று துடித்துப் போனார். வழக்கமாகவே ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்தியாருக்கும் இணக்கம் இருப்பதில்லை. எனவே, கிடைத்த வாய்ப்பை நழுவ விடுவாரா? அவர் பதிலளிக்கிறார்.

திருமாலின் அவதாரமாமோ சோழநாட்டுச் சிறு புலி? சிவன்முடியில் என்ன செங்கதிரா இடம்பிடித்தது? தமிழ்மொழி சிறப்படைந்தது உங்கள் நாட்டு மலையிலோ? சிவபெருமானின் திருவிளையாடல்கள் உன் உறந்தை நகரிலா இடம்பெற்றன? ஆற்றையெதிர்த்து ஏடு கரையேறிய அற்புதம் உனது காவிரி நதியிலா இடம்பெற்றது? பகைவென்ற வேம்புக்கு நிகராக வெற்று அலங்காரங்கொண்ட அத்திமாலையை ஒப்பிட இயலுமா? அலைகடல் என்ன சோழனின் பாதத்திலா பணிந்து நிற்கிறது? பாண்டியவேந்தின் பராக்கிரமத்தைச் சொல்லவுங்கூடுமோ? என்று சீறி விழுகிறார்.

இப்போதும் பாண்டியன் அசையவில்லை. தமிழன்னைக்குப் புலவர்களின் கோபத்தாற் கிடைத்த இரு பாடல்களையும் எண்ணி வியந்தபடியே அமர்ந்திருக்கிறான்.

இவைதாம் அப்பாடல்கள்:

**கோரத்துக் கொப்போ கனவட்ட மம்மானை**
**கூறுவதுங் காவிரிக்கு வையையோ வம்மானை**
**ஆருக்கு வேம்பநிக ராகுமோ வம்மானை**
**ஆதித்தனுக் குநிகர் அம்புலியோ வம்மானை**
**வீரர்க்குள் வீரனொரு மீனவனோ வம்மானை**
**வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ வம்மானை**
**ஊருக் குறந்தைநிகர் கொற்கையோ வம்மானை**
**ஒக்குமோ சோணாட்டுக் குப்பாண்டிநா டம்மானை?**

(இது ஒட்டக்கூத்தர் பாண்டிநாட்டைவிடச்
சோழநாடே சிறந்தது எனப்பாடியது.)

**திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ வம்மானை**
**சிவன்முடியி லேகுவதுஞ் செங்கதிரோ வம்மானை**
**ஒருமுனிவ னேரியிலோ வுரைதெளிந்த தம்மானை**
**ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ வம்மானை**
**கரையெதி ரேடேறியது காவிரியோ வம்மானை**
**கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ வம்மனை**
**பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனிலோ வம்மானை**
**பாண்டியனார் பராக்கிரமம் பகரெளிதோ வம்மானை?**

(இது பாண்டிநாடே மேம்பட்டதெனப்
புகழேந்தியார் பாடியது.)


- கந்தவனம் கோணேஸ்வரன் -

# கலைக் கதிர்



## கவிதாயினி தில்லையின்

## முதலாவது கவிதை தொகுதி 'விடாய்' பற்றி ஒரு பார்வை




இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட பாரம்பரியம் மிகுந்த தமிழ் கவிதை வரலாறானது ஆண்கவிஞர்களுக்கு கட்கு மட்டும் சொந்தமானதல்ல என்பது தமிழ் மொழிக்கான சிறப்பான அடையாளமாகும். தமிழில் நவீன கவிதைகளை பொறுத்தவரைக்கும் தொண்ணூறுகட்கு பின்னரேயே பெண் கவிஞர்களின் குரலானது வலிதானதாகவும் வீறுமிகுந்ததாகவும் ஒலிக்கத் தொடங்கியது. இந்த கவிதாயினிகள் கையாண்ட மொழி மற்றும் அனுபவங்கள் என்பன அவர்களை ஆண் கவிஞர்களிடமிருந்து வேறுபிரித்து காட்டிற்று. ஆயினும் பெண்கவிஞர்களின் பெரும்பாலான கவிதைகளும் தொகுப்புக்களும் பெண்களின் உடல் அரசியல் குறித்தே பேசின. அதாவது அகநிலை சார்ந்த படைப்புக்களையே கவிதாயினிகள் அதிகமதிகமாக பிரசவித்தனர்.

மட்டக்களப்பில் பிறந்து தற்போது சுவிஸ் நாட்டில் வதிந்துவரும் கவிதாயினி தில்லை அவர்களின் முதலாவது கவிதை தொகுதியான விடாய் தொகுப்பானது வழமையான பெண் கவிஞர்களின் தொகுப்புக்களிலிருந்து வித்தியாசமான ஒன்றாக விளங்குகின்றது. கவிதையின் பாடுபொருட்களில் பெண்களின் உடல் அரசியல் இருந்தாலும் இந்த கவிதைகள் அது குறித்து மட்டுமே பேசவில்லை. மாறாக சிறுவயதிலிருந்து தன் மீது காட்டப்பட்ட பாரபட்சங்கள், தனது வலிகள், இன வன்முறைகள், தொன்மங்கள், தனது பிரதேசங்கள் குறித்தெல்லாம் இவரது கவிதைகள் பதிவு செய்கின்றன. இது இந்த தொகுதிக்கு ஒரு பிரபஞ்சதன்மையினை வழங்குகிறது என்றால் அது மிகையல்ல.

**எப்படி இருக்கிறாய்?**
**இப்படி ஆரம்பிப்பதில் கூட**
**எனக்கு சிக்கல் இருக்கிறது (பக்.70,)**

காலமும் நம்பிய நேசமும் தந்த மீதங்களின் மீது உழலும் மனத்தின் பிதற்றல் இவ்வாறு இருக்கிறது. சாதாரணமான நலம் விசாரிப்பிலும் கூட எத்தனையோ சங்கடங்கள்.

**சில வருடங்களுக்கு முன்னர்**
**எந்த புள்ளியில் விட்டு போனாயோ**
**நான் அந்த புள்ளியில் இல்லை(பக்.70)**

காதலின் பிரிவைக் கூறுகின்ற வரிகளாக நீளும் வாழ்ந்து முடித்த கதை வெறுமனே வார்த்தைகளாலன்றி கட்டற்ற வெளியில் நடமாடும் அகத்தின் காட்சிகளாய் விரிகிறது.

சாவு விழும் தேசம் கவிதையானது தமிழினம் கடந்து வந்த அவலங்களை மீளநினைவூட்டும் கவிதையாக அமைகின்றது. ஒரு பெருநம்பிக்கை சுக்கு நூறாய் நொருங்கி உடைந்து போன நெய்தல் நிலப் பரப்பினை இவ்வாறு காட்சிப்படுத்துகிறார் கவிதாயினி.

**சூரிய பொழுதொன்றுக்காய்**
**மரணத்தையும் ஏற்றோம்.**

**எங்கள் கைகளால்**
**விடுதலை எழுதி எழுதி**
**நிமிர்ந்த கடற்கரைக்கு**
**நேரெதிரில் தெரியும்**
**திசையை பாருங்கள்!**
**இதுதான் எங்கள்**
**சாவு விழும் தேசம்!**

பொதுவாகவே தாய்மை அல்லது தாய் குறித்தான உயர் விம்பங்கள் எழுப்பப்பட்டிருக்கும் தமிழ் கவியுலகில் தில்லையின் எனக்கம்மா கவிதையானது ஒரு எதிர்ப்பிரதியாக தன்னை முன்னிலைப்படுத்துகிறது. தாயின்ற தான் துயின்ற இரவுகளின் அவதிகளை இவ்வாறு கூறுகிறார் கவிதாயினி.

**காகம் கோழியென**
**நான் கொத்துண்ட**
**ஒவ்வொரு பொழுதிலும்**
**நான் பட்ட வேதனைகள்**
**உனக்கெங்கே புரியும்**

**உன் ஏக்கம் மட்டும்**
**என் அடிநெஞ்சில் உறங்கினாலும்**
**உன்னைப்போல்கையகலாப்பெண்களைவெறுக்கிறேன்**

இந்த தொகுதியின் பெரும்பாலான கவிதைகள் கவிதை சொல்லியின் வாழ்வியல் அனுபவங்கள் குறித்த தன்னிலை சார்ந்த கவிதைகளாய் விரிந்தாலும் அதற்குமப்பால் தான் வாழ்ந்த தேசம், கிராமம் மற்றும் தொன்மங்கள் மீதான நினைவுகொள்ளல் என பல்வேறு பேசுபொருள்களையும் கொண்டுள்ளதை காணலாம்.

அண்மையில் வந்த தொகுப்புக்களிலே அதிக கவனத்தை பெற்றிருக்கும். இந்த தொகுதியானது பெண் மொழியினை இன்னோர் தளத்திற்கு மாற்றியுள்ளது எனலாம்.

- லலிதகோபன் திருகோணமலை -

# பார்க்க வேண்டிய ஜாதகம்

தோய்ந்து செல்லும் நிதர்சனங்களில்
அடுக்கடுக்காய்ச் சில்லறைப் பொய்கள்

பாதி அவிழ்ந்த மேகமாய்
பறித்துச்செல்கிறது நீதி
கேடயம் அணிந்த குப்பைக்கூழத்தில்
சட்டம் விழுந்து சாராம்சம் செய்கிறது

பரீட்சயமில்லா பார்வைகளும்
மெய்மொழியா வர்க்கங்களும்
பஞ்சத்தில் பகிரங்க வாதம்
மேன்மை கொள் நீதியென்று,
மேடையில் மட்டும் வாக்குவாதம்.
கந்தல் ஆடையாக காலம் கேலி செய்ய!
உப்புக்கஞ்சி உணவாக,
ஊர் விட்டு ஊர் ஓடும்

தற்கால நீதி மட்டும்
தவறாமல் தரிசனம் செய்ய!
பிற்கால சந்ததி
பிணமாக பிறப்பெடுக்கும்

- சுருதி திருகோணமலை -

# மனதின் தடங்கள்

அலையே – நீ
நுரைகளை வீசும்போதெல்லாம்
என் சுவாசம்
பெருமூச்சாகி ஓய்கிறது

எத்தனை தடங்களை
அழித்த போதும்
உள்ளே நகர்ந்து
அடுத்த அழிப்புக்காய்
ஆயத்தமாகிறாய்...
கருணையற்ற அலையே

நான் தேடிவந்ந கால் தடங்கள்
என் கண்ணுக்குள்
மட்டுமா காட்சி..

மனமதுவும் உனைப்போல
ஊசலாடினாலும்
நினைவுகள் எனும்
தடங்கள் தனை
அழிக்கத்தான் முடியவில்லை...

கனக.தீபகாந்தன்

# எண்ணம்போல் வாழ்க்கை




**"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்**
**திண்ணியர் ஆகப்பெரின்"** – என வள்ளுவர் பல ஆயிரம் ஆண்டுகள் முன்பே கூறிய பின்பும்,
**"எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணவேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்"**
என மகாகவி பாடிய பின்புமே ,

எண்ணம்போல் வாழ்க்கையா என்ற இக்கேள்வி எழுகிறது என்றால் இதற்கு அறிவியல் ரீதியான விளக்கம் தான் சிறந்தது.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் மாசறு எமோட்டோ **(Masaru Emoto)** என்பவர், நம் எண்ணங்களுக்கு அதிக சக்தி இருக்குறது என்றும், நம் எண்ணங்களின் மூலம் நமக்கு ஏற்படும் உணர்வு மற்றும் நாம் பேசும் வார்த்தைகள் தான் நம் வாழ்வை வடிவமைக்கிறது என உறுதியாக இருந்தார். இதை நிரூபிக்க அவர் எடுத்துக்கொண்ட கருவி.

**நீர்**

நீர் இன்றி அமையாது உலகு, நம் பூமி 70 சதவிகிதம் தண்ணீரால் சூழப்பட்டது. நீர் இன்றி அமையாது உடல், நம் உடலும் 60 சதவிகிதம் தண்ணீரால் உண்டானதே. நீருக்கு நாம் நினைப்பதை விட சக்தி அதிகம். எமோட்டோ தண்ணீரை அடிப்படையாய் வைத்து ஒரு ஆய்வை மேற்கொண்டார்.

இரண்டு கண்ணாடி நீர் குடுவையில் அன்பு **(Love)**, நன்றி **(Thank you)** போன்ற நேர்மறை வார்த்தைகளை குடுவையின் உட்புறத்தில் ஒட்டி, அதே போல் நீ ஒரு முட்டாள், உன்னால் முடியாது போன்ற எதிர்மறை வார்த்தைகளை மற்றோரு குடுவையின் உட்புறத்தில் ஒட்டி, அவைகளில் நீரை நிரப்பி, சில மணி நேரம் கழித்து அந்த தண்ணீரை உறைய வைத்து,அதை மைக்ரோஸ் கோப் வழியாக பார்க்கும்போது, நேர்மறை எழுத்துக்களை எழுதிய குடுவையின் நீர் படிகள் **(Water Crystals)** அழகிய **Symmetrical** வடிவத்தோடும், எதிர்மறை எழுத்துக்களை எழுதிய குடுவையின் நீர் அகோரமாக **unsymmetrical** வடிவத்தை பெற்றிருந்தன.

அதேபோல் நேர்மறை மற்றும் எதிர்மறை வார்த்தைகளை நீரின் முன்பு வெளிப்படுத்தும் போதும்,நேர்மறை வார்த்தைகளுக்கு அழகிய வடிவமும், எதிர்மறை வார்த்தைகளுக்கு கோர வடிவமும் மைக்ரோஸ்கோப்பில் காணப்பட்டது.

நம் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை நீரால் கிரகிக்க முடிகிறது, நம் எண்ணங்களால் நீரின் மூலக்கூறுகலில் **(Water Molecules)** தாக்கத்தை ஏற்படுத்த முடியும், தண்ணீருக்கு உணர்வு உண்டு என மிக முக்கியமான கண்டுபிடிப்பை டாக்டர் எமோட்டோ கண்டுபிடித்தார்.

ஜப்பான் நாட்டில் பியூஜிவாரா அணை **(Fujiwara Dam)** மிகவும் மாசு படிந்து துர்நாற்றம் வீசியது. அந்த அணையின் நீர் மாதிரியை எடுத்து, எமோட்டோ பரிசோதித்தபோது, நீர் படிகள் அகோர வடிவத்தில் இருந்தது.

சில புத்த துறவிகளை அணைக்கு அழைத்து சென்று, பிராத்தனை, தியானம் போன்று நேர்மறை எண்ணங்களை விதைத்து, பிறகு அந்த நீரை பரிசோதித்தபோது, நீர் படிகள் அழகிய வடிவைத்த பெற்றதாம்.துர்நாற்றம் நாளடைவில் குறைந்ததாம்.

மனிதனின் எண்ணங்கள், தன்னை மட்டும் அல்லாமல் தன்னை சுற்றிருப்பவர்களையும், சுற்றுசூழலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எமோட்டோ தான் எழுதிய **Hidden Messages in Water,The Miracle of Water,Water Crystal Healing** புத்தகங்களின் மூலம் தெரிவித்தார்.

மேலே கூறியது போல் ,நம் உடலும் 60 % நீரால் ஆனதே .நம் எதிர்மறை எண்ணங்கள், நம் உடலை பாதித்து **Psychosomatic disorders** அதாவது மனநிலை கோளாறுகள் உண்டாகி பல நோய்களுக்கு காரணிகளாகின்றன.

டோபாமின் மற்றும் கார்டிசோல் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

நம் மூளை, 73 % நீரால் ஆனது. டோபாமின் **(Dopamine).**

மனித மூளையை **Complicated Organ** என்று அழைப்பார்கள் .நம் மூளையில் கிட்டத்தட்ட 100 பில்லியன் நியூரான்ஸ் **(Neurons)** உள்ளன.

டோபாமின் எனும் ஹார்மோன் நம் உடலில் பல பணிகளை செய்கிறது. மிக முக்கியமாக, நம் மூளைக்கு நியூரோவ் டிரான்ஸ்மீட்டராக **(Neuro Transmitter)** பணி செய்கிறது.

எளிதாக கூறவேண்டும் என்றால்,நம் மூளையில் உள்ள நியூரான்ஸ்களுக்கு இடையே சிக்னலை பரிமாறும் ஒரு மெஸ்சேன்ஜர்**(messenger)** பணி .டோபாமின்னுக்கும் இன்னொரு பெயர் உண்டு. ஹாப்பி ஹோர்மோன் **(Happy hormone)** என்ற பெயர். **It is a feel good hormone.**

உங்கள் எண்ணங்கள் நேர்மறையாக இருந்தால்,இந்த டோபாமின் ஹோர்மோன் உங்கள் மூளையின் செயல்திறனை அதிக படுத்தும். தன்னம்பிக்கை, **Self Motivation**,தெளிவான சிந்தனை போன்ற அனைத்து நல்ல விடயங்களும் உங்களுக்கு உங்களின் மூளையின் உதவியால் ஆக்டிவேட் ஆகி விடும்

### கார்டிசோல் (Cortisol)

கார்டிசோல் , அட்ரீனல் சுரப்பியில் உண்டாகும் ஒரு ஹோர்மோன்.இதற்கும் நம் உடலில் பல பணிகள் உண்டு. நீங்கள் நேர்மறையாக சிந்திக்கும் வரை எந்தச் சிக்கலும் இல்லை, நீங்கள் எதிர்மறையாக எண்ணினால் இந்த ஹார்மோன் ட்ரிகர் ஆகிவிடும். அது நேராக உங்கள் நரம்பு மண்டலத்தை **(Central Nervous system)** தாக்கும்.

எளிதாக கூறவேண்டும் என்றால்,கார்டிசோல், மூளையின் முக்கியமான பாகங்களில்**( peripheral cortex)** பாதிப்பை ஏற்படுத்தும் .அதாவது உங்களது சிந்திக்கும் திறன், மன்னிக்கும் தன்மை,பகுப்பாய்வு,**Problem solving** போன்ற முக்கியமானவற்றை முழுவதும் **shut down** செய்து விடும். இதனால்,மன அழுத்தம் உண்டாகி பல நோய்களுக்கு வித்திடும்.

மேலும், இதனால் தான் கோபத்தில் நாம் எந்த முடிவும் எடுக்க வேண்டாம் என கூறுகின்றனர்.

கார்டிசோலுக்கு இன்னொரு பெயர் உண்டு, ஸ்ட்ரெஸ் ஹோர்மோன் **(Stress Hormone)**

டோபாமின் மற்றும் கார்டிசோல் இரண்டும் உடலில் சரியான அளவில் இருக்கும் வரைக்கும் சிக்கல் இல்லை.அளவுக்கு மீறினால் ஆபத்தே .

உதாரணம் :- நாம் ஒவ்வொருவரும் சில விடயங்களை பிடித்து மிக ஆர்வமாக செய்வோம்.பிறகு அதற்கு அடிமையாகி விடுவோம் அல்லவா. இதற்கு காரணம், அளவுக்கு அதிகமான டோபாமின் தான்.

அதேபோல், கார்டிசோல் அளவு அதிகமானால், ஏற்கனவே கூறியது போல் மன அழுத்தத்தில் தொடங்கி,பல நோய்கள் உண்டாகும். மறந்து விடாதீர்கள், உங்கள் எண்ணத்திற்கு அதிக சக்தி உண்டு நல்லதே நினைப் போம். நல்லதே நடக்கும் – எண்ணம் போல் வாழ்க்கை .

# தனிமை மற்றும் வேதனைகள் தராத வாழ்க்கைத் துணை



புரிந்து கொண்டு நடந்து கொள்ளும், தனிமை மற்றும் வேதனைகள் தராத வாழ்க்கை துணையால் 50 சதவிகிதம் நிம்மதி கிடைத்து விடும். ஆங்கிலத்தில் பெட்டெர் பாதி ( better half) என்பர். இது இப்படி அமையவில்லை என்றால் பிட்டர் பாதி (bitter half) ஆகி விடும்.

மிகவும் பண்பான, புத்திசாலியான, அடக்கமான குழந்தைகள் 25 சதவிகிதம் இது அடுத்த கட்டம் – இதில் பிரச்சினைகளை சமாளிக்க, அது தான் நம் சேமிப்பு இருக்குமே பணத்திலிருந்து , பொறுமையிலிருந்து, புண்ணியத்திலிருந்து – அதை கரைக்க மனதால் முடிவு பண்ணிக்கொள்ள வேண்டும்.

மீதம் – 20 சதவிகிதம் மற்ற குடும்ப உறுப்பினர்கள், நம் உடல், மன ஆரோக்கியம், வேலை, சேமிப்பு, பெயர், புகழ் இப்படி பல விடயங்கள் அடக்கம்.

5 சதவிகிதம் – இறை சிந்தனை உண்மைக்கான தேடல், மேற்கூறிய இடங்களில் பிரச்சினை வர வர பல விதமான சங்கடங்கள் வர வர இந்த 5, 50 என்பதை தாண்டி 90 சத விகிதம் போனாலும் வியப்பதற்கு இல்லை.



- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

# சர்வதேசத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்

## அவர் புனிதரான கதையும் அவரைச் சந்தித்த புதுமையான அனுபவமும்

கடந்த வார ஆக்கத்தில், நான் திருத்தந்தையைச் சந்திக்கப் புனித பேதுறுவானவர் சதுக்கத்திற்கு வந்து மண்டபத்தின் உள்ளே சென்று காத்திருந்த போது என் மனதில் ஓடிய - திருத்தந்தையை முகமது அலி அகா திருத்தந்தையைச் சுட்டுக் காயப்படுத்திய - சம்பவம் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருந்த போது அதைக் கலைக்கும் விதமாக திருத்தந்தை வரப்போகிறார் என்பதை அறிவிக்கும் இசை கேட்டது என்பதைக் குறிப்பிட்டிருந்தேன்.

திரும்பிப் பார்த்தேன். மண்டபம் நிறைய இவ்வளவு ஆள்கள் இருந்தும் யாருமே எதுவுமே பேசவில்லை. எந்தச் சப்தமும் எங்கிருந்தும் வரவில்லை. திருத்தந்தையை நெருக்கமாகப் பார்க்கப் போகிறோம், அந்தத் தெய்வ மனிதனின் ஆசீரைப் பெறப்போகிறோம் என்ற எண்ணமே மேலோங்கி இருக்க, உலகின் பல நாடுகளிலும் இருந்து வந்த மக்கள் அனைவரும் அமைதியாக இருந்தனர்.

அந்த நேரம் வந்தே விட்டது. தூது வரும் தேவ புறாவாய் வெண்ணிற ஆடையில் திருத்தந்தை மெல்ல அடியெடுத்து வந்தார். சற்று முதிர்ந்தவரான அவரை இரு கருதினால்மார் அழைத்து வந்தனர்.



மக்கள் கூட்டத்தைப் பார்த்து தம் கைகளை அகல விரித்து அசைத்து ஆசீர்வதித்தார் திருத்தந்தை. இவ்வளவு நேரமும் இந்தக் கத்துக்காகத்தான் காத்திருந்தமை போல் மக்கள் வானதிரக் கத்தினர். தத்தம் மொழிகளில் வாழ்த்தினர். சற்று நேரம் யார் என்ன பேசுகின்றனர் என்பதே புரியவில்லை.

உலகின் பல பாகங்களிலும் இருந்து வந்து மக்களின் வாழ்த்துக்களையும் ஆர்ப்பரிப்புக்களையும் கேட்டுக் கொண்டிருந்த திருத்தந்தை தனது இடத்தை வந்தடைந்தார். மக்கள் அமைதியடைந்தனர்.

திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் கத்தோலிக்க திருச்சபையின் 264ஆவது திருத்தந்தை ஆவார். இவர் 26 ஆண்டுகள் 168 நாள்கள் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக பணியாற்றினார். இதுவரை பணியாற்றிய திருத்தந்தையர்களில் போலந்து நாட்டைச் சேர்ந்த முதலாவது திருத்தந்தை இவராவர். மேலும் 1520க்கு பின்னர் இத்தாலியர் அல்லாத ஒருவர் திருத்தந்தையானதும் இதுவே முதற்தடவையாகும். இவர் 1978ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதி பதவியேற்றார். வரலாற்றில் நீண்ட காலம் இப்பதவியில் இருந்தவர்களில் இரண்டாம் இடம் பிடித்தவர்.

### அருளாளர் பட்டம்

திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் இறந்த சிறிது காலத்திற்குள்ளேயே அவருக்குப் புனிதர் பட்டம் அளிப்பதற்கான விசாரணை தொடங்கியது. வழக்கமாக இவ்வகையான விசாரணை தொடங்குவது ஒருவரது இறப்புக்குப் பின் ஐந்து ஆண்டுகள் கழித்தே ஆகும். ஆனால் இரண்டாம் யோவான் பவுலை விரைவில் புனிதராகக் காண பொதுமக்கள் விரும்பியதைத் தொடர்ந்து திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அந்த விசாரணை உடனடியாகத் தொடங்க ஆணையிட்டு ஐந்து ஆண்டு தாமதக் காலம் வேண்டாமென்று விதிவிலக்கு அளித்தார்.

திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் 2009 டிசெம்பர் 19ஆம் திகதி திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலை வணக்கத்திற்குரியவர் என்று அறிவித்தார். பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த ஒரு கன்னியர் இரண்டாம் யோவானை நோக்கி மன்றாடியமையைத் தொடர்ந்து பார்க்கின்சன் நோயிலிருந்து திடீரெனக் குணம் பெற்றமையை ஆராய்ந்த வத்திக்கான் பேராயம் அந்நிகழ்ச்சி இறையருளால் நிகழ்ந்ததே என்று அறிக்கையிட்டதைத் தொடர்ந்து திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் 2011 மே மாதம் முதல் நாளன்று திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

### புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுதல்

திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலுக்கு அருளாளர் பட்டம் அளிக்கப்பட்ட சில மணி நேரம் சென்ற உடனேயே அவருடைய பரிந்துரையின் பயனாக ஒரு புதுமை நிகழ்ந்ததாக செய்தி வந்தது. கோஸ்தாரிக்கா நாட்டு புளோரிபெத் மோரா என்ற பெண்மணிக்கு ஏற்பட்ட மூளை இரத்த அழற்சி திருத்தந்தை இரண்டாம் யோவானை நோக்கி மன்றாடியதன் விளைவாக அற்புதமான விதத்தில் மறைந்ததாகவும் அதற்கு மருத்துவர்களால் விளக்கம் தர இயலவில்லை என்றும் செய்தி வெளியானது. இந்த நிகழ்வை ஆய்ந்த வத்திக்கான் பேராயம் அதை ஒரு புதுமை என்று அறிக்கையிட்டது.

2013 ஜூலை மாதம் 4ஆம் நாள் திருத்தந்தை பிரான்சீஸ் ஆணைப்படி திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலுக்கு விரைவில் புனிதர் பட்டம் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதே தருணத்தில் திருத்தந்தை இருபத்திமூன்றாம் யோவான் புனிதராக அறிவிக்கப்படுவார் என்றும் தகவல் தரப்பட்டது.

இரு திருத்தந்தையர்களுக்கும் புனிதர் பட்டம் 2014 ஏப்பிரல் 27ஆம்திகதி வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி பல சிறப்பு அம்சங்களைக் கொண்டது.

### இரு திருத்தந்தையர் புனிதர்களாக அறிவிக்கப்படுதல்

இரண்டாம் யோவான் பவுல், இருபத்திமூன்றாம் யோவான் ஆகிய இரு திருத்தந்தையருக்கும் ஒரே நாளில் ஒரே நிகழ்ச்சியின்போது புனிதர் பட்டம் வழங்கப்பட்டது ஒரு சிறப்பு நிகழ்வாயிற்று.

அதுபோலவே திருத்தந்தை பிரான்சீஸ் தமக்கு முன் திருத்தந்தைப் பணியை ஆற்றி அப்பதவியிலிருந்து விலகிய முன்னாள் திருத்தந்தையான பதினாறாம் பெனடிக்டோடு இணைந்து பொதுமக்களுக்குமுன் திருப்பலி நிறைவேற்றி அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டமையும் வரலாற்றுச் சிறப்பானதாகும்.



திருச்சபைத் தலைவர்கள் மற்றும் திருப்பயணிகள் பங்கேற்பு

புனிதர் பட்டம் வழங்குவதற்காகத் தேர்ந்துகொள்ளப்பட்ட நாள் 2014 ஏப்பிரல் 14 ஞாயிற்றுக் கிழமை கத்தோலிக்கருக்குச் சிறப்பான நாள். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வருகின்ற அந்த ஞாயிற்றுக் கிழமைக்கு முந்திய மாலையில்தான் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் இறந்தார். மேலும் பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறான அந்த நாள் இறை இரக்க ஞாயிறு கொண்டாடப்பட வழிவகுத்தவர் இரண்டாம் யோவான் பவுல்.

புனிதர் பட்டமளிப்பு நிகழ்ச்சியின்போது மறையுரை ஆற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் தமக்கு முன் திருத்தந்தைப் பணியை ஆற்றிய இரு புதிய புனிதர்களான திருத்தந்தையரின் சிறப்புகளையும் எடுத்துரைத்தார்.

அவர்கள் இருவரும் கடவுளின் இரக்கத்தை வலியுறுத்தினார்கள் என்று அவர் கூறினார். திருத்தந்தை இருபத்திரண்டாம் யோவான் வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்டி (1962 - 1965) இருபதாம் நூற்றாண்டுத் திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் குடும்பங்களை ஆதரித்து வளர்த்தார்.

திருத்தந்தை பிரான்சீஸ் நிகழ்த்திய புனிதர் பட்டமளிப்பு விழாவில் அவரோடு முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் கூட்டுப் பலி நிறைவேற்றினார். மேலும் உலகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்த சுமார் 150 கர்தினால்மார், 700 ஆயர்கள் மற்றும் 1,000 குருக்களும் கலந்துகொண்டனர்.

புனிதர்களாக அறிவிக்கப்பட்ட இரு திருத்தந்தையர்களின் மீபொருள்கள் வெள்ளிப் பேழைகளில் கொண்டுவரப்பட்டு மக்களின் வணக்கத்திற்கு வைக்கப்பட்டன. திருத்தந்தை யோவானின் உடல் புனித பேதுரு பெருங்கோவிலின் கீழ்க்கோவிலிலிருந்து மேற்கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டபோது அவருடைய உடலிலிருந்து எடுக்கப்பட்ட




தோல் பகுதி அவருடைய மீபொருள் ஆனது.

### புதிய புனிதர்களின் மீபொருள்கள்

திருத்தந்தை இரண்டாம் யோவானின் மீபொருளைக் கொண்டுவந்தவர் அவருடைய பரிந்துரையால் குணம் பெற்ற பிளோரிபெத் மோராடியாஸ் என்னும் கோஸ்தாரிக்கா நாட்டுப் பெண்மணி. அவர் கொண்டு வந்தது திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலின் உடலிலிருந்து அவர் 2005இல் இறப்பதற்குமுன் மருத்துவப் பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட அவரது இரத்தம் அடங்கிய பேழை.

புதிய புனிதர்களின் உருவங்கள் சித்திரிக்கப்பட்ட பிரமாண்டமான தொங்குதிரைகள் புனித பேதுரு பெருங்கோவிலின் முகப்பிலிருந்து தொங்கவிடப்பட்டிருந்தன. பீடத்தைச் சுற்றிலும் 30 ஆயிரம் மலர்கள் அணிசெய்தன. அம்மலர்களை எக்குவடோர் நாடு நன்கொடையாக அளித்திருந்தது.

### உலக நாடுகள் பங்கேற்பு

சுமார் 500 ஆயிரம் திருப்பயணிகள் கோவில் வளாகத்திலும் அதன் முன்னடைபர் நைதி நோக்கிச் செல்லும் பெருஞ்சாலையிலும் கூடி நின்று பங்கேற்றனர். போலந்து நாட்டவரான திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலுக்கு வணக்கம் செலுத்த வந்திருந்த ஆயிரக்கணக்கான போலந்து திருப்பயணிகள் தம் நாட்டுக் கொடியை அசைத்தவண்ணம் நின்றனர்.

93 உலக நாடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தப் புனிதர் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. அவற்றுள் 19 தூதுக்குழுக்கள், நாட்டு அதிபர்கள் தலைமையின் கீழும் 24 குழுக்கள், நாட்டுப் பிரதமர்களின் தலைமையின் கீழும் வந்தன. எசுப்பானியாவின் அரசரும் அரசியும் பெல்ஜியத்தின் முன்னாள் அரசியும் பங்கேற்றனர்.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் 20 ஜனவரி 1995ஆம் ஆண்டு இலங்கையின் முதற் புனிதர் யோசவ் வாஸ் அடிகளாரை அருளாளர் என அறிவிக்க கொழும்பு வந்தபோது கொழும்பு மறைமாவட்டத்தின் அப்போதைய பேராயர் அமரர் நீக்கிலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை, அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க, அவரின் அன்றைய பிரதமர் அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோருடன் எடுக்கப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த படம் ஒன்றை இவ்வாக்கத்துடன் இணைத்துள்ளேன்.

(தொடரும்)

N Flash Super Detergent

## வேலை வாய்ப்பு

**வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்**

தலைமை கணக்காளர் - 20 வருட அனுபவம்
கணனி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்
சாரதி – Light vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)

மேற்பார்வையாளர் - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர் - வாகன உதவியாளர் (பெண்)
ஆசிரியர் - தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள் தேவை
இலத்திரனியல் வெதுப்பக வேலையாள் - ஆண் (முன் அனுபவம் உடையோர்)
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் போன்ற நொறுக்குத்தீனிகள் தயாரிப்பவர்கள் (ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி – விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை. தகுதிவாய்ந்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி – 186/11 NFlash super detergent
நெசவுசாலை வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607 A கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


# வடக்கில் தற்போது மலேரியா நோய்ப் பரவல் அனர்த்த நிலையேற்பட்டுள்ளது என எச்சரிக்கை!

வட மாகாணத்தில் தற்போது மலேரியா நோய் பரவும் அனர்த்த நிலையேற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மலேரியா நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பிரசாத் ரணவீர இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

நான்கு வார காலத்திற்குள் 4 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நோயாளரை அடையாளம் காண்பதன் மூலம் அது ஆயிரம் நோயா ளர்களின் ஆரம்பமாக அமையும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நான்கு நோயாளர்களும் யாழ்ப்பாண மாவட்டத் தில் பதிவாகியிருக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நோய் பரவும் அபாயம் இருப்பதாக குறிப்பிட்ட அவர், ஏனைய மாவட்டங்களில் இந்த நோய் பரவும் அனர்த்த நிலை இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி 2 நோயாளர்கள் யாழ்ப்பாணத்தில் பதிவாகியிருந்தனர்.

இதன்பின்னர் இரண்டு வாரங்களில் மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கை ஒரு சிறிய நாடு எனவும், இவ்வாறான நாட்டில் ஒரு பிரதேசத்தில் நோய் அனர்த்த நிலை இருக்கின்றது என்பது அது நாட்டுக்கே அனர்த்த நிலையாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் நாம் மகிழ்சியடைய முடியாது எனவும் சுகாதார அமைச் சின் மலேரியா நோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்த நிலையில் இருந்து யாழ்ப்பாணத்தை மீட்டெடுப்பதற்காக மலேரியா ஒழிப்புக் குழு, சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் அந்த மாகாணத்தின் வைத்தியசாலை பணிப்பாளர்கள் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

## Director, Jaffna College Institute of Technology Calls for the following courses

### Civil Draughtperson (one year)

Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English

**Course leads to:**

- Follow courses in level 5
- Register for drawings at local councils

### Computer Certificate Courses (3 - 4 months Part time)

- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

### Foundation in Information Technology (FIT) (6 months part time)

Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975 0212223382
Email: ejcitsltnet.lk.



## வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்

புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்

2022 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான

கடினமான வினாக்களை உள்ளடக்கி வெளிவரும் முதற்தர மாதிரி வினாப்பத்திரம்

வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தினர் பரீட்சைகளுக்கு, வினாத்தாள்களை தெளிவுபடுத்தும் வினாவிடை வகுப்புகளும் ஆரம்பம்

பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை

பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)

பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15

விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்

தரம் 3, தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 20.02.2022

விசேட வினாவிடை வகுப்புகள்

வினாவிடை வகுப்பு – சனிக்கிழமை

தரம் - 3 காலை 10.00 - 12.00, தரம் - 4 மதியம் 12.30 - 2.30, தரம் - 5 மாலை 3.00 - 5.30

முதலாவது வினாவிடை வகுப்பு 26.02.2022

பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

**அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807



## சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS

Reg.No:DS882

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706

உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247/ 077 614 0361

web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com

கிளை நிறுவனங்கள் :-

| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P: 021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.02.2022இல் வெளியிடப்பெற்றது.

# கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? கேள்வி எழுப்பும் காணாமற்போனோர் உறவுகள்!

உயிரோடில்லாதவர்களை கேட்டால் எப்படி தருவது என்று நீதி அமைச்சர் கேட்கின்றார் எனில் கையளிக்கப்பட்ட எமது உறவுகளிற்கு என்ன நடந்தது என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க உப செயலாளர் ரத்தீஸ்வரன் கவிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சியில் இன்று (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெறவுள்ள போராட்ட ஏற்பாடுகள் தொடர்பிலான ஊடக சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


ஊடகவியலாளர் சந்திப்பு வெள்ளிக் கிழமை பகல் கிளிநொச்சி மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது குடும்பங்களின் சங்கதலைவி கதிர்காமநாதன் கோகிலவாணி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இன்று (ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ள பேரணி டிப்போ சந்தியில் நிறைவடையவுள்ளதாகவும், அதில் அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

நீதி அமைச்சர் தெரிவித்த கருத்து கலங்க வைத்துள்ளதாகவும், 11 ஆண்டுகளுக்கு மேலாக எமது உறவுகளைத் தேடிப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்பதை வலியுறுத்தி முன்னெடுக்கப் படும் போராட்டத்தில் அனைவரும் பங்கு கொண்டு ஆதரவை வழங்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இதேவேளை அங்கு கருத்து தெரிவித்த வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க உப செயலாளர் ரத்தீஸ்வரன் கவிதா குறிப்பிடுகையில் -

இராணுவத்தினர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்களை சரணடையுமாறும், விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்வோம் எனவும் தெரிவித்த நிலையில் எனது கணவர் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். அவர் மாத்திரமல்லாது எனது கண் முன்பாக மூன்று பஸ்களில் இராணுவத்தினர் பலரை ஏற்றி சென்றனர்.




இந்த நிலையில் நீதி அமைச்சர் எமது உறவுகள் உயிருடன் இல்லை எனத் தெரிவித்துள்ளார். அப்படியாயின் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்களைக் கொலை செய்துவிட்டீர்களா? இலங்கை அரசாங்கத்திடம் எமக்கு நம்பிக்கை இல்லை.

அதனால்தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதியைக் கோரி நிற்கின்றோம். எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாபெரும் போராட்டத்துக்கு அனைத்துப் பொது அமைப்புக்கள், சங்கங்கள், பொதுமக்கள், அரசியல்வாதிகள் என அனைவரும் பங்குகொண்டு எமக்கு ஆதரவைத் தருவதன் ஊடாக சர்வதேசத்திடம் நீதியைப் பெற்றுத்தருவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

## சிவராத்திரி தினத்தில் மாதா சொரூபத்தை நிறுவி இந்துக்களிடத்தில் குரோதத்தை விதைக்காதீர்!

### சிவசேனை அமைப்பின் இணைத் தலைவர் தமிழ்த்திரு மாதவன் கோரிக்கை

சமத்துவமான வாழ்வியலைக் கொண்டு வாழ்ந்துவரும் இந்துக்களிடத்தில் குரோதத்தை விதைக்காதீர்கள் என்று சிவசேனை அமைப்பின் இணைத் தலைவர் தமிழ்த்திரு மாதவன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்-

மன்னார் திருக்கேதீச்சரத்தில் நடைபெறுகின்ற அட்டூழியங்கள் தொடர்பாக மன்னார் ஆஜரிடம் அன்பான வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றோம். திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி தினத்தில் நுழைவாயில் உடைக்கப்பட்டது.

தற்போது அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நேரத்திலே அங்கு மாதா சொரூபத்தை நிறுவி இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் விரோதங்களை ஏற்படுத்த விரும்புகின்றீர்களா?

இந்துக்கள் அனைத்துத் தெய்வங்களையும் மதிப்பவர்கள். கிறிஸ்தவர் வீடுகளில் இந்து கடவுளின் சிலைகள் இருக்காது. ஆனால் இந்துக்களின் இல்லங்களில் ஜேசுநாதரின் சிலை வைத்திருப்பார்கள். சைவர்கள் ஜேசுநாதரை மதிப்பவர்கள். நீங்கள் மன்னாரிலே தொடர்ச்சியாக வன்முறைகளைத் தூண்டுகின்றீர்களா என்பது எமக்குப் புரியவில்லை.

சமத்துவமான வாழ்வியலைக் கொண்டு




வாழ்ந்துவரும் இந்துக்களிடத்தில் குரோதத்தை விதைக்காதீர்கள். அதேபோன்று குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலைகள் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றார்கள். ஏன் இந்த திருக்கேதீச்சரம் தொடர்பாகக் கதைக்கவில்லை. ஏன் நீங்கள் கதைக்கவில்லை. சமத்துவத்தை உருவாக்குவது உங்களின் கடமையல்லவா.

இரண்டு குழுவிற்குமிடையில் குரோதத்தை வளர்த்து வாழவிரும்புகின்றீர்களா என்பது தெரியவில்லை. எதிர்வரும் நாளிகளில் சிவராத்திரி தினம் சிறப்பாக நடைபெறவுள்ளது. எனவே அனைத்து இந்துக்களும் உங்களது இல்லங்களில் நந்திக் கொடியை ஏற்றி உங்களது எதிர்ப்பை வெளிப்படுத்துங்கள். வடமாகாண ஆளுநரே, மத்திய அரசே, இந்திய உயர்ஸ்தானிகரே சைவர்களுக்கு நீதி வேண்டும். அதனைப் பெற்றுத்தாருங்கள். நாம் வன்முறையைத் தூண்டவில்லை எமக்கு நீதி வேண்டும். ஒற்றுமையே இந்த நாட்டின் பலம். - இவ்வாறு கூறியுள்ளார்.

## வெள்ளைநிற ஆந்தைக் குஞ்சுகள் புத்தளம் காட்டுப் பகுதியில் மீட்பு



புத்தளம் காட்டுப் பகுதியில் இருந்து அரிய வகை மூன்று வெள்ளை நிற ஆந்தைக் குஞ்சுகள் மீட்கப்பட்டுள்ளன என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாய் ஆந்தையின் பராமரிப்பில் இருந்த மேற்படி ஆந்தைக் குஞ்சுகள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் மரத்திலிருந்து கீழே விழுந்திருக்கலாம் என தாம் சந்தேகிக்கிறோம் எனவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கூறினர்.

இந்த ஆந்தைக் குஞ்சுகள் பம் ஒவெல் வகை இனத்தைச் சேர்ந்தவையாகும். மேற்படி, மீட்கப்பட்ட மூன்று ஆந்தைக் குஞ்சுகளும் ஆபத்தான நிலையில் இல்லை என்றும், அவை நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கின்றன எனவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்த ஆந்தைக் குஞ்சுகள் மேலதிக மருத்துவ தேவைகளுக்காக நிகவெரட்டிய வனவிலங்கு கால்நடை மருத்துவப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆந்தைக் குஞ்சுகள் தனித்து வாழக்கூடிய நிலையில் இப்போது இல்லை எனவும், அவை நிகவெரட்டிய வனவிலங்கு கால்நடை மருத்துவப் பிரிவில் வைக்கப்பட்டு, உரிய முறையில் பாதுகாப்பாக வளர்க்கப்பட்டு, அவை தனித்து வாழும் வயதை எட்டியதும், காட்டுப்பகுதியில் விடப்படும் என்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## சட்டவிரோதப் பொருள்களுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது!

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கண்ணகை அம்மன் ஆலய வீதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் வல்லல்பட்டையுடன் தங்கியிருந்த அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து ஆயிரத்து 700 கிராம் வல்லல் பட்டையை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸாருடன் இணைந்து விடுதியை முற்றுகையிட்டு ஒருவரைக் கைது செய்துள்ளனர்.



இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடையவர் எனவும், மட்டக்களப்பில் வல்லல்பட்டையை விற்பனை செய்வதற்காக அதன் மாதிரியுடன் வந்து விடுதியில் தங்கியிருந்துள்ளார் எனவும், பெரும்தொகையானவல்லல்பட்டை அளுத்கமவில் பதுக்கி வைத்திருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடி அமைச்சின் உயரதிகாரிகள் மூதூர் பகுதிக்கு விஜயம் செய்தனர்





மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசத்தில் அமைக்கப்படவிருக்கும் கடற்தொழிலாளர் இறங்கு துறையின் இடங்களைப் பார்வையிடுவதற்காக மீன்பிடி அமைச்சிலிருந்து உயர் அதிகாரிகள் குழு அப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது துறைமுகம் அமையப்பெறும் இடங்களை அதிகாரிகள் குழுவினர் பார்வையிட்டார்கள்.

இந்தச் செயற்பாடு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் ஏற்பாட்டில் நடைபெறுவதோடு, இதன்போது மீன்பிடி உயர் அதிகாரிகளுடன் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கலந்து கொண்டார்.

அதிகாரிகள் குழுவினர் பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் கடற்தொழிலாளர்களிடம் துறைமுகத்துக்கான சாதக பாதக விடயங்களைக் கேட்டறிந்தார்கள்.

# பாலர் பாடசாலை பிள்ளை போல் நீதி அமைச்சர் கருத்து வெளியீடு!

## அருட்தந்தை மா.சக்திவேல் காட்டம்



பாலர் பாடசாலை பிள்ளை போல் நீதி அமைச்சர் வெளியிடும் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

'நீதி அமைச்சர் அலி சப்றி கடந்த ஞாயிறு பத்திரிகை ஒன்றிற்கு வழங்கியிருந்த தனிப்பட்ட பேட்டியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலும், யுத்தம் தொடர்பிலும் உண்மைகளை வெளிப்படுத்தி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ள விடயத்தை சர்வதேச சமூகம் ஏற்றுச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு உட்படுத்த வேண்டும் என்பதோடு தமிழர்கள் மீது வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்பதோடு அவரின் கூற்றுத் தமிழர்களைத் தொடர் போராட்டத்துக்கே தள்ளியுள்ளது எனலாம்.

ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில், ஆட்சியாளர்களின் 'நீதிக்கான அணுகுதல்' வேலைத்திட்டம் மூலம் சர்வதேசத்தின் கண்களில் மண்ணைத்தூவ எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளது.

இதுவரை காலமும் ஆட்சியாளர்கள் வடக்கில் 'யுத்தம் நடைபெறவில்லை அங்கு நடந்தது மக்களை மீட்கும் மனிதாபிமான இராணுவ நடவடிக்கையே' எனக் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் நீதியமைச்சர் யுத்தம் நடைபெற்றது என்பதை உறுதியாக்கியுள்ளார்.

இராணுவத்தில் காணாமல் போனதைப் போன்று விடுதலைப் புலிகள் தரப்பிலும், தமிழர் தரப்பிலும் என பொதுமக்கள் காணாமலாக்கப்பட்டமையும் ஏற்றுக் கொள்கின்றார்.

ஆட்சியாளர்களால் முற்றாக அழிக்கப்பட்டதாகக் கூறும் விடுதலைப்புலிகளிடம் இனி விசாரணை நடத்த முடியாது. நீதி அமைச்சரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் யுத்தத்தைத் தொடர்ந்து படை அதிகாரிகள் தற்போது உயர் பதவிகளில் உள்ளதோடு அரசியல் வாதிகளாகவும் உள்ளனர். அவர்களை உயர் நிலையிலிருந்து நீக்கி விசாரிக்க வேண்டும்.

ஆனால் சிங்கள மக்கள் இராணுவத்தைக் குற்றவாளிகள் என்று ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதிலிருந்து உள்ளக விசாரணை என்பது ஏமாற்று நாடகம் என்பது தெளிவாகின்றது. இதனால் சர்வதேச விசாரணையே வேண்டும் என்பதை அவரின் கூற்று மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 'உங்கள் உதவிகளும், சலுகைகளும், மரண சான்றிதழ்களும் எங்கள் உயிரான உறவுகளின் உயிருக்கு ஈடாகுமா? அவர்களுக்கு என்ன நடந்தது? மரண சான்றிதழ் வழங்க முன்வரும் நீங்கள் அவர்கள் மரணம் அடைந்தவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் மரணத்துக்கு அல்லது கொலைகளுக்கு யார் காரணம்? எனக் கேட்பதை நீதியமைச்சர் அரசியல் எனக் கூறி ஆட்சியாளர்களின் அரசியலை மறைக்க முயல்கின்றார். உங்கள் சுதந்திர காலத்திலிருந்து இன அழிப்பையும் அதனையே 30 வருட காலமாக யுத்தமாகவும் நடத்தியதும் காணாமலாக்கப்பட்டதும் பேரினவாத அரசியல் காரணமாகவே. தமிழ்த் தலைமைகளோடும், இயக்கங்களோடும் எத்தனையோ கட்ட பேச்சுகள், ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் இவற்றையெல்லாம் கிழித்தெறிந்து இன அழிப்பைத் தொடர்ந்ததோடு ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் 13 பிளஸ் என்று சர்வதேசத்தை ஏமாற்றியது யார்? இவற்றையெல்லாம் மறந்து பாலர் பாடசாலை பிள்ளை போல் நீதி அமைச்சர் வெளியிடும் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

கல்விமான்களும் புத்திஜீவிகளும் நாட்டை விட்டு வெளியேறியமைக்கு அடக்குமுறை இன அழிப்பு யுத்தமே காரணம். அவ்வாறு வெளியேறியோர் முன்வைக்கும் நீதிக்கான கோரிக்கையை 'கூப்பாடு ,கூச்சல்' என்றும் 'கத்திக் கொண்டிருக்கின்றார்கள்' என்றும் அவமானப்படுத்தியுள்ளமை ஒட்டுமொத்த தமிழர்களையும் அவமானப்படுத்தியதாகவே கொள்ளல் வேண்டும்.

நீதி அமைச்சரின் செவ்வி தமிழர்களைப் பலமான போராட்டத்துக்குத் தள்ளியுள்ளது. இதனோடு நிதியமைச்சர் வட கொரியாவிலிருந்து யுத்தத்துக்கான ஆயுதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன என்னும் கூற்றையும் அடிப்படையாக வைத்து ஐ.நா. மனித உரிமைப் பேரவை சர்வதேச சக்திகளின் அரசியலுக்குள் சிக்கி விடாது தொடர்ந்து இன அழிப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுக் கொடுக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு உட்படுத்தவும் , சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்தவும் அரசியல் தீர்வுக்கு வழி வகுக்க வேண்டும். – என்றுள்ளது.

## புத்தாக்க அரங்க இயக்கத்தின் வாராந்த அரங்கக் கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கத்தால் மெய்நிகர் இணைய வழியில் நடத்தப்படும் வாராந்த அரங்கக் கதையாடல் 84 ஆவது நிகழ்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் எஸ்.ரி. அருள் குமரனின் அரங்கப் பார்வைகள் நூல் அறிமுகம் நிகழ்வு இடம்பெறவுள்ளது. அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் பண்டிதர் செ.த.குமரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக க.ஆதவன் நாடகச் செயற்பாட்டாளர் டென்மார்க், வாழ்த்துரை வாசுகி வாகை இசைத் தமிழ் பாடகி நோர்வே, வெளியீட்டுரையை நாடகத்துறை ஆசிரியர் க.கஜேந்திரன், மதிப்பீட்டுரையை எழுத்தாளர் உடுவிலூர் கலா, ஏற்புரையை நூலாசிரியர் எஸ்.ரி.அருள் குமரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி 6473348261 கடவுச் சொல் itm ஊடாக இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

## இலங்கை – ஆஸ்திரேலியாவிற்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து அவதானம்!

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம், பிராந்திய பாதுகாப்பு மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை-ஆஸ்திரேலிய இருதரப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆஸ்திரேலிய பாதுகாப்பு திணைக்களத்தின் உலக விவகாரப் பிரிவின் உதவி செயலாளர் டொம் மெனடு, பாதுகாப்பு செயலா ளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதன் போதே இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி தலைமையிலான ஆஸ்திரேலிய தூதுக் குழுவினரை பாதுகாப்புச் செயலாளர் வரவேற்றார்.



இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம், பிராந்திய பாதுகாப்பு மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பின் நினைவாக ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவினருக்கு பாதுகாப்புச் செயலாளர் நினைவுச் சின்னங்களை வழங்கி வைத்தார்.

கொவிட்- 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடைமுறைகளுக்கமைய இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார, ஆஸ்திரேலிய உயர் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் இயன் கேன் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## பாண் ஒன்றின் விலை 400 ரூபா ஆகலாம்!

### பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

இலங்கையில் பாணின் விலை 400 ரூபாவாகக் கூட அதிகரிக்கலாம் என பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் கோதுமை மாவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டிலுள்ள பேக்கரிகளுக்குத் தேவையான மாவில் 75 வீதம் மாத்திரமே பெறப்படுகிறது. அதனால் பேக்கரித் தொழில் வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதன் காரணமாக பேக்கரி உற்பத்திகள் குறைக்கப்பட்டுள்ளன. அதே வேளை பேக்கரி உரிமையாளர்கள் அவற்றின் விலையை அதிகரிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இன்று ஒரு இறாத்தல் பாண் 100 ரூபாவுக்கு விற்கப்பட்டாலும், எதிர்காலத்தில் அதனை 300, 400 ரூபாவுக்குக் கூட வாங்க முடியாது. இதன் காரணமாக கோதுமை மாவுக்கான கட்டுப்பாட்டு விலையை விரைவில் அமுல்படுத்தி மாவின் விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தலையிட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

## கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் கால்நடை வைத்தியர்களை சந்தித்த இராஜாங்க அமைச்சர்!

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கால்நடை வைத்தியர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பயிற்சி நிலையத்தில் இந்தக் கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது, இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் எதிர்பார்ப்பு நாட்டில் பால் மற்றும் முட்டையில் தன்னிறைவு காண வேண்டும் என்பது அதேபோன்று நிதியமைச்சர் பால் உற்பத்தி தன்னிறைவு காண வேண்டும் என்பதற்காக 100கோடி ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், கால்நடை வைத்தியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோயாளர் அதிகரிப்பு!



## அபாயம் உள்ளதென்கிறார் வைத்தியர் சுகுணன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழு நோயாளர்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் விசேட நடவடிக் கைகளை சுகாதாரத் துறையினர் முன் னெடுக்கவுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களாக கொவிட் நிலைமை மிக மோசமாக அனுபவித்து தற்போது திருப்திகரமான நிலைக்கு வந்தி ருக்கிறோம் என்று கூறமுடிகிறது.

இதுவரை 23ஆயிரம்தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டமையுடன் 307 தொற்றாளர்கள் மரணித்துள்ளனர் என மட்டக்களப்பு மாவட்டத்தில் பதியப்பட்டி ருக்கின்றது.

கடந்த காலங்களில் டெல்டா,அல்பா போன்ற பல வேரியன்ட்கள் அடையாளப் படுத்தப்பட்டு வந்திருந்தன. தற்போது ஒமிக்ரோன் தொற்று காணப்படுகிறது. இந்தநிலையில் நாம் அடுத்தகட்ட நகர் வுக்குள் நுழைந்துகொண்டு இருக்கின் றோம்.

பொருளாதார, சமூக பிறழ்வுகளில் இருந்து வெளிவரவேண்டிய தேவை இருக்கின்றது. இதனால் சுகாதார வழி முறைகளை இறுக்கமாகக் கடைப்பிடித்து தடுப்பூசிகளைப் பெற்று நிரந்தரத் தீர்வை நோக்கி செல்ல வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் கட்டத் தடுப்பூசிகள் 97 வீதமானவர்க ளுக்கும் இரண்டாம்கட்ட தடுப்பூசிகள் 87 வீதமானவர்களுக்கும் வழங்கியிருக் கின்றோம். இது இலங்கையின் முதல் ஐந்து மாவட்டங்களுக்குள் மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகிறது.

மூன்றாம்கட்டத் தடுப்பூசி வழங்கலில் மிகுந்த கீழ் மட்டத்தில் காணப்படுகிறது. அதாவது 25 வீதமானவர்களே பெற்றி ருக்கின்றமையுடன் இது இலங்கையின் கடைசி 5 மாவட்டங்களில் ஓர் இடத்தை மட்டக்களப்பு மாவட்டம் இடம்பெறு கின்றது.

இதனால் இராணுவத்தினரின் சுகா தாரத் துறையினரும் தற்போது தடுப்பூசி ஏற்றும்களத்தில் இறங்கி உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட் டத்தை பொறுத்தவரையில் இந்தக் காலத்தில் மழை வீழ்ச்சி ஏற்படும் காலம் இந்தக் காலத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும். கடந்த வருடம் 2, 800 நோயாளிகள் அடையாளம் காணப் பட்டுள்ளதுடன் 4 பேர் உயிரிழந்துள் ளனர்.

ஆனால், இந்த வருடம் மிகக் குறை வாக பதிவாகியுள்ளது. இதுவரை ஜன வரி, பெப்ரவரி மாதத்துக்குள் 75 நோயா ளிகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின் றார்கள். எதுவிதமான மரணங்களும் டெங்கினால் பதிவுசெய்யப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டம் தற்பொழுது புதுவிதமான ஓர் அபாயத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது அதாவது தொழுநோய் தொடர்பான பிரச்சினை ஏற்பட்டு இருக்கின்றது.

கடந்த வருடத்தில் 731 நோயாளர்கள் இலங்கை பூராக அடையாளப்படுத் தப்பட்டு இருக்கின்றார்கள். இதனுள் மட் டக்களப்பு மாவட்டத்தில் 110 நோயாளிகள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின் றார்கள்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 30 நோயாளிகள் அடையாளப்படுத் தப் பட்டு இருக்கிறார்கள் இவற்றுள் 18 நோயாளிகள் மட்டக்களப்பிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

சுகாதாரத் துறையினர் இதனை ஒரு பாரியபிரச்சினையாக அடையாளப்படுத்தி இருக்கின்றோம். கொவிட் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் நிறைவுற்றதன் பின்னர் தோல் நோயை முகாமைத்துவம் செய்வ தற்கான செயற்பாடுகளை நாங்கள் அதாவது விழிப்புணர்வு ஏற்படுத்தும் வித மாக பாரிய வேலைத்திட்டத்தை முன் னெடுக்க இருக்கின்றோம்.

தொழுநோயின் சிகிச்சை சம்பந்தப் பட்ட விடயத்தில் இலங்கையில் காணப் படுகின்ற தொழுநோய் வைத்தியசா லையில் ஒன்றாக மாந்தீவு வைத்திய சாலை காணப்படுகின்றது. தற்போதைய நிலைமையில் தொழு நோயாளர்களை வீட்டில் வைத்து பராமரிக்கும் முறையே காணப்படுகின்றது.

அதாவது தனிமைப்படுத்தி பராம ரிப்பின்றி என்ற விடயம் ஒரு காலத்தில் காணப்பட்டாலும் தற்போது காணப்படு வதில்லை. ஆகவே, அதனை நாங்கள் வைத்தியசாலையை மீண்டும் புனர மைத்து கொண்டு செல்லும் திட்டம் இப் போது இல்லை.

தொழு நோயாளர்கள் அந்த வைத்தி யசாலையில் காணப்பட்டதன் மூலம் தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழு நோய்த் தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என சந்தேகம் பலரிடம் காணப்படுகின் றது. ஆகவே, எதிர்காலத்தில் நாங்கள் இதனை கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடன் இணைந்து சில ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு எதிர் பார்த்து இருக்கின்றோம்.

# சமூக அக்கறையும் தொலை தூரப் பார்வையும் ஊடகங்களுக்குக் கட்டாயம் இருக்கவேண்டும்



## அமைச்சர் டக்ளஸ் அட்வைஸ்

போரியலின் பக்கம் கவனம் செலுத்திய ஊடகங்கள் போரால் வதைபட்ட மக்களின் வாழ்வியல் பற்றியும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தன்னால் ஆரம்பத்திலிருந்து வலி யுறுத்தப்பட்டு வருகின்ற 13ஆம் திருத்தச் சட்டத்தை வலுப்படுத்தி வந்திருந்தால் பாரிய அழிவுக ளைத் தடுத்திருக்க முடியும் என வும் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் வெளியீட் டுப் பணியகத்தின் கிளைக் காரி- யாலயத்தை யாழ். மாவட்ட செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவி யலாளர்களுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

வெகுஜன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும உட்பட அதி திகள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் கருத்துத் தெரி வித்த கடற்றொழில் அமைச்சர், யாழ் மாவட்ட மக்களுக்கும் ஊடக வியலாளர்களுக்கும் பயனளிக் கும் வகையில் தகவல் வெளியீட் டுப் பணியகத்தை ஆரம்பித்து வைத்தமைக்காக வெகுஜன ஊட கத்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், இனங்களுக்கிடை யிலான நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழ் மக் களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண் டும் என்பதிலும் அர்த்த பூர்வமான செயற்பாடு களை வெளிப்படுத்துகின்ற அமைச்சர் டலஸ் அழகப் பெரும, 2013ஆம் ஆண்டு மாத் தறை மாவட்டத்தில் சேர் பொன் னம்பலம் மாவத்தை என்று வீதிக்கு பெயர் சூட்டியதையும் நினைவுபடுத்தினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா-

கரை காண விரும்பும் கப்ப லுக்கு ஒளி காட்டும் கலங்கரை விளக்காக ஊடகங்கள் திகழ வேண்டும்! நிமிர்ந்தெழ விரும்பும் மக்களுக்கு அறிவூட்டும் கல்வி யாக ஊடகங்கள் இருக்க வேண் டும். அரசியல் தலைமைகளின் கருத்துக்களை மக்களிடம் எடுத்து செல்வது போல், மக்களின் ஆழ்மன விருப்பங்களையும் கண்டறிந்து அரசியல் தலைமை களிடம் சொல்ல வேண்டும். எங் கெல்லாம் மக்கள் சகல உரிமை களும்பெற்றுவாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் ஊடகங்களும் மக் களை வழி நடத்திச் சென்றிருக் கின்றன.

போரியலின் பக்கம் கவனம் செலுத்திய ஊடகங்கள், போரிய லில் வதைபட்ட மக்களின் வாழ்வி யலின் மீதும் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டும். துப்பாக்கி முனைகளை விடவும் பேனா முனைகளே வலிமை யானவை.

ஆகவே, ஊடகவியலாளர் களே வலிமைமிக்க போராளிகள், அழிவாயுதங்களை ஏந்திய காலங்கள் முடிந்து விட்டன, இன்றுநீங்கள் அறிவாயுதங்களை ஏந்த வேண்டும். ஊடகமும் அறிவாயுதங்களில் ஒன்று. தமிழ் மக்களின் உரிமையை நோக்கிய பயணத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் நல்லதோர் ஆரம்பம், இதை நாம் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வந்த போது எமக்குப் பக்க பலமாக சகலரும் இருந்தி ருந்தால் இத்தனை அழிவுகள் இங்கு நடந்திருக்காது. காலம் கடந்தாவது இன்று எமது யதார்த்த வழிமுறைக்கு பலரும் வந்தி ருப்பதை நான் வரவேற்கின்றேன்.

ஆனாலும், இன்று அதனை ஆதரிக்கின்றவர்களும் எதிர்க்கின் றவர்களும் உண்மையை மறைத்து பொய்யான அரசியல் நலன்களுக்காகவே அதனைச் செய்கின்றனர்.

அது எமது மக்களுக்கு விமோ சனத்தைத் தரப்போவதில்லை. இனி நாம் என்ன செய்ய வேண்டும்? எங்கிருந்து தொடங்க வேண்டும்? இவைகள் தொடர் பாக ஆழ்மன உணர்வுகளும் உறுதியும் சகலருக்கு இருக்க வேண்டும். அடுத்து வரும் சந்த திக்கு நாம் எதை விட்டு செல்லப் போகின்றோம்? எதை உரு வாக்கிக் கொடுக்கப் போகிறோம்? இவை கள் தொடர்பில் தொலை தூர பார்வையும் சமூக அக்கறையும் ஊடகங்களுக்கும் இருக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களையே நாம் விரும் புகின்றோம். அதை நோக்கியே உழைத்து வரு கின்றோம். - என்று தெரிவித் தார்.

# வவுனியா பொலிஸாரால் 20 வயது இளைஞன் கைது

வவுனியா, பெப். 20

வவுனியா, சகாயமாதா புரம் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, குருமன்காடு நகரசபை விடுதி யில் உள்ள வீடு ஒன்றில் அண்மையில் 3 பவுண் நகை திருடப்பட்டிருந்தது. அத்துடன் வைரவப்புளியங் குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலும் 2 பவுண் நகை திருடப்பட்டிருந்தது.

வீடு புகுந்து இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந் தது. மேற்படி முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸ்நிலையப்பொறுப்பதி காரி ஐ.ஏ.ஏ.எஸ்.ஜயக்கொடி யின் வழிகாட்டலில் சப் இன்ஸ் பெர்டர் கியான் தலை மையில் பொலிஸ் சாஜன்ட் டுகளான திஸாநாயக்க, திலீப், விக்கிரமசூரிய, பொலிஸ் கொன்ஸ்தாபிள் தயாளன் உள்ளடங்கிய குழுவினர் துரித விசாரணைகளை முன் னெடுத்திருந்தனர். இதனை டிப்படையில் மேற்படி இரு திருட்டுச் சம்பவம் தொடர்பில் வவுனியா, சகாயமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், குறித்த இளைஞரிடம் முன் னெடுக்கப்பட்ட விசாரணை யில் திருடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளன எனவும், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இந்த வருட இறுதிக்குள் நடக்கும்

இந்த வருடத்தின் இறுதிக்குள் தேர்தல் நடை பெறுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி புஞ்சிஹேவா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது பெரும்பாலும் உள்ளூராட்சி சபைத் தேர்த லாகவே இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 286**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**723.சமஷ்டி சுயாட்சி என்பவை பற்றி சுந்தரலிங்கத்தின் கருத்துக்கள் எவை?**

ஈழத்தமிழ் மக்களது தேர்வு எது என இப்படியாகக் கேட்டார் அவர்:-

1. நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எதிர்மனசிங்கம் போல அவர்கள் சிங்கள அரசின் கீழ் இருக்க விரும்புகிறார்களா?

2. திரு.செல்வநாயகம் கூறுகின்ற மாதிரி சிங்கள அரசின் கீழ் இருக்க விரும்புகிறார்களா?

3. தான் கூறுகிற மாதிரி தனித் தமிழ் அரசை–தனிநாட்டை–விரும்புகிறார்களா?

சிங்கள மக்களின் இணக்கமும் ஒற்றுமையுமின்றி தனி அரசு அடையப்படக் கூடியதே. முந்திய வருடம்தான் எங்களது வட பகுதி அளவான சைப்பிரஸ் தீவு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. சிங்களவரோடு இவை பற்றிப் பேசுவதிலும் பார்க்க வேறு வழிகளில் இயங்குவதுதான் சிறந்தது.

தமிழ் மக்களின் தீர்மானம் எதுவாக இருந்தாலும் அது பிரிவினைகள் அற்ற, நம்பிக்கையான தலைவர்களிடம் விடப்பட வேண்டும். தத்தளிப்பிலும் சஞ்சலத்திலும் தள்ளாடும் ஒரு தேசம் தனது வாழ்வாதாரங்களையும் தன்மானங்களையும் இழக்கும் நிலையிலிருக்கும் போது பிரிவினைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் தளபதிகள் மூலமாக அவற்றை வெற்றி கொண்டு விட முடியாது எனத் தெரிவித்தார்.

இணக்கத்திலேயே இருக்க விரும்பியதாலும், அது சுகம் என்ற எண்ணியதாலும், தமிழ் மக்களின் அரசியல் செல்வநாயகத்தை வைத்தே நடந்தது. அவை பற்றி அபிப்பிராயம் தந்தபோது –

"தமிழரசுக் கட்சி கேட்பது சுயாட்சியான தமிழ்ப் பிரதேசங்கள். இவை சமஷ்டியின் அடிப்படையில் இணைந்த இருக்கும் Autonomous Tamil Linguistic State within the frame work of a federal union. ஆனால் தமிழரல்லாத எந்த ஒரு தலைவரும், எந்த ஓர் அரசியல் கட்சியும் – இலங்கை சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எந்த ஒன்றுமே – இதனை ஆதரிக்கவில்லை. பதிலுக்கு இதனைக் கண்டிக்கிறார்கள். இனவாதம் என்கிறார்கள். நான் கூறியது போல் சமஷ்டி என்பது சம்மதத்தின் அடிப்படையிலானது. சம்மதமும் இல்லாமல் அங்கு கூட்டு இருக்காது. ஆகவே சமஷ்டி அமையாது. சிங்கள தரப்பிலிருந்து சமஷ்டிக்கான எந்தச் சம்மதமும் வந்ததில்லை. அதைப் பேசுவோம் என்று கூட யாரும் அதனை எடுப்பதில்லை.

"ஆகவே இனியும் காலம் கடத்தாமல் தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களும் சமஷ்டி என்ற – யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட கனவான – சமஷ்டியை இலங்கையின் அரசியற் பரப்புரைகளின் தன்மைகள் கருதி கைவிட வேண்டும். எங்களால் சிங்கள மக்களின் அனுசரணையும் சம்மதமும் இன்றி சில சமயங்களில் ஒரு சமஷ்டியைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு சிங்கள அரசாங்கத்தின் சம்மதம் இருந்தாலும் இது இன்னுமொரு அரசாங்கத்தால் நிராகரிக்கப்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு? 1944 இல் சிங்களம், தமிழ் இரண்டு உத்தியோக மொழிகளாக சம அந்தஸ்தில் இருக்கும் என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம், பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியாலும் பண்டாரநாயக்காவாலும் 1955 இல் நிராகரிக்கப்படவில்லையா? " – அவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது அவரது வாதம்.

இவற்றை 1976 வரை தமிழ்த் தலைவர்கள் முன்னெடுக்கவில்லை. அதன் பின்னும் கூட நாடாளுமன்றத்தில் பேசியே சம்மதம் பெறுவதில் இருந்தார்கள். சந்திரிகா ஏற்றுக் கொண்டதை – நோர்வேயின் சமாதானத்தில் இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்ட சமஷ்டி முறையை – ஜனாதிபதி மஹிந்த நிராகரித்தார். இப்பொழுதோ ஜனாதிபதி கோட்டபாய தமிழ் மக்களுக்கு எதுவித இனப் பிரச்சினையும் இல்லை, பயங்கரவாதமே அவர்களிடையே இருந்தது, அது அழிக்கப்பட்டாயிற்று, அதுவே தீர்வாகவும் அமைகிறது என்கிறார்.

**724.சுந்தரலிங்கத்தின் அரசியல் சொன்ன சொல்லும் செய்திகள் என்ன?**

ஒரு தனி மனிதனின் அல்லது ஒரு மனிதக் குழுமத்தின் மனித உரிமைகளும் வாழ்வாதாரங்களும் பறிக்கப்பட்டு அவனோ அவர்களோ அட்டூழியங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் அகப்படும்போது வேறு ஏதும் வழிகளின்றி அவர்கள் தங்களின் உரிமைகளுக்காகவும் வாழ்வாதாரங்களுக்காகவும் கிளர்ந்தெழுந்து, எவ்வகையிலும் போராடலாம் என்ற சர்வதேச நீதியை வெளிப்படையாகவே பேசி, தமிழ் மக்களின் அந்த நியாயத்தை முன் வைத்தார். அப்பொழுது தனி சிங்களச் சட்டம் நிறைவேறி, 1958 கலவரங்கள் நடந்திருந்தன. சோல்பரியன் குடியரசு சட்டத்தின் 29 ஆம் சரத்தே மீறப்பட்டு சிறுபான்மையினரின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருந்தது.

அந்த நாள்களிலேயே வன்முறைதான் வழி என்றில்லாமல், இந்த விடயங்களை அட்டூழியங்களாகவும், சிங்களப் பேரினவாதத்தின் நோக்கங்களாகவும், மனோபாவங்களுமாக சுந்தரலிங்கம் போன்றோரின் தொடர்புகளோடு பிரித்தானியா மூலம் ஐக்கிய நாடுகள் சபைக்கு தமிழ்த் தலைவர்கள் சமர்ப்பித்திருந்தால் இலங்கை அப்பொழுதிலிருந்தே சர்வதேச நாடுகளுடன் ஈடுபட வேண்டியிருந்திருக்கும் என்ற அபிப்பிராயம் உண்டு. அப்படியான சமர்ப்பணங்களோடு அச்சுறுத்தல்களுக்கு நேரடியாக முகம் கொடுப்பது என்ற அவரது அடங்காத் தன்மை சிலவற்றைத் தோற்றுவித்திருக்கலாம்.



சுந்தரலிங்கம் குடும்பத்தினர்

எதுவானாலும், அதன் பின் நடந்த எவ்வளவோ அட்டூழியங்களால் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு அது நியாயமென்பதிலும் சர்வதேச ஆதரவுகள் இருந்தன. பின்னர் இந்தியா கூட அதனை ஏற்றுக் கொண்டு பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுத் தீர்வை முன்னெடுத்தது.

அப்படியான நியாயமான ஆதரவு பெற்ற விடுதலைப் போராட்டம் ஏன், எதற்காக சிதைந்தது? அன்றில் சிதைக்கப்பட்டது? படிப்படியாக ஏன் பயங்கரவாதம் என்ற வலைப்பின்னலுக்குள் அது அடைப்பட்டது? – என்பவற்றை நாம் உற்றுநோக்க வேண்டும்.

(வளரும்)




வவுனியாக் காவலனாக சுந்தரலிங்கம்

# வவுனியா கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரன் சு.கவுக்குப் பாய்கிறார்?

## மைத்திரியுடன் தனியான சந்திப்பாம்



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகரசபை உறுப்பினர் ஒருவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணையவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

இந்நிலையில், வவுனியாவிற்கு விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகரசபை உறுப்பினர் க.சுமந்திரன் பிரத்தியேக இடமொன்றில் சந்தித்துக் கலந்துரையாடினார் எனத் தெரிய வருகின்றது. விரைவில், அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையவுள்ளார் என சுதந்திரக்கட்சிவட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாகநகரசபைஉறுப்பினர் சுமந்திரனிடம் வினவிய போது –

வவுனியா மாவட்ட விவசாய சம்மேளத்தின் உப தலைவராக உள்ளேன். எமது சம்மேளனம் சார்பான பத்துப் பேரைச் சந்திப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2.30 மணிக்கு நேரம் ஒதுக்கியிருந்தார். இந்நிலையில் நாங்கள்ஐந்து பேர் மட்டும் சென்று சந்தித்து எமது விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தோம்.

நான் தமிழ் தேசிய கூட்டமைப்பை பிரதிநிதிப்படுத்தும் நகரசபை உறுப்பினர் என்றாலும், வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதிப்படுத்தும் ஒரு விவசாய சம்மேளத்தின் உப தலைவர் என்ற ரீதியில் மட்டுமே முன்னாள் ஜனாதிபதியை சந்தித்தேனே தவிர, சுதந்திர கட்சியில் இணைவதற்காக செல்லவில்லை – என தெரிவித்திருந்தார். (உ– 100)

# பயங்கரவாத சட்டத்தின் மூலம் அநீதி பெரும்பாலும் நடந்தே இருக்கின்றது

## கலாநிதி சுரேன் ராகவன் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, பெப். 20

பயங்கரவாத சட்டத்தின் மூலம் அதிக நேரங்களில் அநீதி நடந்திருக்கின்றது என்பதை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் சர்வதேசத் தரப்புகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னித் தொகுதித் தலைவருமான கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் இருந்த கஷ்டமான ஒரு நிலையில் பயங்கரவாத சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில் பங்கரவாதத்திற்கு எதிராக அது பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அதிக நேரங்களில் அநீதி நடந்திருக்கின்றது என்பதை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் சர்வதேசமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

பயங்கரவாதம்முற்றாகஅழிக்கப்பட்டு விட்டதாக சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமாயின் அந்த சட்டத்தை நாங்கள் முற்றாக நீக்க வேண்டும். எனினும், 2019 ஆம் ஆண்டு பயங்கரவாதம் மீண்டும்



தலை தூக்கியது. உதிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது. ஆகவே பயங்கரவாதத்திற்கு எதிராக நாட்டில் சட்டங்கள் இருப்பது பிரச்சுனையல்ல. ஆனால் அந்த சட்டங்கள் சாதாரண மக்களை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். ஆகையினால் அந்த சட்டத்தை சீர்திருத்தி நாட்டின் இறைமையை சரியான விதத்தில் பாதுகாத்துக் கொண்டு, இலங்கையில் மத ரீதியான, இன ரீதியான பயங்கரவாதம் இருக்குமாயின் அதற்கு எதிராக அதனை பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

இதற்கு சமாந்தரமாக இருக்கின்ற சர்வதேச சட்டங்களை பரிசீலித்து, இலங்கையின் பாதுகாப்புக்கும், மக்களின் பாதுகாப்புக்கும் ஏற்ற வகையில் பயங்கரவாத சட்டத்தை அமைக்க வேண்டும் என்பது தான் எனது கருத்தாகவுள்ளது. – எனத் தெரிவித்தார். (உ–100)



# வவுனியாவில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் தராது வெளியேறிச் சென்ற மைத்திரிபால

## தள்ளுமுள்ளில் ஈடுபட்டுக் கூட்டிச் சென்றனர் மெய்பாதுகாவலர்கள்



வவுனியாவில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்காது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் வெளியேறிச் சென்றுள்ளார்.

இதன்போது அவரை மறித்துக் கேள்வி கேட்க முற்பட்ட வவுனியா ஊடகவியலாளர்களை முன்னாள் ஜனாதிபதியின் மெய்பாதுகாவலர்கள் வழிமறித்துத் தள்ளு முள்ளில் ஈடுபட்டனர்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாநாட்டிற்கு வருகை தந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிகழ்வு முடிவடைந்து மேடையில் இருந்து இறங்கி வெளியேறிச் சென்ற போது தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வி கேடக முற்பட்டனர்.

இதன்போது "மேடையில் பேசி விட்டேன்" எனக் கூறிவிட்டு, கேள்விக்கு பதிலளிக்காது அங்கிருந்து அவர் நகர முற்பட்ட போது ஊடகவியலாளர்கள் சுற்றி வர வந்து கேள்வி கேட்டனர். இதன்போது அவரது மெய்பாதுகாவலர்கள் ஊடகவியலாளர்களை தமது கைகளால் தள்ளி, தள்ளு முள்ளில் ஈடுபட்டமையுடன், முன்னாள் ஜனாதிபதியை அங்கிருந்து வெளியேற்றி அழைத்து சென்றனர்.

முன்னாள் ஜனாதிபதியின் பின் வந்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர முன்னாள் ஜனாதிபதி அவரசரமாக யாழ் செல்கிறார் எனத் தெரிவித்து ஊடகவியலார்களின் கேள்விகளுக்கு தான் பதில் அளிப்பார் எனத் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட தலைவருமான சுரேன் ராவகன் அவர்களிடம் ஊடகவியலாளர் கேட்டபோது, "கட்சியினுடைய செயலாளர் தயாசிறி ஜயசேகர நிற்கின்றார். அவர் கட்சியின் கருத்தை வெளியிடுவார். முன்னாள் ஜனாதிபதி, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டு எப்போதும் தீர்ப்பவர். அவர் ஏன. அவசரமாகப் புறப்பட்டுப் போனார் என நான் அறியவில்லை. ஒரு வேளை அவசர தேவை ஏதுன் இருந்ததோ தெரியவில்லை. ஆனால் கட்சியின் கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை கட்சியின் பொது செயலாளர் தயாசிறி ஜயசேகர அவர்களே வழங்குவது நடைமுறையில் உள்ளது. அவர் கூறுவார்" எனத் தெரிவித்தார்.

# ஐந்து மாத குழந்தையோடு தலைமறைவான கணவன்!

## இளவாலையில் சம்பவம்



இளவாலையில் 5 மாத குழந்தையோடு தலைமறைவான கணவனைத் தேடி மனைவி இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கணவன் – மனைவிக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கணவன் 5 மாதப் பிள்ளையை தூக்கிச் சென்றமை தொடர்பில் இளவாலைப் பொலிஸில் முறையிடப்பட்டதனையடுத்து பொலிஸார் மல்லாகம் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இதடையடுத்து கணவனை குழந்தையோடு நீதிமன்றில் முற்படுமாறு கோரிய தற்கிணங்க பிள்ளையின்றி நீதிமன்றில் முன்னிலையான கணவரிடம் 5 மாதப் பாலூட்டும் குழந்தை என்பதற்கிணங்க தாயாரிடம் குழந்தையை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் இடைக்கால கட்டளை வழங்கியது. இந்நிலையில் குழந்தையைத் தாயாரிடம் ஒப்படைக்காது கணவர் குழந்தையோடு நேற்றைய தினம் தலைமறைவாகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து மனைவி இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். தாயார் குழந்தையை பல இடங்களிலும் தேடி அலைகின்றார் என்றும் கூறப்பட்டது.

# தமிழர் உரிமைக் கண்காணிப்பகத்தின் 2ஆவது மக்கள் அமர்வு மன்னார் நகரில்

## பாதிப்புற்ற மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



(மன்னார் நிருபர்)

தமிழர் உரிமை கண்காணிப்பகத்தின் இரண்டாவது மக்கள் அமர்வு நேற்றைய தினம் சனிக்கிழமை காலை மன்னார் கீரி ஞானோதயா மண்டபத்தில் சட்டத்தரணி ரி.வினோதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மன்னார் பள்ளிமுனை பகுதியில் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணி தொடர்பான பிரச்சினை மற்றும் கனிய மணல் அகழ்வு காரணமாக ஏற்படவுள்ள சுற்றுச் சூழல் பாதிப்பு மற்றும் கழிவு மீன்களை மக்கள் வசிக்கும் பகுதிகளில் வீசுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதே நேரம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயம் மற் றும் போர் குற்ற உள்ளக பொறிமுறை விசாரணை தொடர்பாகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அரசாங்கம் வழங்குவதாக தெரிவித்த மரண சான்றிதழ் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் மக்களால் எழுப்பப்பட்ட பல்வேறு மனித உரிமை சார்ந்த கேள்விகளுக்கு சட்ட ஆலோசனைகள், பதில்களும் வழங்கப்பட்டன.

இந்த செயலமர்வில் சட்டத்தரணி சுகாஷ். சட்டத்தரணி டினேசன், சட்டத்தரணி அன்ரனி றொமேல்சன், சட்டத்தரணி ரூபன்ராஜ் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மனித உரிமை மீறல் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

